# சோழ மாதேவி

## சரித்திர நாடக நூல்

ஆசிரியர்,

**வித்துவான் வி. நரசிம்மன், B. O. L.**

**புத்தக நிலையம்**

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

முதற் பதிப்பு—1951

— விலை —
ரூ. 2—0—0

உரிமை
பதிப்பாளருடையது

PRINTED AT THE SUNDAY TIMES PRESS, MADRAS-6.

# முன்னுரை

"**சோழ மாதேவி**" என்னும் இந் நாடக நூல் **சளுக்க விக்கிரமாதித்தன் VI** என்னும் அரசனது வரலாற்றை விளக்குவதாகும். விக்கிரமனது வரலாற்றையே விரிவாகக் கூறும் இந் நாடகத்திற்குச் "சோழ மாதேவி" என்னும் மகுடஞ் சூட்டியிருக்கிறது. ஒப்பற்ற வீரனாக விளங்கிய விக்கிரமன் மாதேவியின் பாற் கொண்ட காதலால் தன் கடமையை மறந்தான். பகைமை பாராட்ட வேண்டிய இடத்து நட்புரிமை பாராட்டிப் பலவாறும் சோழர்க் குதவுகிறான். சளுக்க மன்னர் சோழர் மேற் கொண்டிருந்த பகைமையை ஒருவாறு மாதேவி மறையச் செய்கிறாள். ஆதலின் சோழ மாதேவியின் பெயரால் இந் நூல் மகுடமேற்றது.

இவ் வரலாற்றை நாடக உருவில் அமைப்பின் நன்று எனத் தமிழன்பர் பலர் வற்புறுத்தி ஊக்கினர். ஆதலின் முதலில் முழுதும் வரலாறாகவே யாக்கப்பெற்ற இந் நூல் நாடக உருவில் மாற்றி யமைக்கப் பெற்றது. மேலும் அன்பர்கள் பலரது விருப்பிற் கிணங்க இந் நூல் முழுதும் உரைநடை யானியன்றது. கல்லூரி மாணவர்களும் ஏனைய பிறரும் படிக்கவும் நடிக்கவும் ஏற்ற நடையானியன்றது.

இவ் விக்கிரம அரசனது வரலாறு தென்னிந்தியச் சரித்திரத்தில் இன்றியமையாத ஓரிடம் பெற்று விளங்குவதோடு, சிறப்பாகச் சோழர் குலச் சரித்திரத்தோடு பிரிக்க இயலாதவாறு பிணைந்திருக்கிறது.

பிற்காலச் சோழ வம்ச பரம்பரையை நிலைநாட்டிய **விஜயாலயன், ஆதித்தன் I** என்பவர்களது காலத்தில் சாளுக்கியர்கள்

இராஷ்டிர கூடர்களை எதிர்த்து, இழந்த தங்கள் பேரரசை மீண்டும் நிலைநாட்டப் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். இணையற்ற வீரனாகிய **இராஜேந்திர சோழன்** காலத்தில் சளுக்கியர்கள் இராஷ்டிர கூடர்களை வென்று தங்கள் பேரரசை நிலைநாட்டி யிருந்தார்கள். அதுமுதல் தெற்கில் வலிமைகொண்டு விளங்கிய சோழர் களால் தீவிரமாகத் தாக்கப்பட்டார்கள். இச் சோழர் சளுக்கர் போர்கள் ஏறக்குறைய **குலோத்துங்கச் சோழன் I** என்பவரது காலம் வரை நீட்டித்தன.

நமது வரலாற்றுத் தலைவன் விக்கிரமாதித்தனும், அவரது தந்தை **ஆஹவமல்ல சோமேசுவரன் I** என்பவரும் இடையறாது சோழர்களோடு போரிட்ட வண்ணமாகவே யிருந்தனர் என்ன லாம். இக் காலத்தில் சோழர் பேரரசு உச்ச நிலை அடைந்திருந் தது என்பதையும், இக்காலத்திலிருந்த சோழவம்ச பரம்பரையினர் அனைவரும் பெருவலிவும் சிறந்த இராஜதந்திரமும் படைத்தவர் களாய் இருந்தார்கள் என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். ஆயினும் சளுக்கர் வலியொடுங்கிச் சோழர்கட்கு அடங்கிய சிற்றரசர்களாக ஆகவில்லை. நமது வரலாற்று நாயகனாகிய விக்கிரமாதித்தன் VI என்பவரே இதற்குக் காரணம் என்று கூறலாம். இவரது சமயோசித நடத்தையும், சிறந்த இராஜதந்திரமும், தக்க சமயத்தில் வெளிப்படும் வீரமும், சளுக்கர் களைச் சோழர்களுக்கு அடிமையாக்காது காத்தன என்றால் மிகை யாகாது.

விக்கிரமாதித்தரது வரலாற்றில் பல விசித்திரங்கள் அடங்கி யுள்ளன. தந்தையுடன் சேர்ந்து நீண்ட காலம் சோழரோடு போரிட்ட வண்ணமாக இருந்த இவர், **வீரராஜேந்திரர்** காலத்தில் திடீரெனச் சோழரது நண்பராகி விடுகின்றார். வீர ராஜேந்திரரது மகளை மணந்துகொள்கின்றார். தமது தந்தை இறந்த பின் தமது தமையனுடன் மாறுகொண்டு வீரராஜேந்திர சோழரது உதவியை நாடிப் பெற்றுச் சளுக்க நாட்டின் தென்பகுதிக்கு அரசரா கின்றார்.

இவரது வரலாறு, வீரமும் இரகசியமும் பொருந்தி, பல்சுவையுள்ள **சரித்திரப் புனைந்துரை வரலாற்று நாடகமாக** அமைவதற்குத் தகுதி பெற்றிருப்பது கருதி இந் நூல் ஆக்கப்பட்டுள்ளது. சரித்திர வரலாறுகளும், புனைந்துரை வரலாறுகளும் நன்கு பயன் படுத்தப் பட்டுள்ளன. சிறந்த சம்ஸ்கிருத கவி **பில்ஹணர்** என்பவர் இவ் விக்கிரமனது அரசவைக் கவிஞராகத் திகழ்ந்து இவரது சரித்திரத்தை **விக்கிரமாங்க தேவ சரிதம்** என்னும் பெயரால் எழுதியுள்ளார். அது சரித்திரச் சான்றுகட்கு பெரும்பாலும் ஒவ்வாதிருத்தல் கருதி இங்கு சரித்திரச் சான்றுகட்கு ஒத்தன மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பில்ஹணரைக் கவியாக மட்டுமன்றி, இங்கு விக்கிரமனது பாங்கனாகவும் ஆக்கப் பட்டுள்ளது.

—ஆக்கியோன்.

# நடிகர்

## ஆடவர்—பெண்டிர்

| | | |
|---|---|---|
| சோமேசுவரர் | : | மேலைச் சளுக்க நாட்டரசர் |
| விஜயாதித்தன் | : | சோமேசுவரரின் மூத்த புதல்வன் |
| விக்கிரமாதித்தன் | : | ,, இளைய ,, |
| இராஜாதிராஜன் | : | சோழப் பேரரசர், யானைமேற்றுஞ்சிய அரசன் |
| இராஜேந்திரன் | : | இராஜாதிராஜனின் இளவல் |
| வீரராஜேந்திரன் | : | இராஜேந்திரனின் இளவல் |
| அதிராஜேந்திரன் | : | வீரராஜேந்திரனின் புதல்வன் |
| அருமொழி மங்கை | : | ,, மனைவியார் |
| மாதேவி | : | ,, புதல்வியார் |
| நந்தினி | : | மாதேவியின் உயிர்ப்பாங்கி |
| குலோத்துங்கன் | : | இராஜேந்திர குலோத்துங்கன், கீழைச் சளுக்க மன்னர் |
| பில்ஹணர் | : | கவிஞர், விக்கிரமனின் உற்ற நண்பர் |
| கதம்ப ஜயகேசி | : | கோவா நகர மன்னர் |
| தாராவர்ஷர் | : | சக்கரக் கோட்டைத் தலைவர் |
| வேங்கியரசர் | : | விக்கிரமனால் முறியடிக்கப் பெற்றவர் |
| கங்காதரர் | } | தானைத் தலைவர்கள் |
| கண்டப் பையர் | } | தானைத் தலைவர்கள் |
| ஜனநாதர் | } | தானைத் தலைவர்கள் |
| இராஜமையர் | } | தானைத் தலைவர்கள் |
| குடவரையர் | : | சோழர் படைவீரர் |

| | |
|---|---|
| சோழநாட்டு அமைச்சர்<br>சளுக்கிய அமைச்சர் } | அமைச்சர்கள் |
| சங்கமையன்<br>குமாரையன் } | சளுக்கப் படைவீரர்கள் |
| கங்கா பெருமானடிகள் : | சமண மடத் தலைவர் |
| நம்பெருமாளாச்சாரியார் : | வைணவப் பெரியார் |
| அப்பங்கராச்சாரியார் : | வைணவ அடியார்க்கு அடியார், ஆழ்வார்க்கடியான |

சுங்க மித்திரர் : பௌத்த பிக்ஷு

மாயாதேவி : சமணத் துறவி

திருநீலகண்டத் தம்பிரான் : சைவ அடியார்

பொதுமக்கள், படைவீரர்கள், காவலர், பணியாட்கள், நகரத்தார், ரசிகர், ஏனையோர்.

# நிகழ்ச்சிகள்

நாடு நகரம் ஊர் பேர்

| | |
|---|---|
| மேலைச் சளுக்க நாடு<br>கீழைச் சளுக்க நாடு<br>வேங்கி நாடு<br>சோழ நாடு | நாடுகள் |
| கங்கைகொண்ட சோழபுரம்<br>கலியாணபுரம்<br>காஞ்சிபுரம் | நகரங்கள் |
| சித்தன்னவாசல்<br>அம்பிலாந்துறை<br>திருவானைக்கா கொள்ளிடக்கரை<br>பொன்னேரிக்கரை | இடங்கள் |
| பூண்டி<br>கொப்பம்<br>சக்கரக் கோட்டை<br>காந்தை | போர்க்களங்கள் |
| கோதாவரிப் பேராறு<br>கொள்ளிடப் பேராறு<br>துங்கபத்திரை | ஆறுகள் |

# சோழ மாதேவி

## அங்கம் 1

## கலைஞனும் கவிஞனும்

### களம் 1

இடம் : கோதாவரிப் பேராற்றின் கரை

காலம் : காலை நேரம்

நடிகர் : விக்கிரமன், பில்ஹணக் கவி.

[சளுக்கிய மன்னர் ஆஹவமல்ல சோமேசுவரரின் இளைய புதல்வன் விக்கிரமாதித்திய இளவரசரும் அவரது நண்பரும் கவிஞருமான பில்ஹணக் கவியும் கோதாவரி யாற்றங் கரையின் மருங்கே பரிமாக்களின் மீது இவர்ந்து தலைநகரை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.]

**விக்கிரமன் :** கவிஞரே! கவின் மிகுந்த இக் கரை மருங்கே காலைப் பொழுதில் நாம் வந்துகொண்டிருப்பது நம் மனத்திற்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது!

**பில்ஹணர் :** இளவரசே! அதனைக் கூறலும் வேண்டுமோ? இரவு முழுமையும் தண்மை நிறைந்த பால்போன்ற ஒளி கொடுத்துத் திகழ்ந்த முழுமதி தங்கள் முகத்தே இடங்கொண்டு நிலவுவது கண்டே அதனை யெளிதிற் கூறலாகுமே!

**விக்கிரமன் :** உமது கவிமதியால் முழுமதியை உவமையாக்கி விட்டீர். கதிரவனின் பொற்கதிர்களை நோக்க,

அவை நும் பொருள் செறிந்த அறிவு நிறைந்த பொன்னுரைகளும் அறிவுச் சுடர்களும் ஊடுபாய் வதை நிகர்த்து விளங்கவில்லையோ ?

**பில்ஹணர் :** இளவரசே ! கலைஞனுக்கு எதிர் நிற்க லாகுமோ கவிஞன். நீங்களோ அரசியற் கலைஞர், எளியேனே அரசவைக் கவிஞன்.

**விக்கிரமன் :** கவிஞர்க் கெதிராடத் தகுமோ ? அதோ பாரும் ! இப் பேராறு புதுப் புனல் பொங்கிப் பொழிவது போல் நுரையிட்டு நிறைகொண்டு துறையையும் அறுத்துச் சீறிச் செல்லுகின்றது.

**பில்ஹணர் :** அது மட்டுமா காண்கிறோம். கதிரவனின் இளங் கதிர்கள் அந்நீரைப் பொன்னீராக்குகின்றன. நீரின் மேற்பரப்பெங்கும் படிந்துள்ள சிற்றலைகள் அப் பொன்னொளியை மின்னொளி யாக்குகின்றன. அம் மின்னொளியில் பன்னிறங்கள் மிளிர்கின்றன. இந்திரன் ஒரேயொரு வானவில்தான் அமைக்கின்றான். ஆயின், இக் கதிரவனே பல்லாயிரம் வானவிற்களை ஒரே பொழுதில் இமைக்கும் அளவில் அமைக்கின்றான். இயற்கையின் எழிலை இயம்பலும் இயலுமோ ?

**விக் :** கவிஞரே, நீர் கண்கொண்டு மட்டும் காண்கின்றீர் போலும். செவிப் புலனைக் கட்புலன் மறைக்கின்றது போலும். கண்ணுற் காண்பதால் மயங்கற்க. செவியையும் பயன்படுத்தும்.

**பில் :** யான் கலைஞன் அல்லன், கவிஞனே. கவிஞனின் கலையுணர்ச்சி ஒவ்வொன்றையும் தனித் தனியே நுகர்ந்து மகிழும், ஒருங்கே யாவற்றையும் கண்டு திகைக்காது. இப்பொழுது செவிப்புலன் திறந்திருக்கிறது. கரைதனில் கவிந்திருக்கும் கனி மாஞ்சோலைகளில் கருங்குயில்கள் 'குக்கூ, குக்கூ' வெனக் கூவுவதால் செவிகளில் இன்பத் தேன் நின்று நின்று பாய்வது போன்ற உணர்வு தோன்றுதும் இருக்குமோ ? உடனேயே கட்புலனைப் பயன் படுத்து

வோம். அக் குயில்களின் குரலுக்கேற்பக் களி மயில்கள் நடம் புரியும் வனப்பைக் காணுதற்கென்றே நமக்குக் கண்களும் அமைந்துள்ளனவோ என்று தோற்றாதிருக்குமோ? கழனிகளில் குரவையார்க்கும் உழத்தியரின் உயரிய ஒலி நமது புலன்கள் யாவற்றை யும் உடனே தன்பாலிழுக்கின்றதை உணராதிருப் பமோ?

விக் : கவிஞரே! கலையுணர்ச்சி கனிந்த நும் புலன்கள் தக்கவாறே பயன்படுகின்றன. கவின் கவிந்த இக் காட்சிகளைக் காண்பதை விடத் தாங்கள் கூறுவதைக் கேட்பதால் மேலும் இன்பம் பெருக்கெடுத்தோடுவது கண்கூடல்லவோ?

பில் : இளவரசே! இத் துதிக்கு யான் அருகனல்லேன். இதை மட்டும் பாருங்கள். மேலே நோக்குங்கள். வெண் முகில்களைப் பாருங்கள். அவை பஞ்சின் தூவி போன்று வானத்திற் படிந்து, தொடர்ந்தாற்போல் சென்று கொண்டே யிருக்கின்றன; நிலையில்லாமல் ஓடிக் கொண்டே யிருக்கின்றன. தங்கள் பகைஞர் தங்கள் முன் நிற்கமாட்டாமல் அஞ்சி நடுநடுங்கி நிலை கொள்ளாமல் ஓடுவதை அது நிகர்க்கவில்லையா? இதோ இப் பூவரச மரத்தின் முடியைப் பாருங்கள். இளவெயிலால் பொன்னிறமாய்ப் பொலிவதைப் பாருங்கள். பூ அரசாகிய தாங்கள் சூடப் போகும் புகழ் முடிக்கு அது நிகராமோ? அம் மரத்தின் பொன் முடியில் பூத்துக் காய்த்துப் பழுத்து நிற்கும் பூக்களும் காய்களும் கனிகளும் தங்கள் பொன் முடியில் இழைத்த நவமணிகளை ஒத்திருப்பதைக் கண்டு களி கூராதிருப்ப தியலுமோ?

விக் : புகழேணிக்கு அடிகோலி இருக்கிறீரோ, அல்லது புகழேணியையே கட்டி முடித்து விட்டீரோ?

பில் : இளவரசே! அடிகோல அற்பன் யான் யார்? அடி கோலவும் கட்டி முடிக்கவும் விற்பன்னராகிய மன்ன வர் தாங்கள் இருக்க, நான் யார்?

**விக் :** நல்லது; முதலில் இளவரசர், உடனே அதன் பின் மன்னர். அடுத்துக் கூற வந்த மொழி பேரரசர்தான்!

**பில் :** நான் கூறவந்ததைத் தாங்களே கூறிவிட்டீர்கள்.

**விக் :** வல்லமை ஒரு சிறிதும் எனக்கு இல்லாது போயினும் நுமது கவி வன்மையால் ஒரு நொடியில் யான் இளவரசாகி, அரசாகி, பேரரசாகி விட்டேன்.

**பில் :** இதற்கும் மேற்கொண்ட பதவியை மறந்து விட்டீர்களே, மண்டலாதிபதி!

**விக் :** அதற்கு மேலும் நும் கவனம் செல்லாது போலும். ஈதென்ன வெற்றுரை. நீர் கூறியவற்றுள் கடையாகவுள்ள இளவரசு கூட இல்லை யான். எளிதில் நீர் என்னை மண்டலாதிபதி யாக்கி விட்டீர் !

**பில் :** ஏன் தங்களையே கடிந்து கொள்கின்றீர்கள் ? யாவும் தாமாகவே தம்மை நோக்கி வரிசையாய் வந்து கொண்டிருக்கின்றனவே.

**விக் :** என் தமையனார் விஜயாதித்தர் இருக்கையில் என்னை இளவரசு என்று அழைக்கின்றீர். தந்தை சோமேசுவர பூபதி இருக்கையில் என்னை அரசாக்கி விட்டீர். சோழர் பேரரசு பெரும்புகழ் பெற்றிருக்கையில் என்னைப் பேரரசாகப் பதிய வைத்தீர். நன்று நன்று. நும் மனக் கண்கொண்டு காண்பதை யெல்லாம் வாய் மொழியால் பொழிந்து விடுவீர் போலும்.

**பில் :** இளவரசே, கவிஞன் சொல் எந்நாளும் பொய்க்காது. என்னறியாது யாவும் யான் கூறிவிட்டேன். வேண்டுமென்றோ முகமனுகவோ கூறியவை யன்று. காலப் போக்கில் நீங்கள் பேரரசு ஆகாமல் இருக்கப் போவதில்லை என்பது என்னவோ உறுதிதான்.

**விக் :** இளவரசு, அரசு எல்லாம் ஒரு புறமிருக்க, சோழர் பெருமையை என்ன அவ்வாறு நினைத்து விட்டீர் ! சோழன் இராஜராஜன் தன்னிகரில்லாத் தனிப் பெரும் வீரனாய்ப் பேரரசை நிறுவி, அதனைப் பெருக்கி விரிவாக்கினான். அவனது மகன் இராஜேந்திரன் அவனினும் பெரு வீரனாய் 'இவன் தந்தை

என் ஞேற்ருன்கொல்' என்னும் தொடரைத் தோற்று வித்தான். இப்பொழுது அவனது புதல்வர்களோ சிங்க வேறுகள் எனத் திகழ்வது கண்கூடல்லவோ? அண்மையில் அவர்கள் நம்மீது போர் தொடுத்திருந்த திலிருந்து நாம் அவர்களது தீராப் பகைஞரா யிருக் கின்ருேம். இவை யாவும் மறந்து நீர் பேசுவதுதான் எனக்கு வியப்பா யிருக்கிறது.

பில் : இளவரசே! யாவும் யானறிந்ததே. இராஷ்டர கூடர்கள் எவ்வளவு வலிமையுடன் விளங்கினுர்கள்! அவர்கள் நாடு எங்ஙனம் நமதாயிற்று? பல்லவப் பேரரசு இப்போது எங்கே யோடி ஒளிந்தது? இளமையும் வலிமையும் ஒருவழி நில்லா. சூழ்வனச் சூழ்ந்து, ஆவன ஆக்கி, செய்வனத் திருந்தச் செய் தால் யாவும் இனிதே நிறைவேறும்.

விக் : நீர் பேரரசை எனக்கு அளிக்கு முன்பாக இதோ நகர்க் கோட்டை வாயிலயே அணமி விட்டோம். சென்று வருகின்றீரா? பிறிதொரு முறை சந்திப் போம்.

பில் : சென்று வாருங்கள். நலனே யெய்துக.

[விக்கிரமன் கோட்டைக்குள் செல்ல, கவிஞர் பிறிதோரிடம் செல்வாராயினர்.]

களம் 2

# மன்னனும் மன்றமும்

இடம்: அரண்மனையில் ஆலோசனை மண்டபம்

காலம்: நண்பகல்

நடிகர்: சோமேசுவரர், விஜயாதித்தன்,
விக்கிரமன், தலையமைச்சர்,
தானைத் தலைவர்கள்.

[சளுக்கிய நாட்டின்மீது சோழர் படையெடுத்து வருவதாக முடங்கல் விடுத்துள்ளனர். தமது தற்காப்பிற்கும், எதிர்ப்பிற்குமாக வேண்டி சளுக்கிய மன்னர் ஆஹவமல்ல சோமேசுவரர், அவர் மூத்த புதல்வர் விஜயாதித்தன், இளவல் விக்கிரமன், தலையமைச்சர், தானைத் தலைவர்களாகிய கண்டப்பையன், கங்காதரன் ஆகியோர் ஒருங்கு கூடித் திட்டமிடுகின்றனர்.]

**சோமேசுவர மன்னர்:** அமைச்சரே, புதல்வர்களே, தானைத் தலைவர்களே! சோழரது படையெடுப்பைக் குறித்து நாம் செய்யத் தக்கது யாது என்பதை ஆராயவே இவண் நாம் ஒன்றுகூடியிருப்பதைத் தாங்கள் அறிவீர்கள். 'கருவியும் காலமுஞ் செய்கையுஞ் செய்யும் அருவினையும்' மாண்புற அறிந்தமை, கல்வியறிவு, படைக்கலப் பயிற்சி, போராற்றல், ஆலோசிக்குந் திறன் முதலிய யாவும் ஒருங்கே யமையப்பெற்ற தங்கள் முன்னிலையில் தக்க திட்டமிடவே நாம் இங்குக் குழுமியுள்ளோம். இதுபற்றி அவரவர்க்குத் தோன்றும் எண்ணங்களையும் கருத்துக்களையும் ஒளியாது கூறலாம்.

**விக்கிரமன் :** தந்தையே! இப்பொழுது சோழர்கள் நம்மீது போருக்கு எழத் தக்க காரணம் யாதும் உளதோ?

**விஜயாதித்தன் :** காரணம் என்ன விருக்கிறது? அவர்கள் படைத்துள்ள படைச் செருக்கும், அவர்களை வன்மையாய்ப் பிடித்துள்ள நாடு கவரும் பேராசையும்தான்.

**அமைச்சர் :** சில ஆண்டுகளுக்கு முன்னர், நாம் சிறிது சிறிதாகக் கைப்பற்றிய இடைதுறை நாடு முழுவதையும் தமதெனை உரிமை பாராட்டி அதனைத் தமக் களிக்குமாறும், இன்றேல் போருக்கு வருமாறும் சோழர் முடங்கல் விடுத்திருக்கின்றனர்.

**கண்டப்பையன் :** குலத்தைப் பற்றியும் அவர்கள் பெருமை பாராட்டுகின்றனராம். நமது சந்திரகுலம் அவர்களது சூரிய குலத்தினுந் தாழ்ந்ததாம். என்னே அவரது செருக்கு!

**கங்காதரன் :** அது நிற்க, மதத்தைப் பற்றிய போராட்டமும் இதில் இணைந்துள்ளதாம். அவர்கள் தமது சைவ சமயமே உயர்வானது என்றும், நாம் மேற்கொண்டுள்ள வைணவம் தாழ்ந்ததென்றும் கூசாமற் கூறுகின்றனராம். நாம் சமணர்களை ஆதரிக்கின்றோமாம்; அதுபற்றியும் இகழ்வாகப் பேசுகின்றனராம்.

**மன்னர் :** இவை யாவும் எவ்வாறு தெரியவரலாயின?

**அமை :** ஒற்றர்கள் அவ்வப்பொழுது செய்திகள் அறிவித்துக் கொண்டு வருகின்றனர். இல்லாது பிறக்குமோ? தழலின்றிப் புகைதா னெழும்புமோ?

**மன் :** அது நிற்க. மதி யமைச்சரே! தங்களது தேர்ந்த கருத்தை யறிவிப்பீர்!

**அமை :** இடைதுறை நாடு அவர்களுடையது என்று சோழர் கூறுவதில் பொருள் ஒன்றுமில்லை. இராஷ்டிர கூடர் காலத்திற்கு முற்பட்டே அது நம்பால் இருந்தது. இடையில் சோழர் அதனைக் கைப்பற்றினர். அதன் பின் அதனை நாம் பிடித்து ஏற்றோம். இப்பொழுது மறு முறையும் அதனைக் கைக் கொள்வதற்கு ஈதொரு சூழ்ச்சியே யன்றி வேறேயல்ல.

**மன் :** காரணம் ஒரு புறமிருக்க, இப்பொழுது படையெடுக்கும் நிலைக்கு நெருங்கி நிற்கின்றனரே? இந்நிலையில் செய்யத் தக்கது யாது?

**அமை :** அரசே! தற்சமயம் அவர்களை எதிர்த்துப் போராடுமளவுக்கு நம் வசம் படைப்பலம் இல்லையே! 'வினை வலியுந் தன் வலியும் மாற்றான் வலியுந் துணை வலியுந் தூக்கிச் செயல்' என்பதற் கேற்ப ஆராய வேண்டுவது இன்றியமையாதது. தொடர்ந்தாற்போல் நாம் பல்லாண்டுகளாகப் போர் புரிந்து நம் படை வலிமை இழந்திருக்கிறோம். தற்போது மாளவ நாட்டுப் பரமாரர் நமக் கெதிராகப் போர் முனை வகுத்துக் கொண்டிருப்பதாக வேறு செய்தி. இதனையும் நாம் தற்காத்தாக வேண்டும். சோழர் படை வலியைப் பற்றி நாம் அறியாததன்று. இந்நிலையில் நாம் தற்பொழுது ஒருவகையாகச் சமாதானம் செய்து கொண்டால் அமைதி நிலவும். அதன் பின் நமது வலிமை நாம் பெருக்கிக் கொள்ளலாம். 'இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது' என்பது தாங்கள் அறியாததல்ல.

**விஜயாதித்தன் :** அமைச்சரே, நீங்கள் கூறுவதுபோல் இதில் சமாதானத்திற்கு எள்ளளவும் இட மிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில் சோழர் ஒத்துவர ஒருப்படார். போரில் முறிபட்டால்தான் அவர்கள் வலியடங்குவர். முன்னாளில் மூதாதையர் தைலப்பர் காலத்திலும் இப்படியேதான் நடந்தது. போரில் புறமுதுகு காட்டி ஓட்டமெடுத்த பின்னரே வழிக்கு வந்தனர். சமாதானத்தை எதிர் நோக்குவது என் மனத்திற்கு ஏதோ ஒவ்வாமலிருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மன் :** தானைத் தலைவர் கண்டப்பையர் அவர்களே, உமது கருத்து யாதோ?

**கண்ட :** தற்போதையத் தேவையைக் கூர்ந்து நோக்க, நம் வசமுள்ள படைவலி குறைவென்றே எனக்குப்

புலப்படுகின்றது. ஆயினும் அதனை நிறைவாக்கிக் கொள்ளக் கூடும் என்ற மெய்யுறுதியும் எனக்கு உள்ளது. படைவலிமை பெற்ற 'காலங் கருதி இடத்தாற் செயின், ஞாலம் கருதினும் கைகூடும்.'

**மன் :** படைத் தளகர்த்தரே, உமது சீரிய கருத்து எத்தகைமைத்து ?

**கங்காதரன் :** போர் ஆயத்தங்கள் நம்மிடம் குறைவே யாதலால், போரிட்டே ஆகவேண்டும் என்னும் நெருக்கடி ஏற்பட்டாலொழியப் போர் முனையில் இறங்காதிருத்தல் நலமென்றே என் சிற்றறிவுக்கு எட்டுகிறது. ஆயினும் மன்னர் கட்டளையைத் தலை மேற்றாங்கிப் பணிசெய்ய எந்த நொடியிலும் ஆயத்த மாக இருக்கின்றேன்.

**மன் :** விக்கிரமா ! உனக்கு என்ன தோன்றுகிறது ?

**விக்கிரமன் :** தந்தையே ! என்னையும் ஒரு பொருட்டாக மதித்துக் கேட்கின்றீர்களே. யான் இங்குள்ளோ ரிடையே மிக மிகச் சிறுவன். இருப்பினும் தங்கள் கட்டளையை ஏற்கு முகத்தான் ஏதோ என் இள மனதில் தோன்றியதைத் தெரிவிக்கின்றேன். சூழ் நிலைக் கேற்ப அமைச்சர் தெரிவித்த கருத்தே என் மனத்தெழுந்ததை ஒத்ததாயிருக்கின்றது. கருவியும் காலமும் நோக்கத் தமையனார் கூறியது என்னவோ எனக்கு அவ்வளவு பொருத்தமுள்ளதாகத் தெரிய வில்லை.

[விஜயாதித்தன் விக்கிரமனை முறைத்துப் பார்க்கிறான்.]

**மன் :** தம்பீ ! விஜயனின் கூற்றிலும் உண்மை ஒரு சிறிது இருப்பதைப் புறக்கணிக்க இயலாது. நாம் சமா தானத்திற்கு முற்பட்டால் சோழர் நம்மைக் கேவல மாக மதித்து நம்மை அடிமைப் படுத்த முயல்வர். இராஜாதிராஜன் முரடன் ; நேர்வழி நடப்பவன் அல்லன்; எப்பொழுதும் போரையே விரும்புபவன். அமைச்சர் கூற்றையும் கவனிப்போம். அஃது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகை

யால் போர் தொடுக்கவும் வேண்டும் ; தொடுக்காமல் இருக்கவும் வேண்டும்.

**விஜயா :** தந்தையே ! ஈதென்ன இரண்டையும் சொல்கிறீர்களே ! எனக்குக் குழப்பமாக இருக்கின்றதே ?

**மன் :** விஜய ! பதறுதே. நான் கூறியதன் கருத்தை நீ உணரவில்லை. போரில் முற்பட்டதுபோன்று பகைவருக்கு எதிராகப் படைகளை நிறுத்துவோம் ; தற்காப்புப் போர் செய்வோம். மெதுவாகப் பின் வாங்கிக் கொண்டே போர்க்காலத்தை நீடிப்போம். அவ் இடைநேரத்தில் போராயத்தங்களைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்போம். அமைச்சரே இதுபற்றி நும் கருத்து யாதோ ?

**அமை :** அரசே ! தாங்கள் கூறுவதும் பொருத்தமே. ஆயினும் போரில் ஈடுபட்டுக்கொண்டிட போராயத்தங்களைச் செய்துகொள்வது கடினமான செயலாகும், எளிதென எனக்குத் தோற்றவில்லை.

**மன் :** ஆம். ஆயினும் செய்யத் தக்க செயல் வேறு ஏதுமிருப்பதாகப் புலப்படவில்லையே ?

**அமை :** நல்லது, அங்ஙனமே செய்வோம். இயன்ற வரையில் முன்னேற முயற்சிப்போம். இனி யார் யார் எங்கெந்த முறையில் செயலாற்றுவது என்பது இப்பொழுதே முடிவு செய்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகிவிட்டது. மன்னர் அவர்களே இதனையும் சற்றுக் கவனித்தால் உடன் மேற் செல்லலாம்.

**மன் :** நன்று. விஜயாதித்தன் நமது படையில் ஒரு பகுதியைக் கைக்கொண்டு படைத் தலைமை தாங்கிப் போர் நடத்தட்டும். கண்டப்பையரும், கங்காதரரும், விக்கிரமனும் விஜயனின் கீழ் நின்று செயலாற்றுவார்களாக. அமைச்சர் தலைநகரிலிருந்து கொண்டு போராயத்தங்களைப் பெருமிதமாகப் பெருக்குவாராக. யான் இடையிலிருந்து போர்முனைக்கு அவ்வப்பொழுது வேண்டியவைகளை அனுப்பிக்கொண்டிருப்பேன்.

விஜயா: நன்று தந்தையே! அவ்விதமே நடந்துகொள்ள இப்போதே ஆயத்தமா யிருக்கின்றோம்.

விக்: தந்தையே! இந்நிலையில் எனக்கும் ஒரு சிறு வேண்டுகோள் உளது. அதனைத் தெரிவிப்பதற்கு உத்தர வளிப்பீர்களாயின் கூறுகின்றேன்.

மன்: மகனே! தயங்காது கேட்பாயாக.

விக்: வேங்கிநாட்டை நம் வசப்படுத்த முயல்வதற்கு இஃது ஏற்ற காலம் என்று யான் கருதுகின்றேன். சோழர் போர் முனைக்குப் போகும் படைவீரரை நீக்கி, எஞ்சி யிருக்கும் பகுதிப் படையில் ஒரு சிறு பகுதியை என் வசம் அளித்தால் யானே முன் நின்று வேங்கியை வென்று வருவேன் தந்தையே!

விஜயா: சோழனுக்கு எதிர் நிற்க இளவல் அஞ்சுகிறான் போலும்! படைவலி பற்றாதென்று திட்டமிடும் இந் நேரத்தில் பயனற்ற இச் செயலில் இப்பொழுது இறங்குவது ஏற்றதாகத் தோற்றவில்லை. தம்பி போரை அஞ்சினால் அரண்மனையிலேயே இனிது தங்கி யிருக்கட்டும்.

[விக்கிரமன் கண்கள் சிவந்து, உடல் பதைக்கின்றது.]

மன்: விக்கிரமா! தமையன் மேற் சினங்கொள்ள வேண்டா. படைத் தேவையை முன்னிட்டே அவன் அவ்வாறு கூறியுள்ளான். அது நிற்க, நீ கூறு வதைக் கொள்ளுவதும் தள்ளுவதும் என் கையி லன்றோ இருக்கின்றது? அதற்குள் நீ ஏன் முகஞ் சுளிக்கின்றாய்?

அமைச்சர்: 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு.' இளவல் பேச்சில் பல நுட்பங்கள் அடங்கி யிருக்கக் காண்கின்றேன். வேங்கி நாட்டைத் தற்போது ஆள்பவர் விஜயாதித்தியர். அவர் தனது தமையனா ரான இராஜராஜ நரேந்திரரையும் சூழ்ச்சியால் நாட்டை விட்டுத் துரத்தித் தாமே அரசரானவர்.

நரேந்திரர் சோழரைத் தெய்வமென மதித்தவர்; சோழன் மகளை மணந்தவர். விஜயாதித்தியர் அவருக்கு எதிரியாகையால் கொள்கையில் மாறுபாடு இருக்க இடமுள்ளது. போரின்றிச் சமாதான முறையிலே அவர் நம் வசப்பட்டு விடலாம். அவ் வகையில் முயற்சிப்பது வரவேற்கத் தக்கதே.

**மன்:** அங்ஙனமாயின் இளவலின் ஊக்கத்தையும் நாம் தடை செய்யவேண்டா. நம் படையில் விக்கிரமன் விரும்பும் சிறிதளவு அவனிடம் ஒப்படைப்போம்.

**அமை:** அங்ஙனமே செய்வோம். இளவலுக்கு உதவியாக இரண்டு தானைத் தலைவர்களையும் அவர் வசமே ஒப்படைப்போம். எங்ஙனமேனும் கருதியவாறு முடித்து அவர் வெற்றி முரசு கொட்டுவார் என்றே நான் கருதுகிறேன்.

**மன்:** நாம் இப்பொழுது திட்டமிட்டவைகளை அனைவரும் நினைவிலிருத்துங்கள். தக்கவாறு நுட்பமாகச் செயலாற்றுங்கள். யாவும் இனிது நிறைவேறட்டும். இனி நாம் கலைந்து செல்லலாம்.

களம் 3

# 'நல்லவை கேட்க'

இடம் : வேங்கி நாடு செல்லும் பெருவழி

காலம் : பிற்பகல்

நடிகர் : விக்கிரமன், பில்ஹணர்.

[வேங்கி நாட்டை நோக்கி விக்கிரமன் செல்கிறான். பில்ஹணக் கவி வந்து அவருடன் சேர்ந்து கொள்கிறார். இருவரும் பேசியவாறே வழி நடக்கலுற்றனர்.]

**விக்கிரமன் :** கவிஞரே! வணக்கம் உரித்தாகுக. நான் நேற்றுத் தங்களைவிட்டு அரண்மனையை யடைந்த பொழுதே என் தந்தையார் மன்றத்தில் ஆலோசனையிலீடுபட்டிருந்தார். யானும் அதில் ஒரு சிறிது கலந்து கொண்டேன்.

**பில்ஹணர் :** என்ன? ஆலோசனையா? எது பற்றி? முடிவு யாதோ? நீங்கள் இப்பொழுது எதனை மேற்கொண்டு, எங்கு செல்லத் துணிந்து நிற்கிறீர்கள்?

**விக்கிரமன் :** நண்பரே, ஒவ்வொன்றாகக் கேளும். சோழர் படையெடுத்து வரப்போவதாக முடங்கல் விடுத்துள்ளனர். அவரை யெதிர்த்து என் தமையனார் போரிடச் செல்லுகிறார்.

**பில்ஹணர் :** நீங்கள் எந்தச் செயலில் ஈடுபடப்படுகிறீர்கள்? நீங்களும் தமையனாரைப் பின்பற்றப் போகின்றீர்களோ?

**விக்கிரமன் :** அன்று, நான் வேங்கி நாட்டை வெற்றி கொள்ளப் போகின்றேன்.

**பில்ஹணர் :** நன்று நன்று, வெற்றி நமதே ! அவ்வகையே யாகுக. சோழர் படையெடுப்புக்கும் நீங்கள் வேங்கியை வெற்றி கொள்வதற்கும் உள்ள தொடர்பு என்னவென்றே எனக்குப் புலப்பட வில்லையே ?

**விக்கிரமன் :** அந் நாட்டின் மீது எப்பொழுதுமே எனக்கு ஒரு நாட்டம் உண்டு. அன்னவர்கள் சோழர் தலைமையை நீக்கி, நம்பால் உறவுகொள்ள வேண்டும்; இன்றேல் அந் நாடு நம்பாற் சேரவேண்டும். இவையே என் நெடுநாளைய விருப்பம். இதனை யான் தக்க காலத்தில் அவை யறிந்து அறிவித்தேன். அவ்வளவு தான், தமையனார் முகங் கறுத்தது. அமைச்சரோ என்பால் இருந்தார். தந்தையும் தயங்காது உத்தரவு அளித்தார். இனி என் திறம் காட்டி வெற்றி கொள்ள வேண்டியதே எஞ்சியுள்ளது.

**பில்ஹணர் :** இளவரசர் திக் விஜயத்திற்குப் புறப்பட்டு விட்டாற்போலும்! நன்றிது. தாங்கள் எவ்வகை யான் வேங்கியை வெற்றிகொள்ளத் துணிந்துள்ளீர் கள் என்பது யான் அறியலாகுமோ ?

**விக்கிரமன் :** நண்பரே! முதலில் சமாதான முறையில் தூதுசென்று முயன்று பார்க்கவே கருதியுள்ளேன்.

**பில் :** தகுதியான கருத்து. நம் கோரிக்கையை அவர்கள் புறக்கணிப்பார்களானலோ ?

**விக் :** போரிட்டு அந் நாட்டைக் கைப்பற்றுவேன்.

**பில் :** விந்தை! கூடை மண்ணைக் கொண்டு குளத்தைத் தூர்ப்பதை ஒத்துள்ளது நும் கூற்று; வெற்றி கொள்ளப் போதிய படைப்பலம் வேண்டாவோ ?

**விக் :** மனமுண்டானல் மார்க்கமும் உண்டு; வலியுண்டா னல் வழியும் உண்டு. நானிப்பொழுதே நேரிடை யாகச் செயலில் இறங்கப் போவதில்லையே. வேங்கி நாட்டின் புறத்தேயுள்ள நம் எல்லையிற்றனே தங்கி யிருந்து, முதலில் நமது படையைப் பெருக்குதற் கான முயற்சிகளில் ஈடுபடப் போகின்றேன். அதன் பின்னர் தூது செல்லக் கருதியுள்ளேன். இணங்கா

விடில் முதலில் அவர்களைச் சார்ந்த சக்கரக் கோட்டையைக் கைப்பற்றப் போகின்றேன். இறுதியாக வேங்கியரசனுக்கு எதிர் நின்று போரை ஈர்த்துச்செல்ல உறுதி பூண்டுள்ளேன். இதற்குக் கான உமது சிறந்த ஆலோசனையும் உதவியும் யான் வேண்டி நிற்கின்றேன்.

பில் : வெகு அழகு, புவிக்கரசாகிய தாங்கள் இவ் ஏழைக் கவிஞனை மதித்துக் கேட்பது, நன்றிது! தாங்கள் கேட்பதைக் கட்டளையாக மதித்து எனக்குத் தோன்றுவதைக் கூறுகின்றேன். வேங்கி நாட்டவருடன் பொருவதென்றால் அவர்கள் படை வலியைக் குறிப்பாயறிதலோடு திட்டமாகவும் அறிதல் நலம். அவரது நாட்டு நிலை, மக்கள் நிலை, நிலப் பண்பு, நகரமைப்பு, போர்முறை, பாதுகாப்பிடங்கள், மறைவிடங்கள் முதலியவற்றை உள்ளது உள்ளவாறு அறிந்து கொண்டால்தான் நம் கருத்து வெற்றி தரும்.

விக் : வெகு நேர்த்தி. என்னை அரசியற் கலைஞன் என்று முன்பொரு முறை கூறினீரே? நீரனறோ அப்பெயருக்குத் தகுதியானவர். ஒற்றறிய வேண்டும் என்று குறிப்பா யுணர்த்துகின்றீர்கள்.

பில் : ஆம், அதுவே நான் கூறவந்தது.

விக் : அதனாற்றான் "எனைத்தானும் நல்லவை கேட்க" என எழுந்தது போலும். அங்ஙனமே யாம் பிறர் அறியா வண்ணம் மாறுவேடந் தாங்கி நமக்கு வேண்டும் செய்திகள் அனைத்தும் அறிவோம். யானிப்பொழுதே அச்செயலில் முற்படுவேன். அயல் நாட்டு வணிகன் போல் ஆங்குச் சென்று ஆவன அறிவன். அதுவரை நீங்கள் நம் நகரிலேயே இருப்பீர்களோ?

பில் : இளவரசே! நன்கு கூறினீர்கள். யான் தங்கட்கு முன்னமேயே இவ் ஏற்பாட்டில் இறங்கத் துணிந்து விட்டது தாங்கள் அறிய மாட்டீர்கள். "அகலாது

அணுகாது தீக்காய்வார் போல்க; இகல் வேந்தர்ச் சேர்ந் தொழுகுவார்" என்பதைத் தாங்கள் மறந்தது ஏனோ?

விக்: கவிக் கரசரே, ஆயின் தாங்களும் வேங்கி நாடு வரத் துணிந்து விட்டீர்கள் போலும். நாமிருவரும் சேர்ந்தே போவோமா?

பில்: அஃதங்ஙனம் அன்று. தாங்கள் ஒரு துறையில் உள வாடுங்கள். யான எனக்கொத்த துறையில் உறவாடி உளவறிகிறேன். என் உறவினர் ஒருவர் அத் தலை நகரிலேயே உள்ளார். அவரில்லத்தில் இருந்து கொண்டு யான் பல விவரங்களும் அறிந்து கொள் வேன்.

விக்: நன்று. அரசர் என்வசம் அளித்துள்ள தானைத் தலைவர் இராஜமையரும் ஜனநாதரும் எமது திட்டப் படி எல்லையில் எவருமறியாது இருந்து கொண்டு, படை திரட்டிப் பயிற்சியளித்து வருகிறார்கள். அதற்குள் நாமும் பகைஞர் நாட்டினுட் சென்று விவரமறிந்து வந்துவிடலாம்.

பில்: நன்றிது, நன்றிது. அவ்விதமாயின் பின்னர் நாம் எவ்விதம் சந்தித்துக் கொள்வது?

விக்: நண்பரே! நாமிருவரும் அடுத்து வரும் முழுமதி நாளன்று, எல்லையில் அமைந்துள்ள நம் படை வீட்டில் சந்திப்போம். இப்பொழுதே நாம் பிரிந்து சென்று ஆவன செய்வோமாக.

பில்: "எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார் திண்ணியராகப் பெறின்." யாவும் இனிதே முடிவு பெறும். நமதே வெற்றி.

[பிரிந்து செல்கின்றார்கள்.]

---

களம் 4

# வேங்கியில் வேடிக்கை

இடம்: வேங்கித் தலைநகர்
காலம்: காலை
நடிகர்: பில்ஹணர், ஆழ்வார்க்கடியார், தம்பிரான், நீராடுவோர், காவலர்.

[பில்ஹணக் கவி தலைநகரின் புறத்தேயுள்ள ஓராற்றில் நீராடிக் கரையேறுகிறார். கரையி லிருந்த சைவ சமய அடியார் திருநீலகண்டத் தம்பிரான் சுவாமிகளும், வைணவ ஆழ்வார்க் கடியார் அப்பங்கராசாரிய சுவாமிகளும் வாக்கு வாதம் புரிகின்றனர்.]

**பில்ஹணர்:** அடடா! இந்த ஆற்றில் தான் எவ்வளவு தண்ணீர்! நீரோட்டத்தின் வேகம் கட்டுக் கடங்காத தாக அல்லவோ இருக்கிறது? நீரோட்டத்தின் இழுப்பு காலை நிலைநிறுத்தி நிற்க முடியவில்லையே. இதில் முழுக வந்ததே இழுக்கு. இன்று நான் உயிர் தப்பிப் பிழைத்தது எம்பிரான் பரமசிவனாரது திருவருளால் தான் போலும்.

**தம்பிரான்:** எம்பிரான் திருவருள் இருந்தால் எதுதான் சித்திக்காது? சிவனன்றி ஓரணுவும் அசையாது. நீங்கள் இவ்வூருக்குப் புதிது போலும். நமச்சிவாயம்!

**ஆழ்வார்:** யாது கூறினீர்? காத்து அளிப்பவராய எமது திருமால் திருவருள் திரும்பியதல்லாது திருகுச் சுழலில் திகைத்து நின்ற உயிர் திரும்பியும் இருக்கு மோ! அழித்துக் கழிப்பவர் அல்லரோ நீர் குறிப் பிட்டவர். கூசாது கூறிய வாயை முதலில் இத் தூய நீரால் கழுவிக் கொள்ளும்.

**தம்பி:** அவ்விடத்திலேயே அதனைச் செய்து கொள்ளட்டும். சிவனார் சிறப்பு வேறெவர்க்கும் இல்லை யென்பதை அவ்விடம் அறியாது போலும்!

**ஆழ் :** திருமாலின்முன் எவரே எதிர்நிற்கவல்லார்? உமது அவன் ஆண்டியாகி மண்டை யோட்டைத் திருவோடாகத் தாங்கி யலைந்ததையும் மறந்தீரோ? எங்கள் திருமால் மனமிரங்கிப் பிச்சை இட்டாரோ, உங்கள் ஆண்டி பிழைத்தாரோ? இல்லையெனில், இப்பொழுது கூடத் திருவோடு தாங்கி இங்குக் கூட வந்திருப்பார்.

**தம்பி :** ஆழ்வாருக்கு ஆராதனை இன்று அதிகம் போலிருக்கிறது. வலுச் சண்டைக்கு இழுக்கிறார். அந்தத் திருட்டுத் திருமால் ஒரு தக்கனுக்கு மாறு கூற மாட்டாமல் எங்கள் பரமனார் அனுப்பிய வீரபத்திரரின் திருவடிகளில் வீழ்ந்து, கெஞ்சி, உயிர்ப் பிச்சை பெற்றுத் திருவோட்டம் எடுத்தது நினைவில்லை போலும்!

**ஆழ் :** தம்பிரானார்க்கு இன்று அமுதுபடி அடிதடி தான் போலிருக்கிறது! பயந்தாங்கொள்ளிப் பரமன் பஸ்மாசுரனுக்குப் பயந்து கல்லினுள் தேரை போல மறைந்தொளிந்ததை மறந்து போனீரே! விந்தை! விந்தை!!

**தம்பி :** அதனைக் கூறினீரே? முழுவதையும் அவ்விடம் அறிந்து கொள்ளட்டும். அந்தபொழுது உங்கள் திக்கில்லாத திருமால் கேவலம் சேலை கட்டிப் பெண்ணுருத் தாங்கி மோகினியாகி எங்கள் பரமனார்க்குப் பெண்டானதை ஏனோ கூறாது விடுத்தீர்?

**ஆழ் :** தம்பிரான் தப்ப வேண்டுமானால் தக்கபடி தண்டனிட வேண்டும் என்று எச்சரிக்கின்றேன்.

**தம்பி :** கங்கையை யொத்த ஆற்றின் கரையில் அடாது பேசினால் ஆழ்வாரை என் திருக்கையாலே திருநரகம் சேர்ப்பிப்பேன் என்பதை அறிந்து கொள்ளட்டும்.

**ஆழ் :** கிருஷ்ண கிருஷ்ணா! கங்கை, கங்கை. திருமால் கால் கழுவிய நீரைத்தானே அழுக்குச் சடை பிடித்த அப்பரதேசி தன் தலையில் தாங்கிக் கொண்டு கங்கை யென்கிறான்.

**தம்பி :** சிவநிந்தை குலத்தையே வேரறுத்து விடும். உம்....

**ஆழ் :** திருமாலைத் துதி செய்யாமல் நிந்திப்போரது குலத்தின் ஆணிவேர் சல்லிவேர் யாவுமே அறுந்து விடும். எங்கள் யதிராஜர், பாஷ்யக்காரர், உடையவ ராகிய இராமாநுஜரை விரட்டிய சோழனது குலம் என்ன ஆகப் போகிறது என்று நீயே பார்த்துக் கொள்ளப் போகிறாய். இராமாநுஜர் சாபம் வீண் போகுமா? உங்களை ஆதரிக்கும் சோழர் ஜினாலயங் களைத் தங்கள் செருக்கால் தகர்த்தார்கள். அமணர் கங்கா பெருமானடிகள் அக்குலத்தையே வேரறுப்ப தாக உறுதி பூண்டுள்ளார். மற்றும் சுங்கமித்திரரும், பெருமானடிகளுடன் சேர்ந்து கொண்டு சோழரின் அழிவுக்கு ஆக்கம் தேடி வருவதை இப்பொழு தாவது அறிந்து கொள்ளும். பிறகு தெரியும் தம்பிரான் படும்பாடு.

**தம்பி :** ஓய், என்ன கூறினீர்? ருத்திர மூர்த்தியாக மாறி விடுவேன்? உன்னை என்ன செய்கிறேன் பார்!

**ஆழ் :** நரசிம்ம மூர்த்தி என்ன பண்ணுகிறார், பார்....

[தம்பிரானும் ஆழ்வாரும் கை கலக் கிறார்கள். கூச்சல் கேட்டுக் காவலர் சிலர் ஓடி வருகின்றனர். ஆழ்வாரும் தம்பிரானும் பிறரும் தலைகால் தெரியாது ஓடியொளிந்தனர். இதுவரை இச் சச்சரவுகளைக் கேட்டு நின்ற பில்ஹணரும் அவ்விடம் விட்டு நகர்ந்தார்.]

**பில் :** (தனக்குள்) வேடிக்கை, வேடிக்கை. வேங்கியில் வேடிக்கை. அருகில் விக்கிரமன் இல்லாது போனாரே? நாம் செவிப்பட்டது உண்மைதான் போலிருக்கிறது. சமயப் பூசலும் இங்குக் கொழுந்துவிட்டு எரிகிறது. சைவத்தை ஆதரிக்கும் சோழரைப் பிற சமயத்தினர் பகைத்துள்ளது தெள்ளெனத் தெரிகிறது. சோழ நாட்டிலும் இது போன்றதொரு சதிக்கூட்டம் பணி யாற்றி வருகிறது என்றல்லவோ உறுதிப்படுகிறது? நன்று நன்று. இனியும் ஈங்கு என்னென்ன நடைபெறுகின்றன என்று இயன்றவரை அறிய முற்படுகிறேன்.

களம் 5

# படைப் பெருக்கம்

இடம் : எல்லையில் உள்ள படைவீடு
காலம் : முன்னிரவு
நடிகர் : விக்கிரமன், பில்ஹணர், ஜனநாதர், இராஜமையர், படைவீரர்.

[விக்கிரமன் வேங்கி நாட்டில் ஒற்றறிந்து எல்லையிலுள்ள தனது படைவீட்டிற்கு வந்து சேர்ந்து ஆலோசனையில் ஈடுபடுகிறார்.]

**விக்கிரமன் :** ஜனநாதரே! இன்று பில்ஹணக் கவி இங்கு வந்து சேர்ந்து விட்டாரோ?

**ஜனநாதர் :** இன்னும் வரவில்லையே, அரசே!

**விக் :** இன்று அவர் இங்கு வந்து சேரவேண்டுமே. இது வரையில் காணோமே. ஏதும் இடுக்கண் நேர்ந்து விட்டதோ? வாராது இருக்க மாட்டாரே? இன்று முழுமதி நாள் என்பது அவர் அறிய மாட்டாரா?

[பில்ஹணர் வந்து சேருகிறார்.]

**விக் :** கவிஞரே, வருக, வருக. நல்வரவாகுக. தங்களைப் பற்றித்தான் இப்பொழுது நினைத்துக் கொண்டிருந்தேன். தக்க தருணத்தில் வந்து சேர்ந்தீர்கள். தங்களுக்கு வேங்கி நாட்டில் ஏதும் இடையூறு நேர்ந்து, இன்று வாராது நின்று விடுவீர்களோ என்று எண்ணித் திகைத்திருந்தேன்.

**கவிஞர் :** அரசே! எல்லாமிருக்க எனக்கு என்ன இடையூறு நேரப் போகிறது? ஏழைக் கவிஞனுக்குப் புதிதாக என்ன இடுக்கண் தோன்றப் போகிறது. எஞ்சினால் தினமும் எங்காவது கிடைக்கும் உணவும் கிட்டாது போகும். இது தவிர வேறு என்ன எனக்கும் என்

போன்றோர்க்கும் நேர்ந்து விடப் போகிறது! அரசராகிய தங்களை நல்லபடியாகச் சந்திக்க வேண்டுமே என்றுதான் நான் கவன்று கொண்டிருந்தேன். அரசே! தாங்கள் வேங்கியினின்று என்றைக்கு இங்கு வந்து சேர்ந்தீர்கள்?

**விக் :** இன்றுதான் வந்தேன். தங்களிடம் முன் சொல்லியிருந்தவாறு தங்களைச் சந்திக்கவும், மற்றும் படைத் தலைவர்களைக் கண்டு பணிக்கவும் இன்று இங்கு வந்து சேர்ந்தேன்.

**கவி :** வேங்கி நாட்டின் அரசரைக் கண்டீர்களா? சமாதானத்திற்கு ஏதும் ஒப்புக் கொண்டாரா?

**விக் :** நண்பரே, சென்ற திங்களன்று தூது சென்றேன். அவர் ஒத்து வரும் வழியாக இல்லை. இனி, நம் திட்டப்படிச் சக்கரக் கோட்டையைப் பிடிக்க முற்படவேண்டியதே. அதற்கான ஆயத்தங்களை நாம் இப்பொழுதே மேற்கொள்ள வேண்டும்.

**கவி :** நிலைமை முற்றி விட்டதால் போரில் இறங்கிவிட வேண்டியதே. வேங்கி நாட்டில் நாம் வெற்றி கொள்ளத் தக்க முறைதுறைகளை உள்ளது உள்ளவாறு தாங்கள் ஒற்றறிந்து வந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன்.

**விக் :** நண்பரே! மாறுவேடந் தாங்கி, வேங்கியரசரது படையில் சிறு பதவியிலிருக்கும் ஓர் ஆணையாளரை நட்புச் செய்து கொண்டேன். அவர் வழியாக அவர்கள் மேற்கொள்ளும் போராற்றல் முறைகளைப் பெரிதும் அறிந்து கொண்டேன். புதிய புதிய வாள் வீச்சு முறைகளை யெல்லாம் கற்றறிந்து கொண்டேன். அதற்கேற்ற தற்காப்பு முறையில் நம் படை வீரர்களைப் பழக்கி விட்டால், அவர்களை வெற்றி கொள்வது கடிதன்று. அவர்களிடம் நிறைந்திருந்த மற்றொரு விச்சையை மட்டும் யான் கற்றுக் கொள்ளாது வந்து விட்டேன்.

**கவி :** அரசே! கற்பவை கசடறக் கற்க வேண்டாவோ? ஏனோ அதனை மறந்தீர்கள்.

விக் : நண்பரே, அதை நானும் கற்க வேண்டியதில்லை; நம் படை வீரரும் அறிந்துகொள்ள வேண்டியதில்லை. அஃதென்ன என்று தெரிந்து கொண்டால் நீங்களும் அதனை விரும்ப மாட்டீர்கள்.

கவி : அவ்வளவு சிறந்த அஃது எத்தகையதோ ?

விக் : அஃதொன்றுமில்லை, கவிஞரே. கத்திகளைக் கீழே எறிந்து விட்டுப் புடனியில் கால்பட தலை தெறிக்கப் புறமுதுகிட்டு ஓடும் திறம்தான் அது. இதனையும் விரும்பிக் கற்க வேண்டுமோ ?

கவி : நன்று நன்று! அதனைக் கண்ணாலும் காணப் பொறுக்காதே தங்களுக்கு. அதனை நாம் கற்றறியானேன். அப்படியாயின் அவர்கள் அக் கலையில் தலை சிறந்த பயிற்சி பெற்றுள்ளனர் போலும்! அவர்களைக் கைது செய்ய இயலாது என்று சொல்லுங்கள்! ஓட்டமாய் ஓடி ஒளிவதில் ஒப்பற்ற தீரர்கள் போலும்!

விக் : மேலும், நான் அவர்கள் நாட்டு அமைப்பு, நகர் அமைப்பு, கோட்டை கொத்தளங்கள் அமைப்பு, பாதுகாப்பிடங்கள் ஆகிய பலவற்றையும் பழுதறப் பார்த்து வந்தேன். அரசரது படைகள் தங்கியிருக்கும் மறைவிடங்கள், அப் படைத் தலைவர்கள் இயல்பு முதலியவற்றைத் தெளிவாகத் தெரிந்து வந்தேன்.

கவி : எளியேனும் ஆங்குச் சில நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தது. சமயப் பூசல்கள் அங்கு நிறைந்துள்ளன. சோழர்க் கெதிராக வைணவர்களும் சமணர்களும் பௌத்தர்களும் சதியாற்றி வருகின்றார்கள் எனத் தெரியவருகிறது. சோழரைச் சார்ந்த வேங்கி அரசர் மீதும் அவர்கள் நாட்டம் செலுத்துகின்றனர் போலிருக்கிறது. சதிக் கூட்டங்கள் பலவாறாக வேங்கியிலும் சோழ நாட்டிலும் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

விக் : அப்படியா! நாம் செவி மடுத்ததும் உண்மைதான் போலும். நானும் அங்கு அவ்வாறே கேள்விப்

பட்டேன். அவர்களில் தலையாயுள்ளவர்கள் யாவர் என்பது நீங்கள் அறிந்துகொள்ள முடிந்ததோ?

கவி : ஒருவாறு அறிந்தேன் அதுபற்றி இப்பொழுது நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை. இனி நாம் போராற்றலுக்குத் தக்க ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

விக் : ஆம், அதை நாம் இப்பொழுதே ஆராய்வோம். ஜனநாதரே!

ஜன : அரசே! இதோ வந்துவிட்டேன்.

விக் : இராஜமையரும் இங்கு இப்பொழுது இருந்தால் அழைத்து வாருங்கள். பல இன்றியமையாத ஏற்பாடுகள் பற்றி முடிவு செய்துகொள்வோம்.

[ஜனநாதர் சென்று இராஜமையரையும் அழைத்து வருகிறார்.]

விக் : படைத் தலைவர்களே! வேங்கி நாட்டின் மீது நாம் போர் தொடுக்கவேண்டும் என்பது உறுதியாகி விட்டது. தற்பொழுது நம்முடைய படை போதிய அளவிற்குப் பெருகிவிட்டது என்று கருதுகின்றேன்.

ஜன : ஆம் அரசே? நம் வசம் போதிய படையிருக்கிறது. அவர்களுக்குச் சிறந்த பயிற்சியும் அளித்துள்ளோம். தாங்கள் எதற்கும் தயங்க வேண்டியதில்லை. துணிந்து செயலில் இறங்கலாம்.

விக் : நன்று. வேங்கி வீரர்கள் கையாளும் சில புதிய போர் முறைகளும யான் அறிந்து வந்திருக்கிறேன். அதனையும் நம் வீரர்களுக்கு அறிவித்துப் பழக்கி விடலாம். தற்காப்பிற்கும் எதிர்ப்பிற்கும் அஃது ஆக்கம் அளிக்கும்.

கவி : அதுதான் சிறந்தது. வெற்றி பற்றிய கவலைகளை நாம் விட்டொழிப்போம். ஆக்க வேலைகளில் முனைவோம்.

விக் : நானும் இன்றே திரும்பவும் வேங்கிநாடு செல்கின்றேன். என்னுடன் கூட நமது சிறந்த வீரனை சோமநாதனையும் அழைத்துச் செல்கின்றேன். வேங்கி நாட்டில் பல இடங்களில் நாம் மறைந்திருந்து,

குறிப்பிட்டதொரு நாளில் திடீரென்று தாக்க வேண்டும். நான் தக்க மறைவிடங்களையும், நம் படைவீரர்க்குப் போதிய இருப்பிடங்களையும், உணவுப் பண்டாரங்களையும் ஒன்று சேர்க்க ஆயத்தம் செய்கின்றேன். சோமநாதனை அவ்வப் பொழுது உரிய கட்டளைகளுடன் அனுப்புகின்றேன். அதன்படி செய்வீர்களாக.

**படை :** அங்ஙனமே செய்கின்றோம், அரசே. இடைக் காலத்தில் நம் வீரர்களுக்கு மேலும் சிறந்த பயிற்சி யளித்து வருவோம்.

**விக் :** அவ்வாறே யாகுக. நாளை நம் படைகளை அணி வகுத்து நிற்கச் செய்யுங்கள். புதிய முறைகளை நான் நாளை அறிவுறுத்துகிறேன். குறிப்பிடும் நாளன்று படையின் ஒரு பிரிவு ஜனநாதரின் தலைமையில் சக்கரக் கோட்டத்தை யடைந்து தாக்கவேண்டும். மற்றொரு பிரிவு இராஜமையர் தலைமையில் வேங்கி யைப் படையெடுக்க வேண்டும். பெரும்பாலும் நான் வேங்கிப் படையுடனேயே இருப்பேன். அடுத்த முழு மதித் தினத்தில் நாம் அனைவரும் இங்கு இன்று இருப்பது போலவே சந்திப்போமாக. அன்றே படை யெடுக்கும் நாள் குறிப்பிட்டுப் போரை மேற் கொள்வோம். கவிஞரே, தாங்களும் இன்று முழு வதும் என்னுடனேயே இருக்கலாமே ?

**கவி :** அரசே, அங்ஙனமே ஆகட்டும்.

**விக் :** நேரமாகிறது. அனைவரும் சற்றுக் கண்ணயர்வோம். நாளைக் காலை அணிவகுப்பு இருக்கிறது. உறங்கு வோமாக.

---

# வேங்கியும் வெற்றியும்

இடம் : வேங்கித் தலைநகர்
காலம் : நள்ளிரவு
நடிகர் : விக்கிரமன், படைத் தலைவர்கள், வேங்கி யரசர், கோட்டைத் தலைவர், காவலாள், படை வீரர்கள்.

**விக்கிரமன் :** படைத் தலைவரே! மாலையே புறப்பட்டுச் சென்ற ஜனநாதர் இத்தனைப் பொழுதில் படையுடன் சக்கரக் கோட்டை சென்றடைந்திருப்பாரன்றோ?

**இராஜமையர் :** இளவரசே! நாம் திட்டமிட்டபடி அவர் இவ் வேளை ஆங்கடைந்திருப்பார்.

**விக் :** பயிற்சி பெற்ற நம் படைவீரருக்கு நன்கு பணித்து விட்டீரன்றோ? இனி நடந்துகொள்ள வேண்டிய முறையைக் கருத்தாய்க் கவனிப்பீராக! நள்ளிரவில் நான் எழுப்பும் குழலொலி கேட்டதும், நாற்படை வீரரும் தத்தமக்குக் குறிப்பிட்ட கோட்டை வாயிலை நோக்கிச் சென்று, கோட்டைக்குள் நுழைந்து, கதவைத் தாளிட்டுக்கொண்டு விட வேண்டும்.

**இராஜ :** அங்ஙனமே பணித்துவிடுகிறேன், அரசே!

**விக் :** அத்துடன், படைவீரருள் ஒரு பகுதி அவ்வக் கோட்டையினுள்ளேயே இருக்குமாறும் செய்வீர். ஐந்தாம் அங்கத்துடன் தாங்கள் இருந்துகொண்டு அரண்மனை நோக்கிப் படையைச் செலுத்துவீராக.

**இராஜ :** நல்லது தலைவரே, அங்ஙனமே செய்வன்.

**விக் :** மேலும் கேளீர். யான் இடையேயிருந்து ஆகவேண்டு வனவற்றை அவ்வப்பொழுது கவனிக்கிறேன். நூற்றுவர் அடங்கிய சிறுசிறு படைகள், அமைச்சர்கள் தலைவர்கள் ஆகிய அறுவர் இல்லங்களையும் அடைந்து எதிர்பாரா வகையில் தாக்கி அவர்களைச் சிறையெடுக்கட்டும். இவை யாவும் ஒருமிக்க நள்ளிர

வில் யான் குழலொலிக்கும்பொழுது சரியாகச் சீரிய முறையில் முன்னேற்பாட்டுடன் நடைபெறவேண்டும். கவனத்துடன் இருங்கள். இப்பொழுதே நம் படைவீரர்கள் தங்கியுள்ள மறைவிடங்கட்குத் தக்க வீரர்களை யனுப்பி ஆயத்தம் செய்யுங்கள்.

[பரிகளில் ஏறிப் பிரிந்து செல்கிறார்கள். நள்ளிரவில் குறிப்பிட்டவாறு விக்கிரமனது படைவீரர்கள் நான்கு கோட்டை வாயில்களையும் அடைந்து, உள் நுழைந்து, கதவைத் தாளிட்டுச் சிலர் ஆங்காங்கே காவல் இருந்தனர். எதிர்பாரா இவ்வகைத் தாக்குதலைத் தாங்கமாட்டாத வேங்கி வீரர்கள் திகைத்தோடினர். பலர் சிறைப்பட்டனர். அரசாங்க ஆணையாளர்கள் அவரவர்களது இல்லங்களிலேயே சிறைப்பட்டனர். விக்கிரமன் ஈர்த்துச் சென்ற படைவீரர் அரண்மனையையும் வளைத்துக் கொண்டனர். அரண்மனைப் விக்கிரமன் வசப்பட்டது. இதற்குள் பொழுதும் விடியலுற்றது.]

**வேங்கியரசர் :** விக்கிரம வீரரே! தாங்கள் வீர மிக்கவர்கள் என்பதிற் றடையொன்று மிலது. ஆயினும் போர் முறைக்குப் புறம்பாக முன்னறிவிப்பின்றி, பேயுமுறங்கும் நள்ளிரவில் கோழைகளைப்போல் எதிர்ப்பட்டு, இப்பொழுது வெற்றிகொண்டவர்களாக நினைத்து இறுமாந்து நிற்கின்றீர்கள். இருப்பினும் நுமது வெற்றியை யான் ஏற்றுக்கொள்கிறேன்.

**விக் :** அரசரே! யான் உமக்குப் பின்னிட்டு நின்றிடுவேன் என்ற கருத்தான் திடீரெனத் தங்களைத் தாக்கி வெற்றி கொண்டதாகக் கருதற்க. நன்முறையில் யான் விடுத்த தூதைத் தாங்கள் புறக்கணித்து விட்டீர்கள். அஃதன்றி, எம்மை யொடுக்குதற்கான தீய முறைகளையும் ஆராயத் தலைப்பட்டீர். நேர்மையின்றியும் நடந்து கொண்டீர். அதற்கேற்ப நானும் செயலாற்றுமாறு நேரிட்டதுபற்றி வருந்துகிறேன். தாங்கள் காண்பது தங்கள் செயலின் உருவெளித் தோற்றமே யன்றி வேறன்று. நீங்களும் சிறந்த வீரர் என்பதை யான் ஒப்புக்கொள்கிறேன். உமக்கிருந்த

சோழர் தொடர்பு இன்றுடன் அற்றுவிட்டது. வேங்கி நாடும் அதன் அரசும் இனி எம்மைச் சார்ந்தது. இதனை இன்று மாலை பொதுமக்கட்கு அறிவித்து விடுவோம்.

**காவலாள் :** அருங்குண அரசே! படைத் தலைவர் ஜனநாதரும் சககரக கோட்டைத் தலைவர் தாராவர்ஷரும் மற்றும் பல படைஞர்களும் அரண்மனை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

**விக் :** வந்தவுடன் அவர்களை இங்கே வர விடுக.

[தாராவர்ஷரும் ஜனநாதரும் வருகிறார்கள்.]

**விக் :** ஜனநாதரே! கோட்டைத் தலைவர் உடன் வந்திருப் பது நோக்க, சக்கரக்கோட்டை நம் வசம் சார்ந்து விட்டதென்பது தெரிய வருகிறது.

**ஜன :** ஆம் அரசே! விடிய நான்கு நாழிகை யளவில் அக் கோட்டை நம் வசப்பட்டது. கோட்டைத் தலைவரும் நம் வெற்றியை ஒப்புக கொண்டார். வேங்கியும் தங்கள் வசம் சார்ந்து விட்டதென்பது அறிந்தோம். கோட்டைத் தலைவரையும் அழைத்துக்கொண்டே ஈங்குப் போந்தேன்.

**விக் :** நன்று, கோட்டைத் தலைவரே! தாங்களும் சிறந்த வீரரே. தாங்கள் இதுவரை வேங்கி யரசருக்கு உட் பட்டிருந்தது போலவே இனியும் உட்பட்டிருப்பீர். வேங்கியும் என்பாற் பட்டதே. எப்பொழுதும் போலவே தாங்கள் பணியாற்றுவீர். சோழர் சார் பில் இருந்த தாங்கள் எங்கள் வசமாகவே, சோழர் தொடர்பு உங்கட்கு இன்றுடன் அற்று விட்டது.

வேங்கியரசர் }
கோட்டைத் தலைவர் } அங்ஙனமே யாகுக. விக்கிரம அரசர் நீடு வாழ்க.

**விக் :** நண்பர்களே! இன்று முழுதும் நகரில் வெற்றிக் கொண்டாட்டங்கள நடைபெறட்டும். பிற்பகல் அரண் மனைக கொலுமண்டபத்தில் பொது மககளுககு யாம் அரசேற்றதை அறிவிப்போம். யாவும் சிறப்புற நடக் கட்டும்.

[கலைகிறார்கள்.]

## களம் 7

# பூண்டிப் போர்

| | |
|---|---|
| **இடம்** : | பூண்டிப் போர்க்களம் |
| **காலம்** : | பிற்பகல் |
| **நடிகர்** : | விஜயாதித்தன், படைத் தலைவர்கள், வீரர்கள், வேடம் புனைந்தவர்கள். |

[சோழர்மேல் படையெடுத்துச் சென்ற சளுக்கிய விஜயாதித்தன் பூண்டி என்னுமிடத்தில் சோழரோடு போரிட்டார். அப்போரில் வகைகேடாகச் சளுக்கியர் படையில் ஒரு பகுதி சோழர் வசம் சிக்குண்டது. விஜயாதித்தனுக்கு அப்போர் வெற்றியளிக்கவில்லை. பகல் முழுதும் கடும் போரிட்டுப் பிற்பகல் தனது படை வீட்டில் அமர்ந்திருக்கிறான். படைத் தலைவர் சிலரும் வீரர் பலரும் அருகு இருக்கின்றனர்.]

**விஜ** : விஜயாதித்தன் முன் நின்றும் பயன் என்ன? சளுக்கியரின் வீரப்புகழ் இருந்தமையென்ன? சளுக்கியர் இதுவரை பெற்றுவந்த வெற்றிகள் தாமென்ன? அவற்றையெல்லாம் இன்றைப் போர் நிகழ்ச்சிகள் அடியோடு துடைத்து விட்டனவே!

**படை** : இளவரசே! ஏதோ வகை கேடாக நேர்ந்து விட்டது. இதனால் தாங்கள் மனங் கலங்க வேண்டா. அடுத்து வரும் தாக்குதல்களில் நாம் வெற்றிபெறுவது திண்ணம்.

**விஜ** : படைத் தலைவரே! இதுவே என் தலைமையில் ஏற்றுக்கொண்ட முதற் தாக்குதலாகும். இதிலேயே மனங்குன்றி அவமானம் அடைய நேர்ந்துவிட்டதே! பகைவரின் அம்புகள் நம் உடலின் மீதே தாக்கிய

போதிலும், அவை யாவும் என் மனத்திலே யன்றோ தாக்கி யிருக்கின்றன. இனி, என் தந்தை முகத்தில் எவ்வாறு விழிப்பேன்? அமைச்சரை எவ்வகையான் எதிர் நின்று நோக்குவேன். யாவும் நிற்க, அத் துடுக்கன் இளவல் குறும்பு நோக்குடன் அன்றோ என்னைக் காண்பான்!

**படை:** இளவரசே! மனத்தை நெகிழ விடாதீர்கள். நாம் இன்றுடன் போரை நிறுத்தி விடவா போகிறோம். இன்னும் அடுத்தடுத்து எவ்வளவு தாக்குதல்கள் நடைபெற வேண்டுமோ? எவ்வாற்றானும் நாம் வெற்றி பெறுவது தவறாது.

[வெளியில் ஆரவாரம். ஆண் வேடம் கொண்ட ஒருவனையும் பெண் வேடம் புனைந்த ஒருவனையும் படை வீரர் சிலர் உள்ளே தள்ளி வருகிறார்கள். வேடம் புனைந்தவர் தலை குனிந்து நிற்கின்றனர். ஆணுடை தரித்த ஆளுக்கு உடலெல்லாம் செம்புள்ளி, கரும் புள்ளி, ஒரு புறத்து மீசை கழிக்கப்பட்டிருக் கிறது. தலைக்குடுமி ஐந்து விதமாக வெட்டிவிடப் பெற்றிருக்கிறது. பெண்ணுடை தரித்தவன் முகத்தில் மஞ்சளைப் பூசியிருக்கிறது. அவன் மீசை கழிக்கப்படாமல் இருக்கிறது. முகத்தின் ஒருபுறம் மட்டும் கருப்பு வர்ணம் பூசப் பெற்றி ருக்கிறது. இருவரும வெட்கத்தால் தலை குனிந்த வாறு கண்ணீர் வடிக்கின்றனர்.]

**விஜ:** நீங்கள் வீரர்கள்தாமோ! ஈதென்ன வேடிக்கை? எரிகிற தீயில் எண்ணெய் வார்பபதுபோல, விளையாடு வதற்கு இதுதானா தக்க தருணம்! இக் கோலத்தி லிருப்பவர்கள் யாவர்?

**ஒருவன்:** இளவரசே, சினங் கொள்ளாதீர்கள். நடந்ததை உணர்த்தவும் அறிவிக்கவுமே இங்கு வந்தடைந் தோம். சோழர்பாற் சிக்கிய நம் படை வீரர்களே இவர்கள் இருவிரும். இவர்களைப் பாருங்கள். சோழர்கள் இவர்களுக்கு இக் கோலத்தை உண் டாக்கிக் கழுதைமீது அமர்த்தி 'இவர்கள்தாம் ஆஹவ

மல்லனும் மல்லியும்' என்று கொக்கரித்துக் கூக்குர லிட்டு நம் படை வீட்டின் பக்கல் விரட்டிவிட்டனர்.

**விஜ :** என்ன ! அந்தக் கயவர்கள்தாம் அங்ஙனம் செய் தார்கள் என்றால், உங்கட்கு அறிவு எங்குப் போயிற்று ? என்னெதிரில் இவர்களைக் கூட்டி வந்து காட்ட எவ்வளவு துணிவு ? அகன்று செல்லுங்கள். ஊம்...........

**வீரர் :** அரசே ! மன்னித்தருள வேண்டும்.

[வேடம் புனைந்தவரும் மற்றையோரும் அகலுகின்றனர்.

**விஜ :** என்ன செருக்கு ! என்ன ஆணவம் ! ஒரு நாட் போரில் வெற்றி கொண்டுவிட்ட செருக்கா அச் சோழனை இவ்வாறெல்லாம் செய்யத் தூண்டியது ? வீரர்களே ! நீங்களே இதனை உணர்ந்து கொள்ளுங் கள். நாமெல்லோரும் பெண்களல்ல, கோழைகள் அல்ல, மூடவர்கள் அல்ல, போர்த் திறனற்றவர் களல்ல. இந்த அவமானம் நம் அனைவர்க்கும் ஒரு தூண்டுகோலாக விளங்கட்டும். இதே கோலத்தை அவர்களுக்கிட்டு நாம் களிக்குமாறு நடந்து கொள்வீர் களாக. இன்றிரவு ஓய்ந்திருந்து நாளை நம் வீரமனைத் தையும் ஓங்கிக் காட்டுவோம். என்னை இப்பொழுது தனித்திருக்க விடுவீர்களாக.

[எல்லோரும் அகன்றுவிட விஜயன் மட்டும் தனித்திருக்கிறான்.]

(தனக்குள்) ஒரு தலை சிறந்த வீரனுக்கு இதைவிட வேறென்ன தலைகுனிவு வேண்டும் ? வேடம் தரித்த வர்களை என் முன்னே கொணர்ந்து காட்டிவிட்டார் களே ! கேவலம் ! கேவலம் ! ஆம். இதுவும் ஒரு நன்மைக்கே. வீரர்கள் உள்ளம் இப்பொழுது கொதிப்பேறியிருக்கிறது. நாளை வெகு வீரச் செருக் குடன் தாக்குவார்கள். சோழரை வெற்றிகொள்ளும் வரை யான் கண்ணுறங்கேன். வஞ்சினம்! வஞ்சினம்! விஜயா ! வெற்றி கொள், அல்லது உயிர் இழந்து படு. இல்லை. இல்லை. வெற்றிதான், வெற்றிதான்.

## களம் 8

# செய்தியறிந்த செம்மல்

இடம்: வேங்கி அரண்மனை

காலம்: பகல்

நடிகர்: விக்கிரமன், கவிஞர், தானைத் தலைவர்கள், காவலாள், தூதுவன் சங்கமையன்.

[வேங்கி யரண்மனையில் விக்கிரமனும் பில்ஹணக் கவியும் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். பூண்டிப்போர் நிகழ்ச்சியில் ஏற்பட்ட அவமானந் தாங்காது சங்கமையன் என்னும் வீரன், இச் செய்தியை யறிவிக்க வேங்கி நாடடைந்து விக்கிரமனைக் கண்டு செய்தியறிவிக்க வருகிறான்.]

**கவிஞர்:** அரசே! தங்கள் திக்விஜயத்தின் முதல் வெற்றி கண்டாயிற்று. தொடர்ந்து வெற்றிக்கொடி நாட்டுவீர்களாக.

**விக்கிரமன்:** அன்பரே! தங்களை யொத்த உற்ற நண்பர்கள் உதவியின்றி யான் முன்னேறியிருக்க இயலுமா?

**கவி:** என்போன்றார் உதவி கிட்டி என் செய இயலும்? தங்கள் ஆற்றலே தங்கட்கு வெற்றித் திருவினைத் தந்தது. இனி, தாங்கள் இது போன்று பல நாடுகளையும் கைப்பற்றிப் பேரரசாகத் திகழ வேண்டும். இஃதே என் கோரிக்கை.

**விக்:** நண்பரே! சோழர்களோ இப்பொழுது என் தந்தையாரை எதிர்த்துள்ளார்கள். என் தமையனாரோ அவர்களை யெதிர்த்துப் போரிடச் சென்றுள்ளார். ஆங்கு யாது நிகழ்ந்ததோ? யாதும் யான் அறியக் கூட வில்லை.

கவி : அரசே! சளுக்கியர் அங்கும் வெற்றி கொள்ளா திருப்பரோ ?

விக் : வெற்றிகண்ட என் உடலும் உள்ளமும் தினவு எடுத்துக் குத்திட்டு நிற்கின்றன. ஏன் யானும் பிறி தொரு துறையில் சோழரை மடக்க முற்படக்கூடாது?

கவி : அரசே! யான் முன்பு கூறியபொழுது வெகுண்டீர் களே ? இப்பொழுது நீங்களே அதனைத் தங்கள் உள்ளக் கருத்தாய் வெளியிடுகிறீர்கள். படைப் பலத் தால் அவர்களை வென்றி கொள்வது அவ்வளவு எளி தன்று. அவர்களை உறவாடியே அடுத்துக் கெடுக்க வேண்டும்.

விக் : உற்றுழி உதவும் உத்தமரே! அஃதுண்மையே. சமய வாதிகள் பூசல் நிறைந்துள்ளது என்று கூறினீர் களே முன்பொருக்கால். அவர்களுடன் உறவாடி, அவர்கள் வலியையும் பயன்படுத்திக்கொண்டு, தக்க முறையில் ஆக்கந் தேடி, சோழரைப் பணிய வைக்க லாம் அல்லவா ?

கவி : அதுவும் ஏற்ற முறைதான். அவர்களும் சோழரைக் கவிழ்த்துவிட முயற்சிக்கிறார்கள். அவர்களைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுமானால், அவரது சூழ்ச்சி களிலும் சதிச்செயல்களிலும் நாமும் ஈடுபடவேண்டும். அவர்கட்கு உடந்தையாக இருக்கவேண்டும். ஏற்ற பொழுதும் பார்த்திருக்க வேண்டும்.

விக் : ஆம், அதுவே ஏற்றமுறை. முதலில் அவர்களை எவ்வாறு அடுப்பது என்பதுதான் நாம் முதலில் ஆராய வேண்டும். அச் சமயவாதிகள் எவரெவர் தலைமையில் பணியாற்றுகின்றனர் என்பது தாங்கள் அறிந்திருக்கக் கூடுமோ ?

கவி : அறிவேன். சதிகாரர் குழு வொன்று கங்கை கொண்ட சோழபுரத்தில் செயலாற்றிவருகின்றது. கங்கா பெருமானடிகள் தாம் அவர்களுக்குத் தலைமை தாங்குகிறார். அவர் சிறந்த தோள்வலி பெற்றவர் ; தேர்ச்சிப்பெற்ற போர்வீரர் ; எதற்கும் அஞ்சாத

தீரர். அமண மடத் தலைவரான அவர் சிவானுபூதித் தம்பிரான் என்ற மாற்றுருவில் விளங்கி வருகிறார். பௌத்த பிக்ஷு சுங்கமித்திரர் கைலையானந்தர் என்னும் பெயருடன் தம்பிரானார்க்கு முதற் சீடராய்ச் செயலாற்றுகின்றார். வைணவ ஆச்சாரியார் திருச் சிற்றம்பல நம்பி என்னும் திருநாமத்தோடு இரண்டாவது சீடராய் அமர்ந்துள்ளார். ஆழ்வார்க்கடியான் அப்பங்கராச்சாரியார் சுவாமிகள் அடியார்க்கு அடியாராய் சச்சிதானந்த பண்டாரம் என்னும் பெயர் தாங்கி அடிபணிந்து அன்புப்பணி புரிந்துவருகிறார். இங்ஙனம் அனைவரும் சைவ வேடந்தாங்கி சோழர் ஆதரவு பெற்றுச் சூழ்ந்து வருகின்றார்கள்.

**விக் :** ஓஹோ! அவர்கள் வெகுதூரம் முன்னேறி விட்டனர் போலும். அரசாங்க ஆதரவு பெற்றே அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்று வருகின்றனர் போலும். மரத்தின் நீழலில் இருந்துகொண்டே மரத்தைவெட்ட வழிகோலுகின்றனர் போலும். கவிஞரே! இவ்வளவு முன்னேற்பாடுகளோடு இருப்பவர்களுடன் எப்படி உறவு கொண்டாடுவது என்பதுதான் எனக்குத் தோற்றவில்லை. அதற்கு ஏதேனும் வழியிருக்கிறதோ?

**கவி :** இருக்கிறது. நான் முன்கூட்டியே அதற்கும் வழி கோலியுள்ளேன். ஆழ்வார்க் கடியானை நான் ஒருவாறு நண்பனாகப் பெற்றுள்ளேன். சதிக் கூட்டத்தினரையே அவன் தன் கைப்பாவையாக ஆட்டி வருகின்றான். அவனிடம் தங்களை இன்னார் என்று அறிவிக்காது 'இவர் ஒரு சிறந்த வீரர்; உங்கள் திருப்பணிக்கு மிகவும் உடந்தையாகவும் உதவியாகவும் இருப்பார்' என்று கூறி, உங்களை அவனிடம் ஒப்படைத்து விடுகின்றேன். தாங்களும் அவர்களையடுத்து, நம் கருத்துக்கு ஆகுமாறு பயன்படுத்திக் கொள்ளலாம். நானும் வெளியே யிருந்து பணியாற்றுகின்றேன்.

**விக் :** ஆம், இதுவே இசைவாகத் தோன்றுகிறது. அங்ஙனமே ஆக்கந் தேடவேண்டும்.

காவலாள் : அரசே! பூண்டியிலிருந்து ஒரு படைவீரன் தங்களைக் காண வந்திருக்கிறான். சங்கமையன் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.

விக் : யார்? சங்கமையனா! உடனே உள்ளே வர விடுக.

[சங்கமையன் உள்ளேவந்து வணங்கி நிற்கிறான்.]

விக் : சங்கமா! வெகு விரைவாக வந்தவன்போல் தோற்றுகிறதே? என்ன செய்தி? பூண்டியிலிருந்தா வருகின்றாய்? படை யெடுப்பு எவ்வாறு இருக்கின்றது? தமையனார் முன்னேறி விட்டாரா?

கவி : அரசே? எவ்வளவு பதட்டம். விரைந்துவந்த வேகம் இன்னும் இவ் வீரனுக்கு அடங்கவில்லை. இத்தனை வினாக்களுக்கும் அவன் உடனே எவ்வாறு விடை யளிப்பான்?

விக் : சங்கமா! அமைதியாகவே கூறுவாய். யாது நேர்ந்தது? நீ ஏன் இங்கு வந்தாய்?

சங்க : அரசே! என்னை யாரும் இங்கனுப்பவில்லை. மனம் பொறாது யானே தங்களைக் காண வந்தேன்.

விக் : நீயும் படைகளுடன்தானே சென்றாய்? உனக்கு யாது நேர்ந்தது?

சங்க : அரசே! எனக்கு ஏதாகிலும் நேர்ந்தால் தங்கள் பொன்னான நேரத்தை வீணாக்குவேனா? சளுக்கியப் புகழுக்குத்தான் இழுக்கு நேர்ந்துவிட்டது.

விக் : என்ன? எமது புகழுக்கா? சளுக்கியரின் வீரத்திற்கா?

சங்க : பூண்டிப் போரில் நம் படையின் ஒரு பகுதி சோழர் வசம் சிறைப்பட்டுவிட்டது. நம் படைகள் பின்வாங்க நேரிட்டது. மேலும் அவர்கள் அவமானச் சின்னம் ஒன்றைத் தோற்றுவித்துக் கழுதைமீது ஏற்றுவித்து அதனைத் தங்கள் தந்தையார் புனிதமான பெயரால் அழைத்தார்கள். நமது குலப் பெருமையே அழியவிருக்கிறது. என் மனம் பொறுக்கவில்லை. இரவோடு விரைந்தோடி வந்து தங்களிடம் செய்தி யறி

விக்க வந்தேன். மன்னியுங்கள். தங்கள் தமையனார் தலைமையில் வெற்றி ஏற்படுமா என்று நான் அஞ்சுகிறேன். சளுக்கிய குலப் பெருமை யழிந்து விடாதவாறு காப்பாற்றுங்கள்.

**கவி :** சங்கமா! நீயே சிறந்த வீரன். செய்யவேண்டுவதையே வகையாய்ச் செய்துள்ளாய். அரசே! தாங்கள் இதனை உடனே கவனிக்கவேண்டும்.

**விக் :** சங்கமா, நீயே சளுக்கியர் பெருமையை நிலைநாட்டியவனாகின்றாய். கவிஞரே, இவன் என்பால் மிகவும் அன்புகொண்டவன். இவனது முன்னோர்கள் காலம் முன்னிட்டு இவர்கள் குடும்பமே நமக்குத் தொண்டு புரிந்து வருகின்றது நல்லது, சங்கமா, இனி நீ கவலைப்பட வேண்டியதில்லை. விடுதிக்குச் சென்று உணவு கொண்டு இளைப்பாறுவாய்.

[சங்கமையன் செல்கின்றான்]

**கவி :** அரசே! தாங்கள் உடனே படைதிரட்டிப் போர் முனைக்குச் செல்ல முற்படுங்கள். நாம் முன்பு யோசித்தவைகளைப் பிறகு கவனிப்போம். குலப் பெருமை யழியாது பாதுகாக்க வேண்டியது நம் பொறுப்பு. வெற்றிகொள்ள வேண்டிய பொறுப்பு விஜயனையே சாரவேண்டியதானாலும், ஏதேனும் இழுக்கு ஏற்பட்டால் அஃது உங்களையும் சாருமன்றோ?

**விக் :** ஆம், ஆம். கூடாது, கூடாது. ஆம், வேண்டும் வேண்டும். சளுக்கிய குலத்தின் புகழை நிலைநாட்டியே யாகவேண்டும்; அழிய விடக்கூடாது, கூடாது. ஆம், படைத் தலைவர்களே! உடனே சென்று நம் வசமுள்ள படையனைத்தையும் ஒருங்கு திரட்டி அணிவகுத்து நிற்கச் செய்வீர். நாம் இப்பொழுதே பூண்டி செல்லவேண்டும். சோழர்கள் முன்னேறுகிறார்களாம். உடனே நாம் அதைத் தடுத்தாகவேண்டும். இராஜமையர் இவண் இருக்கட்டும். ஜனநாதரே! புறப்படும், புறப்படும். நாம் சென்று நம் வெற்றிக்கு வகை காண்போம். விரையுங்கள், விரையுங்கள்.

களம் 9

# தந்தையும் தனயனும்

**இடம்:** கொப்பம் படைவீடு

**காலம்:** மாலை

**நடிகர்:** விக்கிரமன், குமாரையன், சோமேசுவரர், படைவீரர்கள்.

*[படை திரட்டிக்கொண்டு விக்கிரமனும் படைவீரர்களும் பூண்டியை நெருங்கி விட்டனர். விக்கிரமனை எதிர்நோக்கிக் குமாரையன் என்னும் வீரன் ஓடோடியும் வருகின்றான்.]*

**விக்கிரமன் :** குமாரையா, நம் படைகள் இப்பொழுது எவ்விடமிருக்கின்றன? சோழர் படைகள் எங்கிருக்கின்றன? பூண்டித் தாக்குதலுக்குப் பிறகு வேறேதேனும் நிகழ்ச்சியுண்டோ?

**குமாரையன்:** அரசே! தாங்கள் வருவீர்கள் என்றே இங்கு நான் காத்து நிற்கின்றேன். சங்கமன் உரிய காலத்தில் தங்கட்குச் செய்தி விடுத்து விட்டான். சோழர் படைகள் கொப்பம் என்னும் இடத்தில் இருக்கின்றன. அதற் கண்மையிலேயே நம் படைகளும் படைவீடு அமைத்துத் தங்கி யிருக்கின்றன. இரண்டு நாட்களாக நடந்த போரை இடையறாது முன் நின்று நடாத்தியதில் இளவரசர் மிகவும் சோர்ந்திருக்கிறார். அவர் உடல் நிலையும் சற்று கேடுற்றுள்ளது. நேற்றைய போரில் தளபதிகள் கண்டப்பையரும் கங்காதரரும் இறந்து பட்டனர்.

**விக் :** ஆ! அவர்கள் இருவரும் இறந்துபட்டனரா? போராற்றல் மிகவும் படைத்த அவர்களா இறந்து விட்டார்கள்? கொடிது, கொடிது! ஆயின் இப்பொழுது அவர்களையொத்த தகுதியான தளபதிகள் வேறு யாருமே இருகக மாட்டார்களே?

**குமா :** ஆம், தமையனார்தான் தனி நின்று மிகவும் பாடு படுகின்றார். தந்தையாரும் இப்பொழுது இங்கு வந்துள்ளார்கள்.

**விக் :** அப்படியாயின் நாம் நேரே விரைந்து கொப்பம் படை வீட்டிற்குச் செல்வோம்.

[விக்கிரமன் முன் செல்ல, படைகள் பின் தொடர்ந்து படை வீட்டை அடைந்தனர்.]

**சோமேசுவரர் :** விக்கிரமா! வேங்கியில் நீ பெற்ற வெற்றியை யறிந்து மகிழ்ந்தேன். எங்ஙனமோ இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் அறிந்து நீயே உதவிக்கு இங்கு வந்துவிட்டது பற்றி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

**விக் :** தந்தையே! நான் மேற்கொண்டு சென்ற கருத்து தங்கள் ஆசியால் நிறைவேறியது. வேங்கியை வென்று விட்டேன். அதன் பின் திரும்பலாம் என்று நினைத்திருக்கும்போது சங்கமையன் வந்து செய்தியறிவித்தான். உடனே படைதிரட்டி ஓடோடியும் வந்தேன். தமையனார் உடல் நிலை கேடுற்றுள்ளது என அறிகிறேன். அவர் இரு தினங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். இந்த இரண்டு நாட்களுக்கு மட்டும் படைத் தலைமை தாங்க எனக்கு உத்தரவு அளியுங்கள், தந்தையே.

**சோமே :** விக்கிரமா, மிக்க மகிழ்ச்சி. அங்ஙனமே செய்வாயாக. இன்றிரவு விஜயனிடம் கூறி அவனையும் ஓய்வு எடுத்துக் கொள்ளச் செய்கிறேன். தலைமை தாங்கி நீ வெற்றி பெறுவாயாக.

**விக் :** அங்ஙனமே செய்வேன், தந்தையே. யான் கொணர்ந்துள்ள படைகளுடன் நான் முன்னேறி, சோழரைச் சிதறடிக்கின்றேன். தங்கள் நல்லாசியும் சளுக்கியரின் வீரமும் என்பால் எப்பொழுதும் இருக்கட்டும்.

**சோம :** விக்கிரமா, வெற்றி பெறுவாயாக.

---

## களம் 10

# யானை மேற்றுஞ்சிய சோழன்

**இடம் :** கொப்பம் போர்க்களம்

**காலம் :** பகல்

**நடிகர் :** விக்கிரமன், படைவீரர், இராஜாதி ராஜ சோழர் இராஜேந்திர சோழர், சோழ அமைச்சர், சோழர் படைவீரர், ஏனை யோர்.

[சளுக்கிய வீரர்கள் விக்கிரமனால் திறமை யாக நடத்தப்பெற்று, முதல்நாள் போர் வெற்றி தோல்வியின்றி நடைபெற்றது. அது குறித்து சோழர் தமது படையைப் பெருக்கி, மறு நாளன்று சோழர் பேரரசர் இராஜாதி ராஜன் தானே முன் நின்று படை நடத்துவதாக உறுதி கொள்கிறார். மறுநாட் போரில் சோழர் புறம் இராஜ ராஜனும், சளுக்கியர் புறம் விக்கிரமனும் முறையே தலைமை தாங்க, போர் மிகவும் கடுமை யாக நடைபெறுகிறது.]

**இராஜாதிராஜன் :** வீரர்களே! இன்றும் அவ் இளவல் தலைமை கொண்டுள்ளான் போலும். மிக்க கவனமாக இருங்கள். சோழ மண்டல வீரர்களே! உங்கள் வீரம் சிறந்தோங்கட்டும். புலிக்கொடி வானளாவப் பட் டொளி வீசிப் பறக்கட்டும். உங்கள் போர்த்திறன் உச்ச நிலையை யடையட்டும். முன்னேறுங்கள், முன்னேறுங்கள். பரிகளைப் பரிந்து செலுத்துங்கள். கரிகளைக் கவனமாய் நடத்துங்கள். கூரிய வாட்களை விரிவாய் வீசுங்கள். வாட்களில் மின்னொளி வீசட்டும். இன்று சளுக்கிய வீரரைக் கீரைபோல் களைய வேண்டும். உங்கள் வீரம் ஓங்குவதாக.

[என்றவாறு இராஜாதிராஜ சோழன் வீரர்களை ஊக்குகின்றான்.]

**விக்கிரமன் :** சளுக்கிய வீரர்களே! நேற்று நிலவிய ஊக்கம் இன்றும் நிலவட்டும். ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. நாம் வெற்றி வீரர்களாகத் திகழவேண்டும். எதற்கும் அஞ்சாதீர்கள். இன்று சோழர் பேரரசரே முன் வந்துள்ளார். இன்று நாம் வெற்றி பெற்றால் பெறற்கரிய பெற்றியைப் பெற்றவராவோம். வீசுங்கள் வாட்களை. பொழியுங்கள் அம்பு மாரி. விட்டெறியுங்கள் வேல்களை. வஞ்சினம் கொள்ளுங்கள். ஈது வெஞ்சமர் நிலையமாகட்டும். இதோ, இதோ பாருங்கள். சோழ வீரர் ஒருபுறம் சரிகிறார்கள். என் பின்னே முன்னேறுங்கள். என் இரு புறங்களிலும் தொடர்ந்து வாருங்கள். இதோ, சோழனை அண்மி விட்டோம். ஊம், அஞ்சேல். கால்களை ஊன்றி நின்று முன்னேறுங்கள். இப்பொழுதே வெற்றி முழக்குங்கள். ஊம்........

[சோழர் படை கடுமையாகப் போரிடுகின்றது. தொகைமிக்க அவர்கள் படையிலும் பலர் கை கால் ஒடிந்து மடிந்தனர். இருப்பினும் உடனுக்குடன் வீரர்கள் வந்து சேர்ந்த வண்ணம் எதிர்க்கிறார்கள். விக்கிரமனும் அஞ்சாது எதிர் நின்று அம்புமாரி பெய்தும், வேலெறிந்தும் சோழ வீரர் பலரைக் கொன்று குவித்த வண்ணமிருக்கிறான்....சோழர் படையில் சிறிது குழப்பம். இராஜாதிராஜன் அதை யறியப் பின் புறம் திரும்புகிறான். விக்கிரமன், இராஜாதிராஜன் கழுத்தை நோக்கிக் குத்துவாளை வீசுகிறான். குறிபார்த்த இடத்தில் வாள் தைக்கிறது. தானமர்ந்திருந்த யானைமீதே இராஜாதிராஜன் சரிகிறான். அங்ஙன மிருந்தவாறே போர்க்களத்திலேயே உயிர் நீத்தான். சோழ வீரர்கள் கண் கலங்கிக் கண்ணீர்விட்டு ஓலமிடுகின்றனர். இராஜாதிராஜன் இளவலாகிய இராஜேந்திரனும் அருகிருந்தான்.]

**சோழ அமைச்சர் :** ஒப்பற்ற வீரர் இராஜாதிராஜன் விதி வசத்தால் போர்க்களத்தே உயிர் துறந்தார். யானை

மேலிருந்தவாறே உயிரிழந்தார். வீரராகிய இச் சோழ வரசரை உலகம் உள்ளளவும் "யானை மேற்றுஞ்சிய மன்னர்" என்று போற்றுக. இந்நிலையில் சோணாடு அரசற்றதாக நிற்கிறது. அதற்கிடமில்லை. ஏன், இளவரசர் இங்குத்தானே இருக்கின்றார்? இராஜேந்திர சோழனுக்கு இங்கேயே முடி சூட்டுவோம்.

[இராஜேந்திரனுக்கு அமைச்சர், மணி முடியைச் சூட்டுகின்றார். வீரர்கள் வாழ்த்துக் கூறுகிறார்கள்.]

**சோழ வீரர்கள் :** நீடு வாழ்க! இராஜேந்திர பூபதி நீடுவாழ்க! பொன்னுலகெய்திய இராஜாதிராஜ சோழர் புகழ் நிலைக்க!

**சளுக்கிய வீரர்கள் :** ஓங்குக சளுக்கியப் பேரரசு! வீழ்க சோழவரசு! வீழ்க சோழவரசு!

**விக்கிரமன் :** வீரர்களே! இன்னும் மிகுதியிருக்கிறது. சோழப் பேரரசர் ஒழிந்துபட்டார். இருப்பினும் உடனே அவர் இளவல் தோன்றிவிட்டான் பாருங்கள். பாயுங்கள். பாய்ந்து செல்லுங்கள். சோழர் படையை கலக்குங்கள்.

[இரு திறத்தாரும் வெற்றி தோல்வியின்றியே மேலும் போராடுகின்றனர். சோழர் முன்னிலும் கடுமையாக முன்னேறினர். சளுக்கியரும் பின்னிடவில்லை. மாலைநேரம் அண்மியது. இருளும் சூழத் தொடங்கியது. அன்றையப் போர் நிகழ்ச்சிகளும் நிறுத்தப்பட்டன. விக்கிரமனும் தந்தையை யடைந்து பாராட்டப் பெற்றான். அன்றுடன் தன் தலைமையை நீத்து, முன்போல் தமையனே அப் பொறுப்பை யேற்கச் செய்து, விக்கிரமன் ஓய்வு பெற்றான்.]

---

# அங்கம் 2

## களம் 1

## கொள்ளிடக் கரைதனிலே

| | |
|---|---|
| இடம் : | கொள்ளிடக் கரை |
| காலம் : | பிற்பகல் |
| நடிகர் : | சோழ மாதேவி, நந்தினி, குடவரையர், விக்கிரமன், சோழ வீரர்கள், பகை வீரர்கள். |

[கொள்ளிடக் கரையில் மூடு பல்லக்கு தாங்கிக் கொண்டு செல்கின்றனர். முன்னும் பின்னும் போர்வீரர்கள் பலர் பாதுகாவலாகச் சென்று கொண்டிருக்கின்றனர்.]

(பல்லக்குக்கு உள்ளிருந்து)

சோழ மாதேவி : நந்தினி! இக் கொள்ளிடக் கரையின் குளிர்ந்த காற்று நம் மீது வீசுவது நமக்கு எவ்வளவு இன்பம் தருகின்றது! அம்மம்மா! அது மட்டுமா? திடீரென்று மல்லிகையின் நறுமணம் நம் நாசியில் தாக்குகின்றது. அந் நறுமணம் நம்மை மெய் மறந்து மயக்கமுறச் செய்யும் போலிருக்கிறது. அம்மம்மா, என்ன மணம்!

நந்தினி : மாதேவி! இந்த மணத்திற்கே மயக்கம் வருமென்ருல், இன்னும் உனக்கு நடக்கப் போகும் மற்ெருரு மணத்திற்கு இன்னும் எவ்வளவு மயக்கம் வருமோ? ஆஹா! உன் முகத்தில் படிந்துள்ள தேனீக்கள் ரீங்காரம் செய்வது எவ்வளவு இன்னிசையாக இருக்கின்றது! உன் முகத்திலும் தேன் படிந்

திருக்கிறதே! தேன் படிந்ததால் உனக்கு இன்பம் ஊட்டும் ஆடவன் அண்மையிலேயே காத்திருக்கிருன் என்பதை முன்கூட்டியே அறிவிக்கிறது இல்லையா? உனக்குக் கடிமணம் நடக்கும் நாள் கடிதில் கடுகி வருவதை அறைகூவி அறிவிக்கிறது. இல்லையா?

**மாதேவி:** போடி, போ! எப்பொழுதும் உனக்கு இந்தக் கேலிதான். நந்தன வனங்கள் நிறைந்துள்ள இந்தப் பகுதியில் தேனீக்களுக்கு என்ன குறைவு? பூவின் நறுமணம் வீசும் பொழுதே அப் பூக்களில் தேன் நிறைந்திருக்கின்றது என்று அறிய முடியவில்லையா? தேன் நிறைந்திருந்தால் தேனீயை வாவென்று அழைக்கவும் வேண்டுமோ?

**நந்தினி:** உன் முகத்தில்தான் எத்தனை தேனீக்கள் படிந்துள்ளன! தேனீக்கள் உன் முகத்தையே ஒரு மலராகக் கருதித் தேன் நுகர முயற்சிக்கின்றனவோ?

**மாதேவி:** நாமும் இதுவரை எத்தனையோ முறை பயணம் செய்திருக்கிறோமே, இது போன்று மாலை நேரத்தில் என்றைக்காவது பிரயாணம் போயிருக்கிறோமா? இம் மாலை நேரத்தில் மாமலர்களின் நறுமணமும், மாம்பிஞ்சுகளின் செழுஞ்சுவை நிறைந்த மாமணமும் வீசுவதை நாம் இன்றுதான் நுகர்கிறோம். இனி நாம் பயணஞ் செய்வதானால் இதுபோல் மாலையிலேயே செய்யவேண்டும்.

**நந்தினி:** மாதேவி, இப்பொழுது நமக்கு வெகு இன்பமாய்த் தானிருக்கிறது. ஆனால் இவ்வாறு நீங்கள் இந்த மாலையில் புறப்படவேண்டும் என்று பிடிவாதமாகக் கூறியபோதே சற்று நடுக்குற்றேன். இன்று இரவு முழுவதுமன்றோ நாம் பயணம் செல்ல வேண்டும்?

**மாதேவி:** நம் நாட்டுப் பகுதியில் நாம் பயணம் செய்வதற்கு இரவென்ன, பகலென்ன? போர் வீரர்கள் பத்துப் பதின்மர் பின்தொடர்ந்து வரும்போது, நாம் எதற்கு அஞ்சவேண்டும்?

**நந்தினி :** இருப்பினும் உன் போன்ற நெஞ்சுரம் வேறெவர்க்கும் வாராது?

[வெளியே ஏதோ ஆரவாரம் கேட்கிறது.]

**மாதேவி :** நந்தினி! ஈதென்ன ஆரவாரம்? அம் மாந் தோப்பிலிருந்து பலர் ஓடி வருவதுபோல் தோன்ற வில்லையா?

**நந்தினி :** ஆமாம், தேவி, ஐயையோ, என்ன துன்பம் நேரப் போகிறதோ? இருளும் சூழும் நேரமாக இருக்கின்றதே? யாரேனும் கள்வராயிருப்பரோ?

**மாதேவி :** நந்தினி, நந்தினி, என் அருகு வா. எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது. அவர்கள் நம்மைத் தாக்குவார்களோ?

**நந்தினி :** அல்லது தூக்கியே செல்வார்களோ? (திரையை நீக்கி) ஐயா, குடவரையரே, ஈதென்ன ஆரவாரம்?

**வீரன் :** அம்மணி, யாரோ கள்வர் கூட்டம் போலிருக் கிறது; நம்மை விரட்டி வருகிறார்கள். நீங்கள் அஞ்ச வேண்டாம். அவர்கள் இப்பொழுது என்ன ஆகிறார் கள் என்று நீங்களே பாருங்கள்.

**மாதேவி :** இப்படியே பல்லக்கைக் கீழே இறக்கி வைத்து விடுங்கள். நந்தினி! வந்ததே ஆபத்து. இளங்கன்று பயமறியாது என்பது உண்மையாகி விட்டதே! நான்தானே இப்பொழுதே புறப்பட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தேன்.

**நந்தினி :** தேவி, கவலைப்படாதே. நம் வீரர்கள் அவர்களை ஒரு நொடியில் விரட்டி ஓட்டி விடுவார்கள்.

**குடவரையார் :** அம்மணி, அஞ்சாதீர்கள். இதோ நெருங்கி விட்டார்கள். நம் வீரர்களும் அவர்கள் மேற் பாய் கிறார்கள்.

[பல்லக்கு கீழே இறக்கி வைக்கப்பட்டது. சோழர் பாதுகாவல் வீரர்களும், விரட்டி வந்த வீரர்களும் கத்தி வீசியும், சிலம்பம் சுழற்றியும் ஒருவருடன் ஒருவர் போரிடுகிறார்கள். இரு புறமும் பலர் சாய்ந்து வீழ்கிறார்கள்.

எதிர்பாராத வகையில் அவ்விடம் மாற்றுருவேற்ற விக்கிரமன் பரியேறி வந்து கொண்டிருக்கிறான். கலவரம் கேட்டு விரைந்து வருகிறான்.

**விக்கிரமன் :** (தனக்குள்) சற்றுத் தொலைவில் ஏதோ ஆரவாரம் கேட்கின்றது. வீரர்கள் பலர் சண்டையிடுகிறார்கள். கீழே பல்லக்கு ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. பல்லக்குத் திரைச் சீலையை நோக்க அதனில் சோழர் வேங்கைச் சின்னம் காணப்படுகிறது. சரி, யாரோ அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலும். மூடு பல்லக்காக இருப்பதால் அதனுள் பெண்பாலார் இருப்பர் போலும். வழியில் கள்வர் மடக்கி விட்டனரோ? நாமும் விரைந்து சென்று, கூடுமானால் இவர்களுக்கு உதவுவோம்.

[பரியை முடுக்கி விடுத்து, விரைவில் அவர்களை அண்மினான். உடைத் தோற்றத்தால் சோழப் படைவீரர்களையும், தாக்குவோரையும் குறிப்பாய் அறிந்து கொண்டான். கண்ணிமைக்கும் அளவில் தன் வாளை யுருவி எதிரிகள் மேற் பாய்ந்து பொழிந்தான்.]

**குடவரையர் :** வீரர்களே! கை சளைக்காதீர்கள். தாக்குங்கள், தாக்குங்கள்.

**பல்லக்குக்குள் :** நந்தினி, கவனித்தாயா? புதிய வீரர் ஒருவர் நம் பக்கம் சேர்ந்து எதிரிகளைத் தாக்குகின்றார். நன்றாய்க் கவனி. தலை சிறந்த வீரர் போலிருக்கிறது. ஆ, என்னே அவரது கை வீச்சு! கால்களும் தாம் எவ்வாறு வலசாரி இடசாரியாகச் சுழலுகின்றன! கத்தி வீச்சு எங்குப் பாய்ந்தது என்பது, தலையிழந்த முண்டம் கீழே சாயும்போதுதான் தெரிகிறது.

**குடவரையர் :** வீரர்களே! நமக்குப் பக்கபலம் வந்து விட்டது. இன்னமும் வந்து கொண்டிருக்கின்றது. காலை ஊன்றி நில்லுங்கள். வீசுங்கள்.

[விக்கிரமன் வீராவேசங் கொண்டவனாகக் கத்தி வீசி, கயவரைக் கீழே வீழ்த்துகிறான். சோழ வீரர்களும் ஊக்கமாகப் போர் புரிகிறார்கள். சிறிது நேரத்தில் வேற்றுவர் பலர் உயிரிழந்தனர். பலர் சிலராகி, எஞ்சிய சிலரும் ஓட்டமெடுத்து ஒளிந்தனர்.]

**குடவரையர் :** ஐயா, வீரரே! தக்க சமயத்தில் தெய்வம் போல் வந்து உதவினீர்கள் போராற்றலில் தாங்கள் விஜயனே போலும்! எந்த நாட்டு வீரரோ? தாங்கள் யாரென அறிந்து கொள்ளலாமோ?

**விக்கிரமன் :** நீர்தாம் இவ்வீரர்களுக்குத் தலைவர் போலும். முதலில் நீங்கள் யாவர் என்பது யான் அறியலாமோ?

**குட :** ஐயா, தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். நாங்கள் யாவர் என்றுகூட அறிந்து கொள்ளாமல் உதவியதற்கு எங்கள் நன்றி எந்நாளும் உரித்தாகுக. ஐயா, நாங்கள் சோழவரசனின் பாதுகாவல் வீரர்கள். திருவானைக்காவிலிருந்து எங்கள் தலைநகருக்குச் சென்றுகொண்டிருக்கிறோம். எங்கள் இளவரசர் வீரராஜேந்திரரது புதல்வியார் மாதேவிப் பிராட்டியாருக்குப் பாதுகாவலாக வந்து கொண்டிருக்கின்றோம். வழியில் எதிர்பாரா வகையில் இத் தாக்குதலுக் காளானோம். தங்கள் உதவி கிட்டியிராவிட்டால் யாது நேர்ந்திருக்குமோ?

[இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த மாதேவியும் நந்தினியும் பல்லக்கினின்றும் வெளியே வருகிறார்கள்.]

**மாதேவி :** நந்தினி, இவ் விசயர்க்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம் என்பதை அறிவிப்பாய்.

**விக்கிரமன் :** வீரரே! சோணாட்டு இளவரசியைப் பற்றிச் செவியுற்றிருக்கிறேன். நேரில் அவர்களை இவ்வகை யான் காணப்பெறும் பெரும் பேறு கிட்டும் எனக் கனவிலும் கருதவில்லை. தக்க இடத்திற்கே உதவ நேர்ந்தமை பற்றி மகிழ்ச்சி யடைகிறேன்.

**மாதேவி :** நந்தினி, இவர் வந்து தக்க தருணத்தில் உதவி யிராவிடில் நாம் இப்பொழுதில் சிறைப்பட் டிருப்போம். நம்மைச் சிறை நீக்கிய இவ்வீரர் யார் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டாவோ? கேட்டுச் சொல், நந்தினி. என்ன, நீயும் கீழும் மேலும் பார்த்து நிற்கின்றாய்?

**விக் :** அம்மணி, நானொரு நாடோடி. யாதும் எனது ஊர், யாவரும் எனது கேளிர். யான் ஒரு சிறிது வாட் பயிற்சி பெற்றிருந்தேன். அதனைச் செயலாற்று வதற்கு நேரிட்ட நல்வாய்ப்பு இது. இவ் வாய்ப்பில் என் திறமையை நானே சோதித்துக் கொண்டேனே யன்றி, வேறொன்றும் நான் செய்துவிட்டதாகக் கருதவில்லை.

**மாதேவி :** நந்தினி, இவ்வீரரின் தன்னடக்கத்தைத்தான் கவனித்தாயா? இவர் சாதாரணப் போர் வீரர் அன்று. அரச குடும்பத்திற் பிறந்த காளை இளைஞர்; யாதோ காரணம் கருதி மறைத்துக் கூறுகிறார். அவர் யாவரே யாயினும் நாம் அவர்க்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். நம்முடன் கூடவே அவரும் நம் தலைநகர் வரை வந்து நமதரண்மனையில் சின்னாட் கள் தங்கியிருந்து செல்லலாம் என நான் கேட்டுக் கொள்வதாகக் கூறு, நந்தினி!

**விக் :** தேவியாருக்கு அச்சம் அகலவில்லை போலும். இனி எவரும் தங்களை மடக்கமாட்டார்கள். தங்கள் போர் வீரர்கள் தற்காத்துக் கொள்வதில் தலைசிறந்து விளங்குகிறார்கள். நானும் எதற்குக் கூட வர வேண்டும்?

**மாதேவி :** நாம் கோருவதை மாறுபாடாகக் கொள்கிறார் போலும். அச்சங் கருதி அவர் உடன் வரவேண்டும் என்று கொள்ளவில்லை என்று சொல், நந்தினி, அவரிடம். அரச குடும்பத்தவராகிய நமது நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளவும், அரசரைக் கொண்டு அவர்க்குத் தக்க மரியாதைகள் செய்

விக்கவும்தான் தலைநகருக்கு அவரை அழைத்தேனே யொழிய, வேறெதற்கு மில்லை என்று கூறடி.

**விக் :** மாதேவியார் கூறுவது இயல்புதான். ஆனாலும் தற்போது நான் பின்தொடர்ந்து வர இயலாதவனாக இருக்கின்றேன். வேறோரிடத்திற்கு விரைந்து கொண்டிருக்கிறேன். பிறிதொருக்கால் வாய்ப்பு நேரும்போது தலைநகருக்கு வந்து நானே அறிமுகம் செய்து கொள்ளத் தயங்கமாட்டேன்.

**மாதேவி :** (தன் கழுத்தில் அணிந்துள்ள முத்துமாலையைக் கழற்றிக் கொண்டே) நந்தினி, இவ் வீரருக்கு நாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்? அவரும் அங்கு வர மறுக்கிறார்.

**விக் :** அம்மணி, நான் கைம்மாறு கருதும் கயவன் அல்லன். பயன் கருதிப் பணி புரிபவனும் அல்லன். அறவிலை வாணிகனும் அல்லன். என் கடமையைச் செய்த தற்குக் கைம்மாறு எதற்கோ?

**மாதேவி :** செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை. நாம் செய்ந்நன்றி மறவாச் செழுங் குலத்தில் தோன்றி யோர் என்பது அவர் அறியாரா? கைம்மாறாகக் கொள்ளாது, நன்றியறிதலுக்கு உரியதாக நான் தரும் இம் முழு முத்து மாலையை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன் என்று கூறுவாய், நந்தினி.

**விக் :** என்னை ஏற்றுக் கொள்ளுமாறு நந்தினி கேட்க வேண்டாம்! தேவியார் கேட்டுக் கொள்வதே போது மானது. மன்னிக்கவேண்டும். அடையாளம் வைத்து நினைவு கொள்ள வேண்டுமென்பதில்லை. நான் எதனையும் எவ்வகையானும் பெற்றுக் கொள்ள ஒருப்படேன். தேவியார் என்னை மன்னிக்கட்டும்.

**மாதேவி :** நந்தினி, அவர்க்கு நான் ஏதும் அளியாது போகேன். நம்மைச் சிறை நீக்கிய அவர் என்னிட முள்ள எதை விரும்பிக் கேட்டாலும் உடனே தயங் காது அளிக்கக் காத்திருக்கிறேன்.

விக் : நந்தினி, நான் பிறிதொரு முறை தலைநகருக்கு வருகின்றேன். அங்கு வந்து எனக்கு வேண்டுவதைப் பெற்றுக் கொள்வேன். ஆனால் நான் அங்கு வரும் போது தங்கட்கு அறிமுகப்படுத்துமாறு தேவியார் சிறு விரலை அணி செய்யும் சிறிய மோதிரம் ஒன்று மட்டும் என் வசம் இருந்தால் போதுமானது. கூடு மானால் தேவியார் அதனை அளித்தால் உவப்புடன் ஏற்றுக் கொள்வேன்.

நந்தினி : என்ன, மாதேவியாரின் மோதிரமா?

மாதேவி : (சிறிது தயக்கத்துடன் மோதிரத்தைக் கழற்றி நந்தினியிடம் கொடுத்து) நந்தினி, அவர் விருப்பப் படியே இதனை எனது அன்பளிப்பாக அவர் ஏற்றுக் கொள்ளட்டும். அவர் நமதரண்மனைக்கு அண்மையில் வந்து சேருமாறு நான் கேட்டுக் கொண்டதாகக் கூறுவாய், நந்தினி.

[நந்தினி விக்கிரமனிடம் மோதிரத்தை அளிக்கிறாள். விக்கிரமன் அதனைத் தன் சிறு விரலில் அணிகிறான்.]

விக் : மிக்க வந்தனம். மாதேவியார் பெருந் தகைமையைக் கண்கூடாகக் கண்டேன். இயன்றால் விரைவில் தலை நகரில் காண்பேன்.

மாதேவி : நந்தினி, மகிழ்ச்சி என்று கூறுவாய்.

விக் : தேவியார்க்கு இன்னொரு விண்ணப்பம். இப் பொழுதே இரவு கவிந்துவிட்டது. இனித் தொடர்ந்து பயணப் படாமல் திரும்பவும் திருவானைக்காவிற்கே சென்று, இரவு அங்குத் தங்கியிருந்து வைகறையில் புறப்பட்டுப் பயணத்தை மேற்கொண்டால் நலம் எனத் தோன்றுகிறது. எதிர்ப்பட்டவர்கள் கள்வ ராகத் தோன்றவில்லை. ஏதோ சூழ்ந்து செயலாற்று வதாகக் தெரிகிறது. அதனால் சற்று எச்சரிக்கையாக இருப்பது நலம் எனத் தோன்றுகிறது.

மாதேவி : நந்தினி, அதுதான் தக்கது. குடவரையரே! அவ் வீரர் சொல்வது போலவே செய்வீர்களாக.

**விக் :** நன்று. தேவி; யான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

[விக்கிரமன் குதிரையேறி மறைகிறான். வீரர்கள் பல்லக்கைச் சுமந்து, திரும்பி, வந்த வழியே செல்கின்றனர்.]

**மாதேவி :** நந்தினி, இவை யாவும் கனவிற் கண்டது போலிருக்கிறது. அவர் ஐயமின்றி ஓர் அரசிளங் குமரர்தான்.

**நந்தினி :** முதற் பார்வையே உன்னை இவ்வளவு தூரத்திற்கு ஆளாக்கி விட்டதே ?

**மாதேவி :** போடி போ. கேலி செய்யாதே. அவர் தோற்றம் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது உண்மைதான். அவர் யாவரோ!

**நந்தினி :** நன்று நன்று. மனத்தை நிலை நிறுத்திக் கொள். யாவும் இனிதே நிறைவேறும். அவரும் தக்கவராகவே தோற்றுகிறது. அவர் நமதரண்மனைக்குத் தவறாது வந்து சேர்வார்.

**மாதேவி :** அவர் தலைநகருக்கு வரும் வரையில் என் மனம் ஒரு நிலையில் நில்லாது. எனக்கு என்னவோ குழப்பமாக இருக்கிறது. தென்றற் காற்று கண்ணயரச் செய்கிறது. சற்று அமைதியாக இருக்கிறேன்.

---

## களம் 2

# சோழர் நகரில் தோழர்

| | |
|---|---|
| இடம் : | கங்கைகொண்ட சோழபுரம் |
| காலம் : | முன்னிரவு |
| நடிகர் : | விக்கிரமன், பில்ஹணர். |

**விக் :** கவிஞரே, நாம் உரையாடி நெடுநாட்கள் ஆகியிருக்கு மன்றோ ? நீங்கள் இத் தலைநகருக்கு எப்பொழுது வந்து சேர்ந்தீர்கள் ?

**கவி :** அரசே! நான் இங்கு சென்ற பதினைந்து நாட்களாக என் உறவினர் வீட்டில் தங்கி வருகின்றேன். தாங்கள் இங்கு என்றைக்கு வந்துற்றீர்கள் ?

**விக் :** நண்பரே ! நான் இன்றுதான் வந்தேன். தாங்கள் இங்குத்தான் இருப்பீர்கள் என்று குறிப்பாயறிந்து கொண்டேன். தாங்கள் முன்பு குறிப்பிட்டபடி தங்களைச் சந்திக்கவே இவண் வந்து சேர்ந்தேன். மேற்கொண்டும் தாங்கள் அதிகமாக ஏதும் அறிய முடிந்ததோ ?

**கவி :** சதிகாரர்கள் பற்றித்தானே குறிக்கின்றீர்கள்? கங்கா பெருமானடிகள் தலைமையில்தான் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். அவர்கள் வசம் பொறுக்கி யெடுத்த போர்வீரர்களும் பலர் இருக்கின்றனர். அவர்கள் தலைமறைவாகப் பல்வேறு இடங்களில் இருந்து வருகின்றனர்.

**விக் :** அவர்களிடம் படை வேறு உள்ளதோ ? அங்ஙனமா யின், அவர்கள் படை திரட்டியும் வைத்திருக்கிறார் களோ ?

கவி : அப்படி அச்சமடையுமாறு ஏதும் கிடையாது. தற்காப்பிற்காகப் பயன்படுமேயன்றி எதிர்ப்பதற்கு இயலாது.

விக் : இவர்களுக்குச் சோழர் பேரில் ஏன் இவ்வளவு பகை ஏற்பட்டதோ?

கவி : மதவெறியே தவிர வேறில்லை.

விக் : இவர்களைப் பிடித்தாட்டும் மதவெறிக்குத் தக்க காரணங்களும் உளவோ?

கவி : புனைந்து கொண்டுள்ளார்கள். சமணர்கள் திருஞான சம்பந்த மூர்த்தியடிகளாரோடு வாதிட்டுத் தோற்றதால் கழுவேற நேர்ந்ததல்லவா? அதுவே சமண மடத் தலைவரின் சீற்றத்திற்குக் காரணம். ஸ்ரீமந் இராமாநுஜரை நாடு கடத்தியது பற்றி வைணவப் பெரியாரின் கோபம். மேலும் சோழர் வைணவத்தைப் புறக்கணித்துச் சைவத்தை ஆதரித்து வருவதும் ஆச்சாரிய சுவாமிகளின் ஆத்திரத்திற்கு அடிப்படை. பௌத்த மதமும் சமணத்தைப் போன்று ஆங்கு தலைதூக்க முடியாமல் இருப்பதுபற்றி பௌத்தர்களுக்கு மனத்தாங்கல். இவைகளே பகைமை பாராட்ட நேர்ந்த தோற்றுவாய்கள். மூவரும் சேர்ந்து சூழ்ந்து சோழரை மடக்க முயற்சிக்கின்றனர்.

விக் : இவர்கள் எங்ஙனம் சதியாற்றக் கருதுகின்றனர்? அதுபற்றி ஏதாகிலும் அறிய முடிந்ததோ?

கவி : ஒரு சிறிது அறிவேன். அவர்கள் படை திரட்டி எதிர்க்க எண்ணவில்லை. வேற்றரசர் துணைகொண்டு எதிர்க்கவும் துணியவில்லை. சோழர் குடும்பத்தினர்க்கு ஏதேனும் ஆபத்து விளைக்கவே சதியாற்றுகின்றனர். நான்கு நாட்களுக்கு முன்பாக, சோழர் புதல்வி மாதேவிப் பிராட்டியார் திருவானைக்காவில் நடைபெறும் வசந்த விழா பார்க்கச் சென்றிருந்தார்கள். போகும்போதோ வரும்போதோ, அத் தேவியாரைச் சிறைப் பிடிக்கச் சதியாற்றிச் சில வீரர்களை இவர்கள்

அனுப்பி யிருந்தார்கள். மாதேவி இன்னும் திரும்ப வில்லை. பாவம், அவர்களிடம் எங்கு அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறாரோ ?

விக் : என்ன? மாதேவியைச் சிறைப்படுத்தவா? அப்படி யாயின் அங்குத் தாக்கியது அவர்கள் கூட்டந்தான் போலும்.

கவி : அரசே! நீங்கள் கூறுவது எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே? அப்படியாயின் இது பற்றிய செய்தி உங்க ளுக்கு முன்பே தெரியுமோ ?

விக் : நண்பரே, நான் ஏதும் அறிகிலேன். ஆயினும் தாங்கள் கவலைப்படுவதுபோல் தேவியார்க்கு எதுவும் நேர்ந்துவிடவில்லை; இனியும் நேராது. சுகமே திரும்பி வந்து தலைநகரை யடைவார்கள்.

கவி : அரசே! நீங்கள் யாரையாவது சந்தித்துச் செய்தி யறிந்து கொண்டீர்களோ ?

விக் : இல்லை, அன்பரே! தேவியாருக்கு நீங்கள் குறிப் பிட்டவாறு இடுக்கண் நேர்ந்தது. ஆனால் அவர்கள் சிறைப்படாது தப்பினர்.

கவி : என்ன, தாக்கப்பட்டனரா? தப்பினரா? அரசே, தயவு செய்து விளக்கமாய்க் கூறமாட்டீர்களா ?

விக் : ஆம் நண்பரே. தேவியார் திரும்பி வரும்போது கொள்ளிடக் கரையில் அவர்கள் தாக்கினார்கள். அதில் நானும் கலந்துகொள்ள நேரிட்டது.

கவி : ஆ, சண்டை வேறு நடந்ததா ? பிறகு வேங்கியை வென்ற வீரரின் எதிரில் அவர்கள் நிற்கமாட்டாமல் ஓடியிருப்பார்கள் !

விக் : கவிஞருக்குத் தொலைநோக்கு அறிவும் உள்ளது போலிருக்கிறது. நடைபெற்றதும் அவ்விதமேதான். எஞ்சிய சிலர் ஓடோடியும் சென்று மாயமாய் மறைந்து விட்டனர்.

கவி : இதன் வழியாக மாதேவியின் கண்ணேக்கும் தோன்றியிருக்கும் என்றும் கருதுகிறேன்.

விக் : இவை யாவும் நிகழ்ந்த பிறகுதான் அவர்கள் மாதேவியார் என அறிய நேர்ந்தது. அதன்பின் தான் தேவியாரை நேருக்கு நேர் காண நேர்ந்தது.

கவி : ஆங்ஙனம் நேர்ந்தக்கால் வாய்ச் சொற்கள் யாதொரு பயனுமில. கண்களே நோக்கிக் கொண்டன; பேசி உறவாடிக் கொண்டன போலும். இதற்கு வெற்றிச் சின்னம் ஏதும் உண்டோ?

விக் : நன்றாக உண்டு. இதோ பாரும், அவர் பெயர் பதித்த முத்திரை மோதிரம்.

கவி : ஆஹா, நான் நினைத்தது ஒன்று; இப்பொழுது நடந்தது வேறொன்று. இதனால் என் திட்டமே தகர்ந்து விட்டது.

விக் : என்ன அன்பரே, இப்படிக் கூறுகின்றீர்கள்? அத் தேவியார்பால் நான் மனங்கொண்டது உண்மை. அதனால் யான் மேற்கொண்ட கருத்திற்கும் செயலுக் கும் தடையேதும் நிகழாது நான் பார்த்துக் கொள் வேன். தங்கள் திட்டம் யாதோ?

கவி : அரசே! இவ்வளவு நிகழ்ந்த பின்பும் தங்களை அவர் களுக்கு அடையாளம் தெரியாதுபோகுமோ? உங்களை அவர்கள் சங்கத்தில் சேர்த்துவிட வல்லவோ கருதி யிருந்தேன்.

விக் : இவ்வளவுதானா? என்னை எவரும் அடையாளம் கண்டுகொள்ள இயலாது. நான் அப்பொழுது தாங் கிய உருவம் வேறு, நீங்கள் இப்பொழுது காணும் உருவம் வேறு. இதோ பாரும் இந்தக் கையில் குத்தியிருக்கும் பச்சைக் கோலத்தை இதற்குமுன் என் கையில் கண்டதுண்டா? இக் கன்னத்தில் உள்ள கரிய மச்சத்தை நீங்கள் முன்பு பார்த்ததுண்டா? இவைகளே என்னை இப்பொழுது வேற்றாளாகக் காட்ட வில்லையா? இந்த உருவிலிருக்கும் என்னை எவரும் அடையாளம் கண்டுகொள்ள இயலாது. உங்கள் திட்டத்தைத் திட்டமாய் நிறைவேற்றலாம்.

கவி : மகிழ்ச்சி மகிழ்ச்சி. நான் ஏற்கெனவே ஆழ்வார்க் கடியானிடம் உங்களைப் பற்றிக் குறிப்பா யுணர்த்தி யிருக்கிறேன். அகத்தியம் தங்களைத் தன் மெய்ச் சீடனாக ஏற்றுக்கொள்வதாக வாக்களித்துள்ளான். அவனும் இப்பொழுது இங்குத்தானிருக்கிறான்.

விக் : அங்ஙனமாயின் நாம் இச் செயலில் உடனே துணிந்து இறங்குவாம். அவர்களோடு இருந்து கொண்டே நாம் ஆக்கம் தேடவேண்டும்.

கவி : அப்படியே யாகட்டும் அரசே! நான் இன்று இரவே அவனிடம் நினைப்பூட்டுகிறேன். நாளை மாலை யில் நாம் அவர்கள் மடத்திற்குச் செல்லலாம். தங்களை அங்கு சேர்த்துவிட்டு நான் வெளியே யிருந்துகொண்டு தொண்டாற்றுகிறேன்.

விக் : அதுவே தக்கது. நானும் இப்பொழுது வேறிடஞ் சென்று இரவுப் பொழுதைக் கழித்து, காலையில் இங்கேயே தங்களைச் சந்திக்கிறேன். அதன்பின் மாலை மடத்திற்குச் செல்லலாம். சென்று வருகிறேன்.

---

## களம் 3

# சிவ வேடமும் சதி வேட்டையும்

இடம் : ஒரு சிவ மடம்

காலம் : மாலை

நடிகர் : கங்கா பெருமானடிகள், வைணவப் பெரியார், பௌத்த பிக்ஷு, ஆழ்வார்க்கடியான், மெய்யன்பர்கள், பில்ஹணர், விக்கிரமன், வீரர்கள்.

[கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு பெரிய தெருவின் கோடியிலுள்ள ஒரு சிவ மடம். மடத்துத் தலைவராக, சைவப் பெரியாராக, வேடந் தாங்கிய சமணத் தலைவர் கங்கா பெருமானடிகள், சிவானுபூதித் தம்பிரானாகத் திகழ்கிறார். வைணவப் பெரியார் நம்பெருமாளாச்சாரியார், திருச்சிற்றம்பல நம்பிகளாகக் காட்சி யளிக்கிறார். ஆழ்வார்க் கடியான், சச்சிதானந்த பண்டாரம் என்னும் பெயர் தாங்கி நிற்கின்றான். பௌத்த பிக்ஷு சுங்கமித்திரர், கைலையானந்தராகக் காட்சி யளிக்கிறார். இத்தகைய அடியார்கள் புடை சூழ, தம்பிரானவர்கள் சமயப் பேருரை நிகழ்த்துகின்றார். மெய்யன்பர்கள் பலர் பய பக்தியுடன் அடங்கி யொடுங்கி கைபொத்தி வாய் புதைந்து பேருரையைப் பருகுகின்றனர்.]

**தம்பிரான் :** மெய்யன்பர்களே! முழுமுதற் கடவுளாகிய எம்பெருமானார் பரமசிவனாரை நாம் தினமும் பக்தியொடு பணிகின்றோம். பரமனாரைப் பற்றிப் 'பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே' என்று சொல்லு

கின்றோம். சிவனாரை நாம் எவ்வாறு காணலாம் என்னும் ஐயப்பாடும் எழுவதுண்டு. அரனை அன்பு கொண்டு காணலாம். அன்பே சிவம். எண்ணிறந்த நற்குணங்கள் நிறைந்த இறைவனை அன்பு வடிவாக வழிபடவேண்டும். அன்பே சிவம், சிவமாவது அன்பு.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"

என்றவாறு, அன்பு நெறியே சிவநெறி யென்று நன்கு தெளியவேண்டும். 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பதைத் தவறாது கருத்திலிருத்த வேண்டும். 'இவ் வுலகத்தில் அறத்தைக் காப்பது அன்பு; மறத்தை அழிப்பது அன்பு; இன்பத்தைப் பெருக்குவது அன்பு; துன்பத்தைப் போக்குவது அன்பு. அன்பினால் ஆகாத தொன்றில்லை. இத் தகைய அன்பு நெறியிலே நின்று பணியாற்றுங்கால், இன்ப நிலையாகிய சிவகதி தானே தேடி வந்தடையும்' என்பதே சைவ சமயத்தின் அடிப்படையான கொள்கை. இதனை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

மெய்யன்பர்களே! இதுவரை பொறுமையாக இருந்து சைவ நெறியாகிய அன்புப் பணியை மேற் கொள்வது பற்றி விரிவாய் அறிந்து கொண்டீர்கள். நாளை 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதுபற்றி அறியலாம். ஆலய மணியும் ஒலிக் கின்றது. மாலை விதிகளை மேற்கொண்டு இறைவனாரை வணங்கப் போவாம். அன்பே சிவம்! நமச்சிவாயம்! திருச்சிற்றம்பலம்! சிவோஹம்!

[மெய்யன்பர்கள் கலைகிறார்கள். மடத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் இருக்கின்றனர். மற்றும் மெய்யன்பர் கூட்டத்தில் இருவர் எஞ்சி நிற்கின்றனர். அவர்கள் பில்ஹணக் கவியும், மாற்றுருவில் சங்கரன் என்ற பெயர் தாங்கி

நிற்கும் விக்கிரமனும். இருவரும் சற்று முன் வந்து வணங்கிக் கையது கொண்டு மெய்யது பொத்தி, வாய்புதைந்து பணிவாக நிற்கின்றனர்.]

**கவிஞர் :** திருச் சந்நிதானத்தைத் தரிசிக்கவே நாங்கள் மட்டும் கைகட்டிக் காத்திருக்கின்றோம். எங்களைப் பற்றிச் சச்சிதானந்த அடிகளார் நன்கு அறிவார்கள்.

**சச்சி :** சந்நிதானத்தின் அருள் வேண்டி நிற்கின்றார் இந்த மெய்யன்பர்.

**தம்பி :** சிவோஹம்! நமச்சிவாயம்! அன்பே சிவம். அப்படியா? மெய்யன்பர் மிக்க இளைஞராகத் தோற்றம் அளிக்கின்றார். அவர் ஈங்கு வேண்டி நிற்பது எதனையோ?

**மெய்யன்பர் :** சந்நிதானத்தின் பெருமையை எங்கள் நாட்டிலேயே கேள்விப்பட்டேன். அதிலிருந்து அடியேனது ஆவி உயிர் அனைத்தையும் சந்நிதானத்தின் பணி விடையிலே செலவிடவேண்டும் என்னும் அவாவே மேலோங்கி நிற்கின்றது.

**தம்பி :** சிவோஹம்! நன்று. தம்பிக்கு ஊர் எதுவோ? பேர் எதுவோ?

**மெய் :** எளியேனுக்கு ஊரில்லை, உறவில்லை, காணி கரையேதுமில்லை. பாழுடம்பைப் பராமரிக்க, நாழியரிசிக்காகச் சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும், பல்லெலாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டி, நிலையிலா இவ்வுலகில் உழல யான் விரும்பவில்லை.

**தம்பி :** குழந்தாய்! நீயோ மிக மிகச் சிறுவன். இவ்வளவு இளைய வயதில் உலகப் பற்றற்று நிற்பதென்பது போற்றற்குரியதே. சிவனடியார் கூட்டத்தில் உன் போன்ற மெய்யன்பர் இருக்க வேண்டியதே.

**சச்சி :** இவர்களை நானறிவேன். நம் மெய்யன்பர் குழாத்துடன் கலந்து ஒன்றி நின்று பணியாற்ற விழைந்து

நிற்கின்றார் இவர். மெய்ச் சமயத்தின்பால் மிகுந்த பற்றுள்ளவராக இருக்கின்றார். தவிர, தேகக் கட்டுள்ள வாலிபர். போர் வரிசைகளிலும் தேர்ந்தவர் போலிருக்கிறது. சந்நிதானம் திருவுள்ளம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

**தம்பி :** திருச்சிற்றம்பலம் ! நமச்சிவாயம்! மெய்ப்பாட்டினின்றும் மாறுபடாதவரா யிருந்தால் அன்பர் நம்மோடிருக்கட்டும். நாளையே அவர்க்குத் துறவுக் கோலம் அளியுங்கள். சிவசங்கரப் பண்டாரம் என்று திருநாமம் அளித்து அழையுங்கள். மேலும், நம் மடத்தின் மெய்யுறுதிகளையும் உணர்த்திப் பக்குவப் படுத்துங்கள்.

**சச்சி :** சந்நிதானத்தின் கட்டளைப்படியே யாவும் செய்து விடுகின்றேன். அன்பரை இப்பொழுதே மடத்திற்குள் அழைத்துச் செல்கிறேன்.

*[ஆழ்வார்க் கடியானை சச்சிதானந்தம், சங்கரனாகிய விக்கிரமனை மடத்தினுள் அழைத்துச் செல்கிறான். கவிஞர் தம்பிரானை வணங்கி விட்டு வெளியேறுகிறார்.*

*சில வீரர்கள் மடத்தினுள் வந்து, பயந்து, நடு நடுங்கி, வாய்பொத்தி நிற்கின்றார்கள். இதுவரை சைவப் பெரியாராகப் பேருரை யாற்றிய சிவானுபூதித் தம்பிரான் உள்ளபடி கங்கா பெருமானடிகளாகி, தன் மெய்யுருக் காட்டத் தொடங்கினார்.]*

**கங்கா :** வீரர்களே, என்ன இவ்வளவு அடக்கமாக நிற்கின்றீர்கள் ? அந்தக் கிளியை நம் மடத்தினுள் நிலவறையில் அடைத்துப் பாலும் பழமும் இட்டுப் பூட்டுங்கள். ஊம், செல்லுங்கள்.

**ஒரு வீரன் :** சுவாமிகாள்............

**கங்கா :** என்னடா? குழைந்து நிற்கிறாய்? போ, விரைவில். கிளி வாடிவிடப் போகிறது.

**வீரன்** : ஐயா, தாழி திரளும்போது வெண்ணெய் உடைந்து விட்டது. மன்னிக்க வேண்டும்.

**கங்கா** : என்னடா உளறுகிறாய்? அப்படியானால் வெறுங் கையுடனா வந்தீர்கள். மடத்தடியர்களே! வெட்க மில்லை?

**வீரன்** : ஐயனே, சிறை பிடித்திருப்போம். யாரோ ஒரு வடநாட்டு வீரன் குறுக்கிட்டு எங்களிற் பலரைக் கொன்று வீழ்த்திவிட்டான். நூற்றுவரில் நாங்கள் ஈரிருவரே உயிர் பிழைத்தோடி வந்தோம்.

**கங்கா** : ஏனடா, நீங்கள் மட்டும் ஓடி வந்தீர்கள்? நீங்களும் ஒழிந்து போகாமல் ஏன் உயிர் தப்பிப் பிழைத்தீர்கள்?

**வீரன்** : ஐயனே, செய்தி யறிவிக்கவே ஓடி வந்தோம்.

**கங்கா** : மகிழ்ச்சியான இச் செய்தியைத் தெரிவிக்க வந்தீர் களோ? மடையர்களே, போங்கள் மறைந்து. நில்லாதீர்கள் எதிரில். ஊம்........

[வீரர்கள் சென்று விடுகின்றனர்.]

**கங்கா** : (தனக்குள்) தக்க தருணத்தைக் கைநழுவ விட்டார்கள் இம் முட்டாள்கள். அச் சிறுக்கி சோழ மாதேவியைச் சிறைப் பிடிக்க இது தவிர ஏற்ற சமயமும் வாய்க்குமோ? கைவிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டார்களே. கிளி கைக் கெட்டாமற் பறந்தோடி விட்டதே! இருக்கட்டும். மறுமுறை முயற்சிப்போம். அக் கிளியைப் பிடித்துக் கெடுத்து கழுத்தைத் திருகிப் போடாமல் இரேன். பார்ப்போம்.

களம் 4

# சிறைப்பட்ட கிளி

இடம்: கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு வீதி

காலம்: காலை

நடிகர்: சங்கன், மங்கன், பில்ஹணர், ஆழ்வார்க் கடியான், விக்கிரமன்.

[முன்னிரவு அரசகுமாரி சோழ மாதேவி காணப்படவில்லை என்ற செய்தி காட்டுத் தீ போன்று நகர் எங்கும் பரவி நின்றது. ஊரார் தலைக்குத் தலை பலவாறு கூடிக் கூடிப் பேசி நின்றனர்.]

**சங்கன்:** ஏய், மங்கா! சேதியைக் கேட்டியா? ராசா மவளை யாரோ தூக்கிட்டு போயிட்டாங்களாம். என்னடா அக்ருவம். அரமனலே நொயெஞ்சு எப்பிடிடா ஒத்தன் தூக்கிப் போவான்?

**மங்கன்:** ஆமாண்ணே, பெரிய ஆச்சிரியமால்ல இருக்குது? ஏண்ணே, ராசா மவ ஒத்தருக்கும் சொல்லாமே தானே எங்கிட்டுனாச்சியும் ஓடிருப்பாளோ?

**சங்:** டேய், அப்பிடி யின்னொருக்கா சொல்லாதடா. யார் காதிலேனாச்சும் உளப்போவுது. உளுந்தா நம்மை உள்ளே தள்ளிப்பிடுவாங்கோ. யாரோ அக்ரமக் காரப் பயலுவ சூழ்ச்சி செய்யறுங்கடா. முன்னொரு வாட்டி நம்ப மாதேவி திருவானைக் கோவில்லேருந்து வரப்போ ஒரு வாட்டி மடக்கிக்கினுனு வங்களாம். யாரோ ஒரு வீரன் வந்து அவங்களை வெரெட்டி விட்டானும். அப்போ தபாச்சிக்கிட்டா. அவனுகளே மறுவ இப்படிப் பண்ணிப்பிட்டாங்க போலே.

**மங் :** எங்கனுச்சும் போட்டு அடைச்சு வைச்சிருப்பாங் களோ, அல்லே கொன்னே தீத்திருப்பாங்களோ! சின்ன ராசா ரொம்ப கவலையா இருக்கிருராம்லே ?

**சங் :** கவலை யில்லாமே இருக்குமாடா ? பெத்த மனசு இல்லேயாடா ? மந்திரி வந்து பலான எடங்களுக்கும் ஆளனுப்பித் தேடச் சொல்லி யிருக்குருராம்.

**மங் :** எப்படியும் நல்லபடியா நம்ப மாதேவி வந்து சேர ணும்னு மாரியாத்தாளே வேண்டிக்குவோம்.

**சங் :** எல்லாம் வெரெவா வந்திருவா. சரி, நேரமாவுது. பெரிய எடத்துப் பேச்சு நமக்கு ஏதுக்கு. வாரேன்.

**மங் :** சரிண்ணே.

[இருவரும் பிரிந்து செல்லுகிருர்கள்.]

[பிறிதோரிடத்தில் பில்ஹணரும் ஆழ்வார்க் கடியானும்]

**பில்ஹணர் :** அடியார்க் கடியார் அவர்களே! மெய்யன்பு! வணக்கம்.

**ஆழ்வார் :** அன்பே சிவம்! வணக்கம்.

**பில் :** தங்கள் கருத்து முற்றுப் பெற்றமை யறிய மிகுந்த மகிழ்ச்சி.

**ஆழ் :** என்ன ஐயா, என்னவோ உளறுகிறீர். எமது கருத்து என்ன ? முற்றுப் பெற்றது எது ? வெளிப் படையாய்த் தான் சொல்லுமேன்.

**பில் :** வெளிப்படை என்ன ஐயா, மாதேவி பற்றித்தான் கூறுகிறேன். எப்படியோ, வெற்றி பெற்றுவிட்டீர் கள்.

**ஆழ் :** ஐயா, உரத்துப் பேசாதேயுங்கள். பகலில் பக்கம் பார்த்துப் பேசு என்பார்கள். செய்தி தங்களுக்கும் எட்டிவிட்டதா ? ஏதோ இம்முறை எங்கள் முயற்சி பலனளித்தது.

**பில் :** ஏன் ஐயா, எப்படி இவ்வளவு எளிதில் வேலையை முடித்தீர்கள் ? அதுதான் எனக்கு வியப்பாக விருக் கிறது.

ஆழ் : தோட்டக்காரன் உதவியும், சமையற்காரியின் சூழ்ச்சியுமின்றி இந்த வேலை எப்படி ஐயா, நிறை வேறியிருக்கும்? சமையற்காரி, உணவில் மயக்க மருந்து கலந்தளித்து விட்டாள் மாதேவிக்கும் அரண்மனைக் காவலருக்கும். தோட்டக்காரன், பின் கதவைத் திறந்து வைத்து விட்டான். அதன்பிறகு மெய்யன்பர்கள் கிளியைப் பிடித்துவர எத்துணை நேரம் ஆகும்? மாதேவி சிக்கினாள், சிறைப்பட்டாள்.

பில் : மெய்யடியார்கள் முன் நிற்கும்போது எதுதான் கை கூடாது? அது கிடக்கட்டும். கிளியைப் பிடித்தது பெரிதல்லவே, அடைத்துக் காக்க வேண்டுமே?

ஆழ் : ஈயெறும்புக்குக் கூடத் தெரியாது. பாதுகாவலாகக் கிளியைச் சித்தன்னவாசல் சின்ன மடத்தில் அடைத்து விட்டார்களே? இதென்ன எங்களுக்கு ஒரு பெரிதா?

பில் : தக்க இடம். எவருமே அணுகமாட்டார்கள். தங்கட்கு இதில் பெரிய முயற்சி. செயற்கரிய செயலைச் சடுதியில் செயலாற்றி விட்டீர்கள். அஃதிருக்கட்டும். நானனுப் பிய மெய்யன்பர் ஒத்து நடந்து வருகிறாரா?

ஆழ் : ஆஹா, தடையென்ன? தலைவர்க்குப் பக்க பலமாய் ஒத்த சீடராய்த் திகழ்கிறார். அவரைப் பற்றி நீங்கள் எள்ளளவும் கவலைகொள்ள வேண்டா. ஐயா, நானிப் போது மடத்திற்கு விரைந்து செல்ல வேண்டும். நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.

பில் : நல்லது ஐயா, அவ்வாறே யாகட்டும்.

[ஆழ்வார்க் கடியான் பிரிந்து செல்கிறான்.]

பில் : (தனக்குள்) அப்படியா? சித்தன்னவாசலில் சிறை வைத்துவிட்டார்களா? இவனை இப்பொழுது பார்த் தது நல்லதாகிவிட்டது. இனி, தாமதம் செய்யாமல் விக்கிரமனிடம் செய்தி அறிவித்து மாதேவியை விடு விக்க வழி தேட வேண்டும். விக்கிரமனை விரைவில் காண வேண்டும்.

[பில்ஹணர் தெருவழியே செல்ல, சங்கரன் என்னும் துறவி யுருவிலிருக்கும் விக்கிரமன் எதிர்ப்படுகிறான். உடனே இருவரும் சந்தித்துச் சிறிது மறைவிடம் செல்கின்றனர்.]

பில் : மெய்யன்பரே! திருச்சிற்றம்பலம்! நமச்சிவாயம்! சிவோஹம்!

விக் : கவிஞரே, கேலி ஒரு புறமிருக்கட்டும். எங்கு விரைந்து சென்று கொண்டிருந்தீர்கள்?

பில் : அரசே! தங்களை எவ்வகையாற் காணலாம் என்று திகைத்திருக்கும்போது தாங்களே எதிர்ப்பட்டீர்கள். மெய்ச் சமயத்தைச் சார்ந்த உங்களுக்கு எப்பொருளும் மெய்ப்பொருள். அரசனும் ஆண்டியும் உங்கட்கு ஒரே நிலை. பெண்ணும் பாவையும் உங்கட்கு ஒரே நிலை.

விக் : கவிஞரே, என்ன ஏதேதோ பேசுகின்றீர்? நம் கருத்தை முடிக்க எவ்வித வேடம் புனைந்தால் என்ன? என்னைக் காண நீங்கள் விரைந்த காரணம் என்ன? விரைவாகக் கூறும்.

பில் : ஏன் அவ்வளவு ஆர்வம்! உங்கள் ஆசைக் கிளி வேட்டுவர் கைப்பட்டு விட்டதனாலா?

விக் : என்ன? என் ஆசைக் கிளியா? வேட்டுவர் கைப் பட்டதா? சோழ மாதேவிக்கு என்ன நேர்ந்தது?

பில் : மெய்யன்பரே! அதுதான் நான் முன்னே அவ்வாறு கூறினேன். ஆண்டிகளை அடுக்கப்போக நீங்களும் மெய்யாகவே மெய்யடியாராக மாறிவிட்டீர்களோ என்றுகூட எண்ணிவிட்டேன்.

விக் : வீணில் காலம் கடத்தாதீர்கள். என் ஆசைக் கிளிக்கு என்ன நேர்ந்தது! கூறுங்களேன்.

பில் : அரசே, மாதேவி சதிகாரரால் சிறைப் படுத்தப்பட்டு விட்டாள்.

விக் : சிறைப்பட்டு விட்டாளா ? மீண்டுமா ?

பில் : ஆம் அரசே ! மிகவும் முன்னேற்பாடுகளோடு செய்திருக்கிறார்கள். அரண்மனையில் வைத்தே யன்றோ சிறைப் பிடித்துப் போயினர் !

விக் : கவிஞரே, மாதேவி உயிருடன் இருக்கின்றாளா இல்லையா ? அதைக் கூறும் முதலில்.

பில் : அவ்வளவு பதறாதீர்கள். அவர் உயிருக்கு ஏதும் நேரவில்லை. சிறைப்பட்டிருப்பது தவிர, வேறு கெடுதி ஒன்றுமில்லை.

விக் : அப்படியாயின் அவள் எங்கு அடைப்பட்டிருக்கிறாள் ? தாங்கள் அறியக் கூடுமோ ? அதையாவது தயை கூர்ந்து கூறுங்களேன்.

பில் : அரசே! இப்பொழுதுதான் ஆழ்வார்க் கடியான் யாவும் என்னிடம் கூறிச் சென்றான். சோழ மாதேவியைச் சித்தன்ன வாசலில் சிறைவைத்திருக்கிறார்களாம். கங்காபெருமானடிகள் மட்டும் அங்கிருக்கிறாராம்.

விக் : அப்படியா ? அதுதான் அவரை நேற்றிருந்து இங்கு காணோம் !

பில் : இனி, மேற்கொண்டு நீங்கள் இப்பொழுதே சித்தன்ன வாசல் சென்று மாதேவியை விடுவிக்க முயற்சிக்க வேண்டும்.

விக் : ஆம், ஆம். உடனே இதிற் செயலாற்ற வேண்டும். நான் இன்றே செல்வேன். என் தோள்வலி கொண்டு ஆவன செய்வேன். அன்பிற்கினிய அரும் பெறற் பாவையை அடையாமல் இரேன்.

பில் : நன்று, அங்ஙனமே செல்வீர்களாக. வேடம் மாற்றிக் கொள்ளுங்கள். அடிகளார் மிகவும் தோள் வலியுள்ளவர்கள். அவருடன் வெகு எச்சரிக்கையாகப்

பழக வேண்டும். ஆயினும் உங்கள் தோள்வலிக்கு எதிர் நிற்க அவராலாகாது. நலனே யெய்துக.

விக் : நல்லது, கவிஞரே ! இப்பொழுதே நான் மடத்திற்குச் சென்று, திருவானைக்கா உத்திர உற்சவத்திற்குச் செல்வதாகக் கூறி உத்தரவு பெற்று, உடனே சித்தன்ன வாசலுக்கு விரைந்து செல்வேன்.

களம் 5

# கலைக் களஞ்சியம்

இடம் : சித்தன்னவாசல் குகைக் கோயில்

காலம் : பகல்

நடிகர் : விக்கிரமன், கலாரசிகர்.

[மாறுவேடம் பூண்ட விக்கிரமன் சித்தன்னவாசல் வந்து சேர்ந்தான். அடிகளின் மறைவிடத்தைக் காணவேண்டிப் பலவாறு அலைந்துவிட்டு, சித்தன்ன வாசலின் குகைக் கோயிற் சிறப்பைக் காணக் குகைக்கு வந்தடைந்தான். ஆங்கு அவனைப் போன்று மற்றொரு கலாரசிகனும் ஓவியங்களைப் பார்த்து மகிழ்ந்த வண்ணம் இருந்தான்.]

**விக்கிரமன் :** வழிநடையால் வருந்திய உடலுக்கு ஓர் அமைதி; உள்ளத்திற்கு ஓர் உவகை; கண்களுக்கொரு பெரு விருந்து. ஆஹா! இங்குத் தோன்றும் ஓவியங்களின் எழிலை எவ்வகையா னியம்புவது! வெறும் சொல்லடுக்குகளால் இதன் சிறப்பைச் செப்ப இயலுமோ? இனிப்பென்னும் சுவையைச் சொல்லால் எங்ஙனம் விளக்குவது? ஐயா, தாங்கள் ஒரு பெரும் கலாரசிகர் போலும். அந்தச் சித்திரத்தையே சிதைத்து விழுங்கி விடுவீர்கள்போல் தோன்றுகிறதே?

**ரசிகர் :** ஐயா, நான் காலையே இங்கு வந்து விட்டேன். இப்பொழுது பிற்பகல் ஆகப்போகிறது. எனக்குப் பசி தாகம் எதுவுமே தோன்றவில்லை. இச் சித்திரங்

களையே சுவைத்துக் கொண்டிருக்கிறேன். இதோ பாருங்கள். எங்கு பார்த்தாலும் சமணரின் சித்திரங்கள், ஆங்காங்கு பௌத்தமும் கலந்து கிடக்கிறது. புத்தரின் புன்முறுவலைப் பார்த்துக்கொண்டே பல நாட்கள் நிற்கலாமே!

விக்: புத்தரின் முகத்தில்தான் எவ்வளவு அமைதி! களங்கமில்லாத பால்போன்ற மதிமுகம். ஞானவொளிவீசி நிற்கும் வதனம். ஆஹா! இதோ உள் விதானத்தைத்தான் பாருங்களேன்?

ரசி: அவ்வளவு உயரமான விதானத்தில் எப்படித்தான் வண்ணம் தீட்டினார்களோ? அடடா! அந்தத் தாமரைத் தடாகத்தை எப்படித்தான் அங்கு அமைத்தார்களோ? அதிற்றான் எத்தனைத் தாமரை மலர்கள்? மலர்ந்த தாமரைகளைக் கண்டு தீச்சுடரோ என்று அஞ்சியோடும் அன்னங்களுக்குத்தான் எங்ஙனம் வண்ணம் வைத்தார்களோ! அக் குளத்தில் நீராடும் தலைவனும் தலைவியும் நீரை வாரி யிறைத்து விளையாடுவது, அந் நீர் எங்கு நம்மீது பட்டுவிடுமோ என்று சற்று ஒதுங்க வல்லவோ உணர்வு தூண்டுகிறது. ஆஹா! என்ன சிறப்பு.

விக்: ஆம் ஐயா, இதோ இத் தூண்களில் வரைந்துள்ள வடிவங்களைத்தான் பாருமேன். ஓவியக் கலையில் தக்க தேர்ச்சிபெற்ற கண்ணுள் வினைஞரல்லவோ இதனைத் தீட்டி யிருக்க வேண்டும்? தம் தொழிற்றிறத்தால் நம் மனத்தை முற்றிலும் கவர்ந்துவிடுகிறார்களே! ஆஹா! இந்தப் பாவையைத்தான் பாருங்கள். எவ்வளவு இயற்கையாக மிளிர்கின்றது! தீட்டிய வண்ணங்கள் இயற்கையின் எழிலை எவ்விதம் ஏற்றிக் காட்டுகிறது என்று நம்மால் கூறவும் முடியுமோ?

ரசி: அடடா! ரோஜா வண்ண உடல், கன்னங் கருங் கூந்தலிலே முடித்த தாமரை, கருங்குவளைக் கண்கள், வாயிலிலே விளங்கும் வெண் முத்துப் பற்கள். அடடா! அந்தக் கண்களில்தான் என்ன கவர்ச்சி!

என் ஆயுள் உள்ளளவும் இவ் உயிரோவியத்தை மறக்க இயலாது. அடடா! இந்த உயிரோவியங் களே பண்டைத் தமிழனின் உயரிய பண்பாட்டை எடுத்துக் கூறுவதற்குப் போதுமே!

விக் : ரசிகரே! இவற்றைப் பார்க்க இரு கண்கள் போதா. பல்லாண்டுகளும் பற்று. இருளும் சூழுகிறது. இனி இவ் ஓவியங்கள் நம் சிறு கண்களுக்குப் புலப்படா. பிறிதொரு முறை வந்து பார்த்து மகிழ்வோம்.

## களம் 6

# கூண்டுக் கிளி

| | |
|---|---|
| **இடம்:** | ஒரு தாழ்ந்த வீடு |
| **காலம்:** | நள்ளிரவு |
| **நடிகர்:** | விக்கிரமன், கங்காபெருமானடிகள், மாயாதேவி, சோழ மாதேவி. |

*[சித்தன்னவாசலில் விக்கிரமன் சமணர் போக்குவரத்தால் ஒருவாறு அடிகளின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டு, மாதேவியைச் சிறை வைத்திருக்கும் இடத்தையும் அறிந்து கொள்கிறான். நள்ளிரவில் ஆங்குப் போந்து நிற்கின்றான். கங்கா பெருமானடிகள் வருகின்றார். தாழ்ந்த வீட்டைத் தட்டுகிறார். அங்கு மெய்க் காவலாக இருக்கும் மாயாதேவி என்னும் சமண சந்நியாசினி எதிர்ப்படுகிறாள்.]*

**விக்கிரமன் :** (தனக்குள்) நாம் பகலில் பார்த்த குகையின் சிறப்பென்ன? இப்பொழுது பார்க்கும் காட்டின் இருள் என்ன? மனிதரற்ற காடு. ஒரே தனி வீடு. நள்ளிரவு. எங்கும் அமைதி. ஆந்தையின் அழுறல். நரிகளின் நீண்ட ஊளையொலி. இதனூடே என்ன? யாரோ நடமாடுவது போலிருக்கிறதே? ஆம்? வேறு யாருமில்லை. அடிகளார்தான். நலமே, சற்று மறைந்திருந்து இங்கு நடப்பனவற்றைக் கவனிப்போம்.

*[கங்காபெருமானடிகள் வீட்டருகில் வந்து கதவைத் தட்டுகிறார்.]*

**அடிகள் :** மாயா, மாயா!

**மாயாதேவி :** இதோ வந்து விட்டேன் சுவாமி. இத்தனைப் பொழுது ஆகிவிட்டதா தாங்கள் இங்கு வந்துசேர?

அடி : ஆமாம், ஊரடங்கித்தானே நான் வெளிக் கிளம்ப வேண்டும். இன்று குகைக்கோயிலுக்குப் பலர் வந்து போனதால் ஊரில் நடமாட்டம் மிகுந்திருந்தது. சற்று அரவம் அடங்கியதும் புறப்பட்டு வந்தேன்.

மாயா : இன்று குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி எதுவும் நேரவில்லை. யாவும் அமைதியாகவே இருக்கின்றன.

அடி : கூண்டுக் கிளி எப்படியிருக்கிறது ?

மாயா : கிளியா? உண்ணா விரதம் மேற்கொள்ளப் பழக்கிக் கொண்டிருக்கிறது !

அடி : அதுவே தக்கது. தானே விரைவில் கட்டறுத்து வீடு பெறுவதற்கு அதுவே தக்க வழி. அவ்வாறே யாகட்டும். நிற்க. கிளி பேறு பெற்றால், இவ் வீட்டினுள்ளே அமைதியாகச் சமாதி எழுப்பி விடுவோம். நாளாக நாளாக எனது நடமாட்டம் இங்கிருக்கவே, ஐயப்பாடு பலவாக எழலாம். இங்கும் யாரேனும் வந்தாலும் வரலாம். எதற்கும் நாம் விழிப்பாகவே இருந்துவர வேண்டும்.

மாயா : சுவாமிகளுக்கே ஐயப்பாடு தோன்றுகிறது போலும் ! நானிருக்க அச்சமேன் ? நான் மிகவும் கருத்தாகவே இருந்து வருகிறேன்.

அடி : அதற்குச் சொல்ல வரவில்லை. உன்னையும் பலர் காணவரக் கூடும். அதனால்தான் சொல்ல வந்தேன்.

மாயா : நான் பகலெல்லாம் அதோ அம் மரத்தடியிலேயே மெய்ப்பாட்டில் ஆழ்ந்திருக்கிறேன். என்னைக் காண வருகிறவர்கள் அங்கேயே நின்று என்னைப் பார்த்து வணங்கிப் போய் விடுகிறார்கள். இங்கு ஒரு காக்கை, குருவிகூட கிளியை அணுகாது. நீங்கள் கவலைப்பட வேண்டா.

அடி : அது சரி. எல்லாம் இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குத் தானே. அதன்பின் கிளி பேரின்பம் பெற்றுவிடும்.

மாயா : நமது கொள்கைப்படி எவ்வுயிர்க்கும் நாம் அன்பாகவே யிருப்போம். நாமாக எவ்வுயிர்க்கும் இடருண்டாக்க மாட்டோம். அடியார்கள் வழியாக வீடுபெற அக் கிளி கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?

அடி : கவனமாகவே யிருப்பாய். நான் சென்று வருகின்றேன்.

[அடிகள் வெளியே வருகிறார். மாயா கதவை மூடி விடுகிறாள். திடீரென்று மாற்றுருவிலிருக்கும் விக்கிரமன் வெளிப்படுகிறான்.]

விக் : சுவாமிகாள்! வீணைக் கிளியை ஏன் தானே வீடுபேறு அடையும்படி விடவேண்டும்? என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். யான் அதனைக் கண்ணுங் கருத்துமாய் இமையில் வைத்துக் காப்பதுபோல் பாலும் பழமும் அளித்துப் பாதுகாப்பேன். தயவு செய்து என்னிடம் கிளியைக் கொடுத்து விடுங்களேன்.

அடி : யாரப்பா நீ! கிளியாவது, வீடாவது, பேறாவது! நீ என்ன பித்துப் பிடித்தவனோ?

விக் : ஐயனே, நீங்கள் பேசிக் கொண்டதிலிருந்து கிளியொன்று இறந்து கொண்டிருக்கிறது என்று அறியலானேன். எவ்வுயிர்க்கும் அன்பாயிரு என்னும் மெய்ப்பாட்டைக் கடைப்பிடிக்கும் மெய்யன்பர்களுள் யானும் ஒருவன்.

அடி : அடே! என்ன கூறுகிறாய்? நீயும் வீடு பேற்றை விரும்புகிறாயோ? இதோ, இப்பொழுதே பெற்றுக் கொள்.

[என்று கூறிக்கொண்டே சரேலெனத் தன் இடுப்பில் ஒளித்து வைத்திருந்த குத்துவாளை ஓங்கி விக்கிரமன்மேல் பாயத் தொடங்கினார். இதையே எதிர்பார்த்திருந்த விக்கிரமனும் மின்னொளி வீசத் தன் உடைவாளை வீசித் தற்காத்துக்கொண்டு அடிகளை மடக்கிச் சண்டையிட்டான். ஆவேசம் மேலிட்ட அடிகள் புலியெனப் பாய்ந்தார். விக்கிரமன் மானெனத்

துள்ளி யொதுங்கினன். அடிகளார் மண்ணைக் கௌவினர். விக்கிரமன் உடைவாள் அவர் முதுகைக் கிழித்தது. இரத்தம் பெருக்கெடுத்தோட அடிகளார் வலி தாங்க மாட்டாது கதறலுற்றார்.]

**அடி :** ஆ! ஆ! ஐயகோ! ஆ! மாயா! மாயா, ஓடி வா. உயிருடன் மன்றுடுகிறேன்.

[மாயா கதவைத் திறந்துகொண்டு ஓடோடியும் வந்து அடிகளாரைக் கவனிக்கலானுள். விக்கிரமனும் நொடியளவில் வீட்டினுள் பாய்ந்து சென்று கதவை யடைத்துக் கொண்டான். வீட்டில் ஒருபுறம் பூட்டியிருந்த கதவை யுடைத்து உள்ளே செல்கிருன். விளக்கொளியே இல்லாத அந்த அறையில் எதுவும் புலனுகவில்லை.]

**விக் :** அப்பா! என்ன இருள்! என்ன நெடி! இஃதொன்றே பாதுகாப்பான இடமாகவுள்ளது. இங்கே யாரையும் காணுமே! ஆ! ஈதென்ன, கீழே யாரோ முனகுவதுபோல் செவிப்படுகிறதே. ஆம், அவள் தான்! அவளே தான்! அன்பே! மாதேவி! மாதேவி, இங்குத் தானிருக்கிருயா ?

[சுருண்டு கீழே படுத்திருந்த மாதேவி இக் குரல் கேட்டு]

**மாதேவி :** யாரது, யாரது! அறிந்த குரலாக இருக்கின்றதே ?

**விக் :** மாதேவி, பகைஞன் அல்லன் யான். உன்னிடம் முன்பு மோதிரம் பெற்ற வீரனே நான். உன்னை விடுவிக்கவே வந்தேன். சதிகாரன் ஒழிந்தான். புறப்படு, புறப்படு. ஆபத்திற்குப் பாவமில்லை. உன்னுல் நடக்க இயலாது. உன்னைத் தாங்கியே வெளியேற்றுகிறேன்.

---

# அங்கம் 3

## களம் 1

## மாதேவியும் மாவீரனும்

| | |
|---|---|
| இடம் : | அம்பிலாந்துறை |
| காலம் : | நண்பகல் |
| நடிகர் : | விக்கிரமன், மாதேவி. |

[சித்தன்ன வாசலில் மாதேவியை விடுவித்த விக்கிரமன் சிறிது தூரம் அவளைத் தூக்கியோடியே சென்று ஒரு கிராமத்தை யடைகிறான். அங்கு இரவுப் பொழுதைப் போக்கி ஒரு வண்டியில் ஏறி, பல இடங்களிலும் வண்டி மாறி, கங்கைகொண்ட சோழபுரம் நோக்கி மாதேவியுடன் பயணமானான். உணவு அருந்தும் பொருட்டு, கொள்ளிடக்கரையில் அம்பில் துறையில் இருவரும் அமர்ந்தனர். இருவரும் உணவருந்திக் கொண்டே உரையாடலாயினர்.]

**விக்கிரமன் :** தேவியாருக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை போலிருக்கிறது. மூன்று நாட்கள் முழுதும் உணவு கொள்ளாதிருந்தால் இப்படித்தான் ஆகிவிடும் போலும்!

**மாதேவி :** ஐயா, முன்பொரு முறை என்னைச் சிறைமீட்டீர்கள்; இம்முறை என் உயிரையே எமனிடமிருந்து மீட்டு வந்து விட்டீர்கள். தாங்கள் செய்து வரும் உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ!

**விக் :** அம்மணி, நான் முன்பே கூறவில்லையா, கைம்மாறு கருதாதுதான் யான் பணியாற்றுவேன் என்று?

**மாதேவி :** ஐயா, நினைத்தாலும் வியப்பாக இருக்கின்றது உங்கள் செயல். எனக்கு ஆபத்து நேரும்போதெல்லாம் தாங்கள் எங்ஙனமோ வந்து உதவி புரிகிறீர்கள். எனக்கு யாரால் ஆபத்து நேருகின்றதோ, யான் அதற்குள்ளாகப் போவது தங்கட்கு எப்படித்தான் தெரிய வருமோ, ஒன்றுமே எனக்குப் புலப்படவில்லை. இந்த வரலாறுகளை எனக்குச் சொல்லக் கூடுமானல் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**விக் :** தங்கள் தேமதுர வாக்கால் கேட்கும்போது நான் சொல்லாதிருக்க முடியுமா? இவ்வளவு நேர்ந்த பிறகும் தங்களுக்கு அறிவியாமல் இருப்பது பிழைபடும். தங்கள் தலைநகரிலேயே தங்கள் குலத்திற்கே கேடு விளைவிக்கும் நோக்கத்தோடு ஒரு சதிக்கூட்டம் செயலாற்றி வருகிறது.

**மாதேவி :** வீரரே! எங்கள் தலைநகரிலேயேயா சதிகாரர் சூழ்ந்திருக்கின்றனர்? வியப்பாக வல்லவோ இருக்கின்றது? அவர்கள் யாவர்? சொல்லக்கூடுமோ?

**விக் :** தேவி, முன்பு கொள்ளிடக் கரையில் தங்களை மடக்கியவர்களும் அவர்களேதான். ஆனல் அப்பொழுது நான் எதுவும் அறிந்திருக்கவில்லை. அதன்பின் கங்கை கொண்ட சோழபுரம் வந்த பிறகே அறிய நேர்ந்தது.

**மாதேவி :** என்ன? தலைநகருக்கு வந்திருந்தீர்களா! அப்படியாயின் அரண்மனைக்குத் தாங்கள் ஏனே வரவில்லை?

**விக் :** இடமும் பொருளும் வாய்ப்பாக இல்லை; அதனல் வரவில்லை. தயவு செய்து மன்னிப்பீர்களாக. தங்களுக்கு இடுக்கண் சூழும் என்றே ஐயுற்றேன்; அவ்வாறேதானுயிற்று. எவ்வகையோ தாங்கள் காணுமற் போனதை அறிந்தேன். ஒரு வகையான் நீங்கள் சிறைப்பட்டிருந்த இடமும் அறிந்தேன். மறுமுறையும் மீட்டு வந்த பெரும் பேறு பெற்றேன்.

**மாதேவி :** வீரரே! தாங்கள் செய்த உதவிக்கு என் உடல், பொருள், ஆவி யனைத்தையும் அளித்தாலுங்கூட ஈடிணையாகாதே! அது நிற்க, சதிகாரர் யாவர் என்று யான் அறியலாகுமோ?

**விக் :** நான் மனவுறுதி உள்ளவனாக இருந்தபோதிலும் தங்கள் கிள்ளைமொழி என்னைக் கவர்ந்து விடுகிறது. தங்கள் நகரிலுள்ள சிவானந்த மடத்தாரைத் தாங்கள் நன்கறிவீர்களோ?

**மாதேவி :** நன்றாயறிவேன். சிவானுபூதித் தம்பிரான் தலைமை தாங்கும் அம் மடத்தைத்தானே தங்கள் குறிக்கின்றீர்கள்? எங்கள் ஆதரவில்தானே அவர் கள் செயலாற்றி வருகின்றார்கள். அந்த மடத்தார் கள் தாம் உங்களுக்கு உதவி செய்கிறார்கள் போலும். அன்பே சிவம் என்னும் அன்பு நெறியை நன்கு கடைப்பிடித்து ஒழுகி வருகின்றனர். அவர்கள் தான் தங்கட்கு இவ் விவரமெல்லாம் கூறுகிறார்கள் போலும்.

**விக் :** அம்மணி, தங்கள் மனம் தங்கள் பேச்சைப்போலவே பச்சை. அவர்கள்தான் அம்மணி சதிகாரர்கள்! உங்களுக்கு நம்பகம் ஏற்படாது. அவர்கள்தான். அவர்களே தான்.

**மாதேவி :** என்ன? அவர்களா சதியாற்றி வருகிறார்கள்? எமது உப்பைத் தின்று எங்களுக்கேயா உலை வைக் கிறார்கள்?

**விக் :** அம்மணி, பெரிய தம்பிரான், சமண மடத் தலைவர் கங்காபெருமான் அடிகள் ஆவார். மற்றும் அவர் சீடராய் அமர்ந்துள்ளவர்கள் முறையே வைணவப் பெரியாரும் பௌத்த பிக்ஷுவும் ஆவார்கள். இம் மூன்று சமயத்தாரும் ஒன்று சேர்ந்து சூழ்ந்து தமக்கு ஆதரவாக இராத தங்கள் குலத்தையே வேரறுக்கத் திட்டமிட்டு வருகின்றனர்.

**மாதேவி :** சைவத்தை வளர்க்கத் தோன்றிய அச் சங்கம் சதியையா வளர்க்கிறது? நன்று, நன்று. அப்படி

யாயின் இத்தனை நாட்கள் பாம்புக்குத்தான் பால் வார்த்தோம். அவர்களை அன்புடன் ஆதரித்ததற்கு இதுதான் கைம்மாறு போலும்!

விக் : ஈதெல்லாம் தாங்கள் தலைநகருக்குச் சென்றதும் கவனித்துக் கொள்ளுங்கள். நான் தலைநகரின் புற நகர் வரையிலுமே தங்களுடன் வருவேன். அதன் பின் தக்க தருணத்தில் நான் எதிர்ப்படுவேன். இப் பொழுதே கூறிவிட்டேன்.

மாதேவி : ஐயா, நான் மற்றென்றும் கேட்பேன். மறு தளிக்காது பதிலளிப்பீர்களோ?

விக் : அம்மணி! அப்படியே அளிப்பேன், தேவி. தாங்கள் தயங்காது கேட்கலாம்.

மாதேவி : வீரரே! சினம் கொள்ளாதீர்கள். ஒளியாது கூறுங்கள்? தாங்கள் எந்த நாட்டின் அரசர் என்பதை என் காது குளிரக் கூற இயலுமோ?

விக் : அரச குலப் பெண்டிருக்குப் பேசக்கூடத் தெரி கிறதே? என்னை அரசன் என்று எப்படித்தான் கண்டுகொண்டீர்களோ! வியப்பே!

மாதேவி : அரசே! அவ்வாறாயின் என் ஐயப்பாடு மெய்ப் பாடாகப் போயிற்று தாங்கள் நடந்துகொள்ளும் நேரிய நடத்தை கண்டு, தாங்கள் அரசரல்லாது வேறு யாராகவும் இருகக முடியாது என்பது உறுதி யாக அறிய முடியாது போகுமா? மீண்டும் சொல் லுங்கள்! தாங்கள் எந் நாட்டரசரோ?

விக் : இளவரசி! சொன்னால் பயந்து விடுவீர்கள். வெகுண்டு விடுவீர்கள். எனக்கே இடுக்கண் கொணர்ந்து விடுவீர்கள்.

மாதேவி : அரசே! என்னால் உங்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராது நான் பார்த்துக் கொள்வேன். என்பேரில் நம்பகமில்லையா?

விக் : நம்பகமில்லாமலா இத்துணைத் தூரம் துணை வந் தேன்? அதனால் என்ன நேர்ந்தாலும் சரி, சொல்

லியே விடுகிறேன். நான் தங்கள் விரோதிகளில் ஒருவனே. சளுக்கிய மன்னர் சோமேசுவர பூபதியவர்களுடைய இளைய புதல்வன் யான். என்னைச் சளுக்கிய விக்கிரமாதித்தன் என்று அழைப்பார்கள்.

மாதேவி : ஆ! அப்படியா? வேங்கியை விரைவில் வென்ற விக்கிரமரா நீங்கள்?

விக் : ஆம், அம்மணி. நான் ஏன் இங்கேயே சுற்றித் திரிகிறேன் என்று கேட்கவேண்டும் போலிருக்கிறது, தங்களுக்கு. இல்லையா?

மாதேவி : விக்கிரம வீரரே! எப்படியோ என் மனக் கருத்தை அறிந்துகொண்டீர்களே!

விக் : நான் முதலில் இந்நாட்டிற்கு வந்தது பகைமை பாராட்டியே. ஆனல் நான் முதன்முதலில் சோணுட்டில் கால் வைத்ததுமே பிராட்டியாரைக் கொள்ளிடக் கரையில் காணும் பேறு பெற்றேன். அன்றையிலிருந்து பகைமை யுணர்ச்சி மறைந்துவிட்டது. தேவியாருக்குத் தீங்கு நேராது பாதுகாக்கவேண்டும் என்ற பணியையே மேற்கொண்டேன். தவறுதான். காதலால் கடமையை மறந்தேன். தாங்கள் இனித் தைரியமாகத் தங்கள் தந்தையாரிடம் கூறி, எனக்குத் தக்க தண்டனை வாங்கிக் கொடுக்கலாம்.

மாதேவி : ஆம், தங்களை நன்கு தண்டிக்கவேண்டும். நான் சென்றதும் தந்தையிடம் தவருது கூறுவேன். நானே தண்டிக்கவும் முற்படுவேன். சோழநாட்டு இளவரசியல்லவா நான்? அரண்மனைத் தோட்டத்தில், கொடிவீட்டில், ஒரு முறையல்ல, பன்முறை, அடுத்தடுத்துத் தண்டிப்பேன் அன்பரே!

விக் : கொஞ்சுங் கிளியே! செம்பொற் பாவாய்! அடியேன் அத் தண்டனைகளை விருப்புடன் ஏற்றுக் கொள்வேன். உங்கள் மதிவதனம் மலர்வதை இப்போதுதான் கண்டு மகிழ்கின்றேன். எழுந்து பயணம் தொடர்வோம்

---

களம் 2

# மன்றத்தார் மறைவு

இடம்: பொன்னேரிக் கரை

காலம்: மாலை

நடிகர்: விக்கிரமன், பில்ஹணர்.

[மாதேவி தலைநகரை யடைந்த சின்னாட்கள் கழித்து பில்ஹணரும் விக்கிரமனும் கங்கை கொண்ட சோழபுரத்தில் பொன்னேரிக் கரையில் உரையாடுகிறார்கள்.]

விக்கிரமன்: கவிஞரே! பொன்னேரிக் கரையிலமர்ந்து இனிய தென்றல் நுகரும் தங்கட்கு இடையூறாக நான் வந்து சேர்ந்தது பற்றிச் சிறிது வருந்துகிறேன். மன்னிப்பீர்களாக.

பில்ஹணர்: மெய்யன்பரே! வருக! வருக! அன்பே சிவம்! அன்புத் தளையால் கட்டுண்டவர்களை இறைவன் நினைத்தபொழுது எதிர் நிறுத்துகிறார். அன்பே சிவம். மெய்யன்பர் திரும்பிவர இத்தனை நாட்களாயினவோ? உத்திர உற்சவம் உவப்பாக நடந்தேறிற்றோ?

விக்: மெய்யன்பர் என்றால் நீர்தான் மெய் அன்பர். உற்சவம் உவகையைக் கொடுத்தது. பைங்கிளியையும் பிடித்து வந்தேன். மெய்யடியாரையும் மிதித்து வந்தேன்.

பில்: அதுதான் நகரமே மலர்ந்து அறிவிக்கின்றதே! மாதேவியார் திரும்பிவந்த தினத்தைப் பொது மக்கள் திருவிழாவாகக் கொண்டாடினரே! பிராட்டியார் எப்படித் திரும்பி வந்தார் என்பது யானறிய மாட்டேனா? தேவியாரிடம் சின்னாட்கள் தங்கி யிருந்த

தங்களுக்கு உடனே என்பால் வர இயலுமா ? ஏதோ இப்பொழுதாவது வந்தீர்களே, அதுவே மகிழ்ச்சி.

விக் : நண்பரே ! கேலி இருக்கட்டும். எங்கள் மெய்யடியார் மன்றத்திற்குச் சென்றேன். அங்கு ஒருவருமில்லை !

பில் : சைவப் பெரியார்கள் கூண்டோடு கயிலாயம் சென்று விட்டனரோ ?

விக் : அப்படித்தான் தெரிகிறது. கங்கா பெருமானடிகளாருக்கு நானே கயிலாயத்திற்கு வழிகாட்டி வந்தேன். இங்குள்ள மற்றவர்களைப் பிடித்துவர அரண்மனை வீரர்கள் வந்தார்களாம். அது செய்தி அவர்களுக்கு முன்னரே எட்டிவிட்டதாம். அவ்வளவுதான், அனைவரும் அந்தரத்தியானமாய் விட்டார்கள்.

பில் : அரசருக்கு யாவும் தெரிந்துவிட்டன போலும்.

விக் : நான் வெளியிட்ட பின்னரும்கூட அறியாமலா இருப்பார்கள் ?

பில் : என்ன, நீங்கள் கூறினீர்களா ? அரண்மனைக்கு நீங்கள் சென்றிருந்தீர்களோ ?

விக் : இல்லை. அன்பரே ! மாதேவியாரிடம் யாவும் கூற நேர்ந்தது. தேவியார் அரசரிடம் கூறியிருப்பார்.

பில் : அங்ஙனமாயின் தாங்களும் இன்னார் என்பதை அவர்கள் அறிவார்களோ ?

விக் : நன்ருய் அறிவார்கள், அன்பரே !

பில் : அதையும் தெரியப்படுத்தி விட்டீர்களா ? காதல் பெரிதெனக் கடமையைக் கைவிட்டீர்கள் போலும்.

விக் : அன்பரே ! அஃதங்ஙன மன்று. மாதேவியார் ஒரு பெண்பால். அவரைப் பாதுகாக்கவேண்டியது ஒரு ஆண் மகன் கடமை. மேலும் தேவியாருக்கு அவர்களால் கேடு நேராதவாறு அக் கயவர்களைப் பிடித்துச் சிறைப் படுத்த வேண்டும். அதன் பின்தான் நாம் கொண்ட கருத்தும் நிறைவேறும்.

பில் : எது நிறைவேறும் ? தங்கள் திருமணமா ?

விக் : அப்படித்தான் வைத்துக்கொள்ளுமேன். அப்படியே சோழ இளவரசியை மணந்து கொண்டால் தானென்ன ? நாம் கொண்ட கருத்துக்கு அது குறுக்கிட்டா நிற்கப் போகிறது ?

பில் : மாமன் பேரில் மருகன் பொருவதென்றால் வளைக் கரங்கள் குறுக்கிடாவோ ?

விக் : என் மெய்யுறுதியை நீங்கள் அறியமாட்டீர்களா ? மாதேவியை மணப்பது காதலால் ; சோழரை எதிர்ப் பது கடமையால்.

பில் : அரசர் முடிவு கொள்வது போலவே முடித்துக் கொள்ளட்டும். நன்றேயாக. இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள், நேரே அரண்மனைக்குப் போகப் போகிறீர்களோ ?

விக் : ஈதென்ன பேச்சு! மெய்யன்பர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் பேரின்ப நிலை யெய்த இப்பொழுதே முயல வேண்டும். நான் விசாரித்தறிந்த வகையில் அவர்கள் காஞ்சியில் அறவணஞ் சேரியின் அண்மையில் ஓரிடத் தில் தற்போது தங்கி யிருக்கின்றனராம். ஆங்குச் சென்று ஆவன ஆற்றக் கருதியுள்ளேன். தாங்களும் உடன் வாருங்களேன் ?

பில் : அதுவும் தக்கதே. நாம் இன்றே காஞ்சிக்குப் புறப் படுவோம். காஞ்சி நெருங்கியதும் நான் பிரிந்து தனித்துப் போய்விடுகின்றேன். அங்கு என் உற வினர் இல்லமும் ஒன்று உளது. நான் அங்குத் தங்கியிருந்துகொண்டு உங்களுக்கும் அவ்வப்பொழுது செய்தி யறிவிக்கிறேன். விஷ்ணு காஞ்சியில் திருக் குளத்தருகில் நாம் தினமும் சந்திப்போமாக.

விக் : தாங்களும் இப்பொழுதே வீடு சென்று விடை பெற்று வருவீர்களாக. இருவரும் புறப்படுவோம்.

---

## களம் 3

# சதிகாரருக்கு எதிராக

இடம் : காஞ்சிபுரம்
காலம் : முன்னிரவு
நடிகர் : கங்காபெருமானடிகள், சுங்கமித்திரர், நம்பெருமாள் நம்பி, ஆழ்வார்க்கடியான், விக்கிரமன், பணியாட்கள்.

[காஞ்சியை யடைந்த விக்கிரமன் அறவணஞ்சேரியை யடுத்ததோரிடத்தில் சதிகாரர்கள் தங்கியிருந்த மடத்தை ஒருவாறு கண்டு கொண்டு இரவில் அதனுள் நுழைந்து ஒற்றறிய முடிவு செய்து கொண்டு முன்னிரவில் அவ் வீட்டின் புறத்தே வந்து சேர்ந்தான். கதவு திறந்து கொண்டு பணியாள் ஒருவன் வெளியே வந்து தெருவோடு எங்கோ சென்றான். அதுசமயம் பார்த்து விக்கிரமன் மடத்தினுள் நுழைந்து விட்டான்.]

**விக்கிரமன் :** (தனக்குள்) அப்பப்பா! என்ன இருள்! மையிருட்டு. சமணர்கள் விளக்கேற்றுவதில்லை யென்பது என்னவோ உண்மைதான். ஆனால் இரத்தவெறி பிடித்து அலையும் இவர்களுமா அதனைக் கடைப்பிடிக்க வேண்டும்? ஒருவாறு இவ்வளவு தூரம் மடத்தினுள் வந்து விட்டோம். இம் முற்றத்தையும் தாண்டி அப்பாற் செல்வோம். ஆ! இங்கென்ன விளக்கொளி காணப்படுகிறதே! ஆம், அந்தக் கூடத்தினின்றே ஒளி வருகிறது. ஆங்குள்ள அப் பலகணியின்கீழ் ஒளிந்து கொண்டு, கூடத்தினுள் என்ன நடக்கிற தென்று உற்றுக் கேட்போம்.

[கூடத்தினுள் சதிகாரர் நால்வரும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.]

**கங்காபெருமான் :** அன்பர்களே! நாம் மேற்கொண்ட செயலை இருமுறை கெடுத்தழித்த அந்த வடநாட்டு வீரன் எவனென்று தெரியவில்லை. நாம் தான் சதியாற்று கிறோம் என்றால், நமக்கு மேல் அவன் சதியாற்று கிறான். நமது மெய்ப்பாடுகள் எங்ஙனமோ நம்மைத் தவிர மற்றொருவனுக்கும் தெரிந்து விட்டிருக்கிறது. இனி நாம் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**சுங்கமித்திரர் :** அச் சோழவரசனுக்கும் நம் சதிச் செயல்கள் எங்ஙனமோ எட்டியிருக்கிறதே? முன் கூட்டியே நாம் அறியாதிருந்தால் அவர்கள் கைப் பட்டிருப்போம் அன்றோ ?

**நம்பி :** ஆமாம், சிறைப்பட்டிருப்போம்.

**ஆழ்வார் :** அரண்மனையில் உள் ஆட்கள் இருக்கிற வரைக் கும் நாம் எதற்கு அஞ்சவேண்டும் ?

**கங்கா :** எப்படியிருப்பினும் இனியும் நாம் அங்குத் தங்கி யிருந்தால் நமக்கு மேலும் துன்பங்கள் நேருமே யன்றி, நாம் கருதியுள்ளது சிறிதும் நிறைவேறாது. அதற்காகவேதான் சற்றுத் தலைமறைவாக இருப் போம் என்று உங்களையெல்லாம் இங்கு அழைத்து வந்தேன்.

**ஆழ் :** எப்பொழுது இவ்வளவு தூரத்திற்கு ஆகி விட்ட தோ, இனி நாம் சதி செய்து சோழர் குடும்பத்திற்கு இன்னலிழைப்பது எளிதன்று. ஆகவே, வேறு வழியில் தான் முயன்று பார்க்கவேண்டும்.

**கங்கா :** ஆம், நம்மால் வேறு என்னதான் செய்ய முடியும்? படை திரட்டிப் போருக்கெழ இயலுமா ? வேற்றர சர்கள் யாரையேனும் துணைக்கொண்டு கருதியது முடிக்கலாமா ? அங்ஙனமென்றால் எந்த அரசனைத் தேடிப் போவது ?

**நம்பி :** அரசர்களாவது அரக்கர்களாவது ? ஒருவனாவது வீரம் மிகுந்தவனாக இருக்கிறானா ? தெற்கே பாண்டி

யனும் ஈழனும் போராற்றுகிறார்கள். ஆனாலும் வெற்றி கண்ட நாளே கிடையாது. வடக்கே சளுக்கன், கங்கன். ஒருவர் மாற்றி ஒருவர் போரில் புறமுதுகு காட்டிப் பின்னேறுவதே அவர்களது வீரம். இந்தப் பழைய அரசர்களால் யாதொரு பயனும் நமக்கேற்படப் போவதில்லை.

**சுங்க :** புதிய அரசர்களில்தான் யாரிருக்கிறார்கள் ?

**ஆழ் :** எனக்கு ஒன்று தோன்றுகிறது. வேங்கி நாட்டைப் புதிதாக மேலைச் சளுக்கவரசன் ஒருவன் கைப் பற்றியதாகக் கேள்வி. அவன் சிறந்த ஆற்றல் படைத்தவனாகக் காணப்படுகிறான். அவனையடுத்து நம் கருத்தை முடித்தாலோ ?

**கங்கா :** உம், அவன் மட்டும் என்ன? அவனுந்தான் இதே சோழர்களோடு இடைதுறை நாட்டில் போர் புரிகிறான். தோல்விதான் கண்ட பயன்.

**சுங்க :** அவன் இராஜாதிராஜனையே கொன்றானமே? அப்படியாயின் அவன் எவ்வளவு வீரனாக இருக்க வேண்டும் ?

**கங்கா :** உம். ம், என்னவோ காக்கையேறப் பனம் பழம் வீழ்ந்தது. இவன் போராடும்பொழுது அவனுக்குப் பேரின்ப நிலை கிட்டிவிட்டது. அதனால், இவன்தான் அவனைக் கொன்று வென்றான் என்று கொள்ள லாமா ? அதன்பின் அவன் செயல் என்னவாயிற்று? இராஜேந்திரனுக்கு எதிர்நிற்க மாட்டாமல் பின்னி டைந்து ஓடிக கொண்டே யிருக்கிறான்.

**ஆழ் :** கீழை நாட்டில் இராஜேந்திர குலோத்துங்கன் என்று ஓரரசன் இருக்கின்றான். அவனும் இளைஞனே. மிடுக்கேறிய காளைப் பருவத்தினன். அவனை நாம் அணுகித் துணைக் கொண்டாலோ ?

**கங்கா :** பெரிய பெரிய பேரரசர்களெல்லாம் தத்தளிக்கும் போது இச் சிறுவன் என்ன சாதித்து விடப் போகிறான் ?

**சுங்க :** அப்படிக் கூறலாகாது. உருவத்தால் உடல் சிறியர் என்றிருக்க வேண்டா. சோழப் பேரரசையே நிறுவி நிலை நாட்டியவன் ஆதித்தன் என்னும் ஓரிளைஞன் தானே ? பேரரசனை ஹார்ஷனைக் கட்டிளைஞனை புலிகேசி தோற்கடிக்கவில்லையா ?

**கங்கா :** என்னவோ, எனக்கு இது இசைவாகத் தோற்ற வில்லை.

**நம்பி :** கிருஷ்ணபகவான் கீதோபதேசத்தில் "விஜயா! பணி செய்! பயனை எதிர்பார்க்காதே! அது தானகவே உன்னை வந்தடையும்" என்று திருவாய் மலர்ந்தருளுகிறார்.

**சுங்க :** முயற்சி திருவினை ஆக்கும். நாம் ஏன் அவ் வகையில் முயன்று பார்க்கலாகாது ? எனக் கென்னவோ இம்முறையால் வெற்றி பெறுவோம் என்று தான் தோன்றுகிறது.

**கங்கா :** நீங்களெல்லாம் தைரியம் கூறும்போது ஐயம் ஏன் ? முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார். அவ் வாறே முயற்சிப்போம். நாம் ஆழ்வார்க்கடியானை அதற்கு நியமனம் செய்வோம். தந்திரமாக அவனை அவன் ஒப்ப வைத்து விடுவான். கூடுமானல் நானும் உடன் செல்வேன்.

**நம்பி :** அவ்விதமே செய்வோம். சரி, நேரமாகிறது. சற்றுக் கண்ணுறங்குவோமா ?

[சிறிது நேரம் பேச்சரவமே யில்லை. விக்கிர மனும் இவ்வளவும் உற்றுக் கேட்டு, பின் அவ்விடம் விட்டு அகன்று விடுமாறு மடத்தின் பின்புற மதிற்சுவர்ப் பக்கமிருந்த ஒரு மரத்தின் மீதேறி, அப்புறம் குதித்துவிட யத்தனிக்கிறன். அது சமயம் பணியாள் ஒருவன் பார்த்து விடுகிறன்.]

**பணியாள் :** கள்வன்! கள்வன்! மதிற் சுவரின் மேல் கள்வன். பிடியுங்கள்! பிடியுங்கள் !!

[பலர் ஓடி வருகிறார்கள். சதிகாரர் நால்வரும் வந்து சேருகிறார்கள். விக்கிரமனைப் பிடித்து விட்டார்கள். பலர் ஒன்று சேர்ந்து விடவே விக்கிரமனால் திமிறியோட இயலவில்லை.]

**கங்கா :** விளக்கை அருகு கொண்டு வாருங்கள். இக் கள்வன் யாவனெனப் பார்ப்போம். ஆ! இவன் நம்மிடமிருந்த சங்கரனல்லவா ?

**நம்பி :** இவன் சங்கரனைப் போலிருக்கிறான். ஆனால் இவன் சங்கரன் இல்லை. எங்கே கையைப் பார்ப்போம். பச்சை இல்லை பார்த்தீர்களா ? முகத்தில் மச்சம் இல்லை பார்த்தீர்களா ?

**கங்கா :** ஐயமின்றி இவனே அந்த வேடதாரிச் சங்கரன். மாற்றுருவேற்று நம்மை ஏமாற்றி விட்டான். கொள்ளிடக் கரையில் வந்தவனுமிவனே; சங்கரனாக வந்தவனுமிவனே; சித்தன்னவாசலில் என்னைக் குத்தி வந்தவனுமிவனே. நம்மை நிழல் போல் தொடர்ந்து வருகின்றான். இன்றே நம் கைப்பட்டான். கட்டுங்கள் இவனைக் கயிற்றால். கொண்டு தள்ளுங்கள் இவனை இருட்டறையில்.

[விக்கிரமன் இருளடைந்த ஓரறையில் அடைக்கப்பட்டான். அறைக்கதவு பூட்டப் பெற்றது. ஆளரவமே அற்றுவிட்டது. அச் சிறையில் விக்கிரமன் தனித்திருக்கிறான்.]

**விக்கிரமன் :** ஆஹா! நமதெண்ண மெல்லாம் மண்ணாகி விட்டதே! இவ்வாறு இவர்கள் கையிலகப்படுவோம் என்று நான் கனவிலும் கருதவில்லையே! இதுவரைப் பட்ட பாடனைத்தும் வீணாகி விட்டதே. இந்த அறையினின்று தப்பிப் பிழைப்பதும் இயலாது. இவர்கள் ஊணும் தண்ணீரும் கூடக் கொடுக்க மாட்டார்களே! வீடு பேறடையச் செய்து விடுவார்களே! ஐயகோ! அந்தோ! கொடியவர்கள்! ஈவிரக்கமற்றவர்கள். ஆ! நானே இவ்வளவு தவிக்கிறேனே? அப்பூங்கொடி இவர்கள் கைப்பட்டபோது எப்படித்தான்

தவித்தாளோ? அவளையாவது நான் மீட்டு வந்தேன். என்னை எவர் வந்து மீட்பர்? நானிங்கேயே மடிய வேண்டியதுதானா? எனக்கு எவர் வந்து உதவுவர்? பில்ஹணருக்குககூட இது செய்தி தெரிய வராதே? என் நிலை இப்படியா முடியவேண்டும். பிறர்க்குதவி செய்யவந்த எனக்கு உதவிசெய்வார் எவருமில்லையா? யாரே முன் வருவர். ஹா! உடலெல்லாம் ஒரே குத்து வலி; கண் சுழலுகிறது; தலை சுற்றுகிறது!

[சோர்ந்து மயங்கிக் கீழே விழுகிறான்.]

---

களம் 4

# வெளுத்ததெல்லாம் பால்

இடம் : விஷ்ணு காஞ்சி

காலம் : பகல்

நடிகர் : ஆழ்வார்க் கடியான், பில்ஹணர்.

பில்ஹணர் : (தனக்குள்) இரண்டு தினங்களாக மாலைப் பொழுதில் பொற்றாமரைக் குளத்தருகில் காத்திருந்தும், விக்கிரம அரசனைக் காணவே யில்லையே? அவர் இங்கு எங்காகிலும்தான் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். எங்கு சுற்றினாலும் மாலை வராமலிருக்க மாட்டாரே! ஒருக்கால் அவரே சதிகாரர் வசம் சிக்கி யிருப்பாரோ? இன்று பெருமாள் கோயிலில் கருட சேவை என்கிறார்கள். பல இடங்களில் தேடிப் பார்ப்போம். அக் கூட்டத்துள் எங்காகிலும் அவர் தென்பட மாட்டாரா, பார்ப்போம்.

[கவிஞர் கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார். ஆழ்வார்க் கடியான் வந்து எதிர்ப்படுகிறான்.]

ஆழ்வார் : ஓய் பாட்டுக்காரரே! எங்கு ஓடி யொளிகிறீர்? நில்லும், நில்லும்!

பில் : அடடா, அடிகளாரா? அபசாரம், அபசாரம். கூட்டத்தையே பார்த்துப்போன நான், தாங்கள் எதிர்வந்ததையே கவனிக்கவில்லை. மன்னிக்கவும். ஏது இவ்வளவு தூரம்? சுகம்தானே!

ஆழ் : சுகத்திற்கென்னையா குறைவு? நன்றாகத்தானே இருக்கிறேன். நீரே பார்த்துக் கொள்ளுமேன். நல்ல ஆளை என் தலையில் கட்டினீர்கள் ஐயா?

எங்கள் எல்லோருக்கும் ஒரே பட்டை நாமம் சாற்றி விட்டுப்போய் விட்டான் ஐயா அவன்.

பில் : யாரைக் குறிக்கின்றீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே? தயவு செய்து அமைதியாய்க் கூறுங்கள். வாருங்கள், இப்படிச் சற்று உட்காருவோம்.

ஆழ் : பெரிய புரட்டன் ஐயா அந்த ஆள்.

பில் : அது யாரென்றுதான் கூறுமேன்.

ஆழ் : ஒன்றுமே தெரியாததுபோல் பாசாங்கு செய்கிறீரே! நீர் என்னிடம் கொண்டு சேர்த்த சங்கரன் தான் ஐயா அவன்.

பில் : ஓஹோ! அவன் என்ன செய்து விட்டான்? ஏதாவது முறை தவறி நடந்து கொண்டானு?

ஆழ் : முறை தவறவில்லை. ஆள்தான் தவறிவிட்டான். எங்களையே சதி செய்து விட்டானையா அவன். எங்கள் கங்கா பெருமானையே குத்திவிட்டான். பெரிய புரட்டன். பசுத்தோல் போர்த்த புலி.

பில் : ஹா! என்ன? முன்பு நான் கேட்டபோது அவன் அவருக்கு அருமந்த சீடனுகை இருக்கிறுன் என்றீரே!

ஆழ் : அப்படித்தான் இருந்தான். ஆனல் பிறகல்லவோ தெரிய வந்தது அவன் செய்த புரட்டுக்கள். கொள்ளிடக் கரையில் அவளை மீட்டதும் அவன்தானும். சுவாமிகளைக் குத்தி வீழ்த்தி மறுமுறையும் அவளை மீட்டவனும் அவன்தானும். சங்கரனுகை நம்மிடம் இருந்துகொண்டே நமக்கெதிராகச் சதியாற்றி விட்டான்.

பில் : ஐயையோ! அப்படியாயின் அவன் என்னையும்தான் ஏமாற்றியிருக்கிறுன். தான் ஒரு திக்கற்ற ஏழை என்று என்னிடம் வந்தான். நான் தங்களிடம் கைகாட்டி விட்டேன். அவ்வளவு புரட்டனு அவன்? எங்கே யிருக்கிறுன் அவன் இப்போது? கூறுங்கள்; இப்பொழுதே நேரே சென்று பழி வாங்குகிறேன்?

ஆழ் : நீர் பழிவாங்கும் அளவுக்கு நாங்கள் அவனை விட்டு வைக்கவில்லை. தானாக வந்து தொழுவில் மாட்டிக் கொண்டான். வகை கேடாக வந்து எங்களிடம் அகப்பட்டுக் கொண்டான். இருக்கிறான் இருட் டறையில்.

பில் : ஆ! அப்படியா? பலநாள் திருடன் ஒரு நாள் அகப் படுவான். அகப்பட்டுக் கொண்டானா? நன்றாய் வேண்டும்.

ஆழ் : ஆள் தீர்ந்து விடுவான். எங்களது அறவணஞ்சேரி மடத்தின் இருட்டறையில்தான் அவன் தானே சமாதி யடையப் போகிறான்.

பில் : போதும், அவன் பேச்சை இனியும் எடுக்காதீர்கள். ஒழியட்டும், ஒழியட்டும். தாங்கள் தயவு செய்து இதனை மறந்து விடுங்கள். நானும் இனி விழிப்பாகவே இருக்கிறேன்.

ஆழ் : ஆம் ஐயா, வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணி விடாதீர்கள். அதோ பெருமாள் எழுகிறார். திவ்ய மான தரிசனம். வரதராஜா! கஞ்சி வரதா! வரத ராஜா! நான் வருகிறேனையா. உலகளந்த பெரு மாளே! கஞ்சி வரதப்பா!

[ஆழ்வார்க்கடியான் அகன்று விடுகிறான்.]

பில் : (தனிமொழி) கெட்டதே காரியம். வகை கேடாக வல்லவோ சிக்கிக் கொண்டான். இந்த ஆழ்வார்க் கடியான் ஆவேசத்தில் அவ்வளவையும் வெளிப் படுத்தி விட்டான். நல்லது. மடமோ மிகவும் பாது காப்பான இடம். கட்டுக் காவல் உள்ளது. என் ஒருவ னால் மட்டும் விக்கிரமனை விடுவிக்க இயலாது. நானும் சிக்கவேண்டியதே. வேறு பலரை நானாக இங்கு ஒன்று சேர்க்கவும் முடியாது. ஆனால்....ஆனால்....ஆம், காஞ்சி அரசரை வேங்கியரசருக்கு உதவும்படி வேண்டினாலோ! முடியும், முடியும். சரி, காலங் கடத் தாமல் காஞ்சி அரசரிடம் சென்று முறையிடுவோம்.

## களம் 5

# விடுதலை! விடுதலை!!

| |
|---|
| இடம்: அறவணஞ்சேரி மடம் |
| காலம்: மாலை |
| நடிகர்: ஆணையாளர், மடத்துத் தலைவர், பில்ஹணர், விக்கிரமன், வீரர்கள். |

[பில்ஹணர் காஞ்சி அரசரிடம் சென்று உள்ளது கூறி அவர் உதவி பெற்று அரசாங்க ஆணையாளருடனும் வீரர்களுடனும் தானும் மாறுவேடங் கொண்டு, சமண மடத்தை யடைந்தார்.]

ஆணையாளர்: ஐயா, தலைவரே! வணக்கம். அரசர் கட்டளையை நிறைவேற்ற இங்கு வந்துள்ளோம். உங்கள் மடத்துள் அரசாங்க விரோதிகள் பலர் மறைந்திருப்பதாகச் செய்தி எட்டியுள்ளது. சோதனையிட்டு அவர்களைச் சிறைப் பிடித்துப் போவோம். நீங்கள் ஏன் அப்படிப்பட்டவர்களுக்கு இடங்கொடுக்க வேண்டும்? முதலில் உம்மைச் சிறை செய்கிறேன்.

மடத்தலைவர்: ஐய்யய்யா! ஏழையை மன்னிக்க வேண்டும் ஐயா! ஒரு பாவமும் அறியேனையா. சில மெய்யடியார்கள் தாம் இங்கிருக்கிறார்களையா. அவர்கள் மனத்தால் கூட அரசாங்கத்தைப் பற்றிக் கருத மாட்டார்களையா. யாரோ தவறாகவே செய்தி சொல்லியிருக்க வேண்டும்.

ஆணை: உம் கதை யொருபுற மிருக்கட்டும். நாங்கள் சோதனை யிடுவோம்.

மட: நன்றாகச் செய்யுங்களையா. மடியில் கனமிருந்தால் தானே ஐயா வழியில் பயம்.

ஆணை : சரி, மூடும் வாயை. எடும் சாவிக் கொத்தை இப்படி. ஏய், வீரர்களே, நுழையுங்கள் உள்ளே. மூலை முடுக்கு, கூடம் மாடம், அறை துறை முதலிய எல்லா இடங்களையும் ஒன்று விடாமல் பலராகப் பாய்ந்து சென்று சோதனையிட்டுப் பிடியுங்கள்.

[உள்ளே மணியொன்றொலிக்கிறது.]

பில்ஹணர் : ஆணையாளரே! விரையுங்கள், விரையுங்கள். எச்சரிக்கை மணியொலித்து விட்டது. சதிகாரர்கள் ஓடி யொளிந்து விடுவார்கள்.

[எல்லோரும் விரைந்தோடுகிறார்கள். பாத்திரம், பண்டம் எல்லாம் கீழே உருண்டு கிடக்க, மடத்தின் பின்புறக் கதவு திறந்து கிடக்கிறது. மடத்தில் ஒருவரும் இல்லை.]

பில் : ஆஹா! கெட்டு விட்டது காரியம். எல்லோரும் தப்பி விட்டார்கள் !

ஆணை : ஐயா, அவர்கள் மிகுந்த திறமை யுள்ளவர்கள் போலும். எங்ஙனமோ தப்பி விட்டார்களே? சரி, வாரும் போவோம்.

பில் : இன்னும் சற்றுப் பொறுங்கள். நாம் செய்ய வேண்டுவது மற்றொன்று முளது. இதோ இப்படியே வாருங்கள்.

[பல பகுதிகளையும் கடந்து இருட்டறைக் கருகில் வருகிறார்கள்.]

பில் : ஐயா, சாவிகள் ஒன்றினால் இவ்வறைக் கதவின் பூட்டைத் திறவுங்கள். இதனுள்ளே தான் இருக்கிறார் நாம் விடுவிக்க வந்த வேங்கி யரசர்.

ஆணை : ஆ! அப்படியா!

[கதவைத் திறந்து உள்ளே போகிறார்கள்.]

விக்கிரமன் : ஐயோ! மறுபடியும் துன்புறுத்த வந்து விட்டார்களே!

பில் : அரசே! உங்களைத் துன்புறுத்த வரவில்லை. விடுவிக்கவே வந்துள்ளோம். விடுதலை, விடுதலை. கவலையை விடுக்க.

விக் : ஐயா, நன்றாயிருக்கவேண்டும் நீங்கள். உங்கள் உதவியை யென்றென்றும் மறவேன்.

பில் : மெள்ள எழுந்திரும். கையால் தாங்கிக் கொள்கிறேன்.

விக் : மிக்க வந்தனம் ஐயா! எனக்கு உயிர் கொடுத்த தாங்கள் யாரென யான் அறியலாமோ?

[மாற்றுடையைக் களைந்து நிற்கிறார் பில்ஹணர்.]

பில் : இப்பொழுது தெரிகிறதா ?

விக் : உற்றவிடத்து உயிர் வழங்கும் உத்தமரே! மெய் அன்பரே! வாழ்வில் இன்று ஒருநாள். இதுவே பெருநாள். உங்களை யென்றென்றும் மறவேன்.

பில் : காஞ்சி யரசருக்கும் நன்றி யறிவிக்க வேண்டும் ; அதற்கும் சிறிது வைத்துக் கொள்ளுங்கள். வாயிலில் பல்லக்கு காத்திருக்கிறது. வாருங்கள் செல்வோம் ; காஞ்சி யரண்மனையை யடைவோம். வாருங்கள்.

# அங்கம் 4

## களம் 1

# செவிட்டுச் சோதிடர்

இடம் : காஞ்சிபுரம்

காலம் : மாலை

நடிகர் : பில்ஹணர், விக்கிரமன்.

விக்கிரமன் : உயிர் கொடுத்துதவிய உத்தமரே! தங்களுக்கு நான் என்னுயிருள்ளளவும் கடமைப் பட்டுள்ளேன். தாங்கள் உதவியிரா விட்டால் நான் உயிர் தப்பி யிருக்க மாட்டுமா?

பில் : ஈதென்ன மொழி! ஏதோ நான் ஒரு கருவியாக இருந்தேனே யன்றி வேறல்ல. அந்த ஆழ்வார்க் கடியான் செய்தி கூறியிராவிடில் நான் தங்களுக்கு எங்ஙனம் உதவியிருக்க இயலும்?

விக் : காஞ்சி யரசனிடம் உதவி கோர வேண்டும் என்று உடனே நினைத்துக் காரியத்தை முடித்து வைத்தீரே! அது போற்றத்தக்க செயலன்றோ! நன்று, இனி நாம் மேற்கொள்ள வேண்டியது?

பில் : இன்னும் என்ன இருக்கிறது? அரசர் சோணாடு சென்று மாதேவியை மணமுடிக்க வேண்டியதுதான்.

விக் : அஃது ஒருபுறமிருக்க, இப்பொழுது வேறு சில புதிய சதிகள் கிளம்பி யிருக்கின்றனவே! அதனை ஒட்டுக் கேட்கப் போகத்தானே சிறைப்பட்டேன்.

பில் : புதிய சதிகளா? அவர்கள் இத்துடன் நின்றுவிட வில்லையா ?

விக் : ஏன் நிற்கிறார்கள்? அவர்கள் யாவரும் இப்பொழுது நேரே கீழைச் சளுக்கன் இராஜேந்திர குலோத்துங்க னிடம் சென்றிருக்கிறார்கள். அவனைத் துணைக் கொண்டு சோழரை மடக்கப் போகிறார்கள்.

பில் : அப்படியா செய்தி ! செய்வார்கள். முன்னேறுவார் கள். அவனும் ஒரு விதத்தில் சோழர்பேரில் நாட்டங் கொண்டிருக்கிறான். இராஜேந்திரன் பிறவியிலேயே சோழப் பேரரசுக்குரியவனாகப் பிறந்தவன். கால கதியில் அவனுக்கு அப்பெரும் பேறு கிட்டவில்லை. அவனும் இவர்களைத் தன் கைக் கருவியாகப் பயன் படுத்தி ஏதும் சூழ்வதானாலும் வியப்பதற்கில்லை.

விக் : அதற்கு நாம் இடங் கொடுக்கக்கூடாது. தாங்கள் ஒரு சிறு உதவி செய்வீர்களோ?

பில் : அரசே! தாங்கள் கூறுவனவற்றைக் கட்டளையாக மதித்து நடப்பேன். இப்பொழுது கீழைச்சளுக்க நாடு சென்று கண்காணிக்க என்னைப் பணிக்கப் போகின்றீர்கள். நான் அதை யேற்கப் போகின் றேன். அவ்வளவுதானே ?

விக் : தலை சிறந்த இராஜ தந்திரி ஐயா, தாங்கள். எங்ங னமோ என் மனக் கருத்தை உள்ளவாறு அறிந்து கொண்டீர்கள்! ஆம், தாங்கள் அதை மேற்கொண்டு அங்கு நடைபெறும் சூழ்ச்சிகளை ஒருவாறு அறிந்து கொள்ளுங்கள். நான் மாறுவேடங்கொண்டு அவர் களுக் கெதிர்ப்படுவதென்பது இனி இயலாது. அது நமது செயலையே கெடுத்துவிடும். தாங்கள் இம்முறை அவ்வாறு சென்று ஆவன அறியுங்கள்.

பில் : அங்ஙனமே செய்கிறேன். சோதிட நூலில் எனக்குச் சிறிதளவு பயிற்சியுண்டு. மாற்றுருத்தாங்கி சோதிடன் போலக் குலோத்துங்கனை அணுகி, அவன் அருகில் எப்பொழுதும் இருக்குமாறு செய்து கொள்கிறேன்.

ஐயப்பாடு எழாதிருக்குமாறு முழுச் செவிடன்போல் நடித்துக் கொள்கிறேன். அப்பொழுதுதான் அவர்கள் நானிருந்தாலும் சிறிதும் அச்சமின்றி மனம் விட்டுப் பேசிக் கொள்வார்கள். அங்ஙனமே செய்கிறேன்.

**விக் :** அதுவே தக்கது; மிகவும் விழிப்பாக இருங்கள். நானும் வேங்கியை விட்டு வந்து நெடுநாட்கள் ஆகிவிட்டன. தந்தையையும் காணவேண்டும். அதன் பின் சோணாடு செல்ல வேண்டும். இன்னும் பதினைந்து தினங்களில் சோழர் தலைநகரையடைவேன். தாங்களும் அங்கு வந்து சேருங்கள். வழக்கம் போல் பொன்னேரிக் கரையில் சந்திப்போமாக.

**பில் :** அங்ஙனமே யாகட்டும். நலனே யாக.

---

களம் 2

# குலோத்துங்கனும் கொலைபாதகர்களும்

| | |
|---|---|
| **இடம் :** | குலோத்துங்கன் அரண்மனை |
| **காலம் :** | காலை |
| **நடிகர் :** | குலோத்துங்கன், கங்காபெருமானடிகள், ஆழ்வார்க்கடியான், செவிட்டுச் சோதிடர். |

*[சதிகாரர்களாகிய கங்கா பெருமானடிகளும் ஆழ்வார்க்கடியானும் கீழைச் சளுக்க அரசன் இராஜேந்திர குலோத்துங்கனை யடைந்து, தமது கருத்துக்கிசையுமாறு செய்து கொண்டனர். செவிட்டுச் சோதிடர் வேடம் புனைந்த பில்ஹணரும் குலோத்துங்கன் ஆதரவு பெற்று அரசவைச் சோதிடராகவும் அன்றன்று அரசர்க்குக் கால நிலை அறிவிப்பவராகவும் இருக்கிறார்.]*

**குலோத்துங்கன் :** அடிகளவர்களே! தங்கள் கருத்தும் என் கருத்தும் ஒன்றாகவே இருக்கிறது. நல்லது. தாங்கள் எனக்குப் பக்கபலமாக இருக்கும்பொழுது நானெதற்குக் கலங்கவேண்டும்?

**கங்கா :** அரசரே! நாங்களும் எங்களைச் சேர்ந்த மெய்யடியார்கள் பலரும் எவ்வகையானும் உங்கட்கு உதவியாகவே இருந்து வருவோம். சமயப் பூசலை எவ்வளவு தூரம் வளர்ந்தோங்கச் செய்யவேண்டுமோ அவ்வளவும் எங்கள் மெய்யன்பர்கள் செய்து வருகிறார்கள். நாளடைவில் பொதுமக்களுக்குச் சோழவரசன் பால் வெறுப்பேற்படும் வண்ணம் செய்து விடுவார்கள். இவ்விதம் பொதுமக்கள் போக்கும் நம்பாலிருக்கும்.

**குலோ :** *நன்று! சோழரைப் படைவலியால் வென்று விடுவதென்பது இயலாதது. சோழருக்கும் இன்ன லிழைக்கவேண்டும், போரும் மேற்கொள்ளக்கூடாது. அவ்விதமான வழி யேதும் காணவேண்டும்.*

**கங்கா :** *ஆம், சோழர் வலிமை நாம் அறியாததல்ல. தெரிந்தும் போரை மேற்கொண்டால் அது தீவினை யாகவே முடிவுறும்.*

**ஆழ்வார் :** *அடிகளவர்களே! சோழவரசர் வீரராஜேந்திர ரது தேவியார் அருமொழி நங்கையார் நம் குலோத் துங்கர்பால் மிகவும் அன்புடையவர்கள். பழைய உறவை விடாது போற்றுபவர்கள். குலோத்துங்கர் நன்மையில் நாட்டமுடையவர்கள். அந் நங்கையார் ஆதரவில் இவர்கள் ஆங்குப் பல நாட்கள் அரண் மனையிலேயே தங்கியிருக்க இயலும். அந்தப் பொழுது பார்த்து ஏதும் இன்னலிழைக்கலாம்.*

**கங்கா :** *அதுவும் சிறந்த யோசனையே.*

**குலோ :** *ஆம், அவ்வாறும் செய்யலாம். நானும் அரண் மனைக்குள்ளிருந்து அரசர்க்கே ஏதாகிலும் தீங் கிழைக்கலாம். வெளிப்படையாகவும் இராது. அவ் இடை நேரத்தில் பொது மக்களும் கிளர்ந்தெழுந்து விடுவார்கள்.*

**கங்கா :** *அதுவே சிறப்பாகத் தெரிகிறது. ஆனல் அரசர் இராஜேந்திரர் சளுக்கப் போரில் ஈடுபட்டு நாடு விட்டுச் சென்றிருக்கிறார். இப்பொழுது தலைநகரில் வீரராஜேந்திர சோழரே இருந்து வருகிறார். அவர்க்கு இன்னலிழைப்பதால் பயனென்றும் கிட்டாது. இராஜேந்திரன் வரும் வரையில் நாம் காத்திருக்கவேண்டும்.*

**குலோ :** *அதற்காக நாம் ஏன் காத்திருக்கவேண்டும்? இப் பொழுது முதலே போகவர இருந்துகொண்டால் அவர் வந்த பின்னும் வந்து போவது புதுமையாக*

இராது. அதனல் இப்பொழுது அங்குப் போய் வருவதனல் நன்மையே யன்றித் தீமையில்லை.

**கங்கா :** அவ்வாறே மேற்கொள்ளுங்கள். ஐயா, சோதிடரே! இப்படி வாரும்.

**சோதிடர் :** ஓ, அருந்தி விட்டேன், காலை உணவு அருந்தி விட்டேன். இப்பொழுது எனக்கு ஒன்றும் வேண்டாம்.

**கங்கா :** அட செவிடே! டமாரச் செவிடு! இப்படி அருகே வாரும். உரத்துச் சொல்லித் தொலைக்கிறேன். நல்ல வித்தை நிறைந்தவர்களுக்கு ஏதாகிலும் ஒரு குறை யிருக்கத்தான் செய்கிறது. இது சோதிடப் புலி; காதோ டமாரச் செவிடு. (சற்று உரக்க) நமது அரசர் சோணுடு செல்லவேண்டும்; மிகவும் இன்றி யமையாத பணியை நிறைவேற்றப் போகிருர். இக் கால பலன் எவ்வாறுள்ளது? இங்கிருந்து என்றைக் குப் புறப்படலாம்?

**சோதி :** இப்பொழுதே புறப்படலாம். காலை உணவிற்கா? சோணுட்டு இட்டிலிப் பணியாரமா? நன்ருக இருக்கும்!

**கங்கா :** அட இதென்ன, ஒன்று கேட்க ஒன்று உளறு கிறது. அட செவிடே! (இன்னும் உரக்கக் கத்திக் கேட்கிருர்.) அரசர் சோணுடு செல்லவேண்டும். காலநிலை எப்படி?

**சோதி :** குலோத்துங்கரின் காலநிலையைக் கேட்கிறீர்களா? அதை அப்பொழுதே கேட்கக் கூடாதோ? (பஞ்சாங் கத்தையும் ஜாதகத்தையும் மாறிப் மாறிப் பார்த்து) ஜாதகத்தைப் பார்க்கவே வேண்டாம். நீங்கள் கேட்ட இந்த லக்னமே திவ்யமான நேரம். இந்த லக்னத்தில் அஸ்வமேத யாகம் தொடங்கி திக்விஜயத் திற்குக் கூடக் கிளம்பலாம். திக்விஜயம் பலிதமாகும். இந்த யோக காலத்தில் எதை மேற்கொண்டாலும் காரியசித்தி கண்டிப்பாய் ஏற்படும். ஜாதக ரீதி

யாகவும் இப்பொழுது பாவம் உச்சத்திலிருக்கிறது. இப்பேர்க்கொத்த கிரக நிலையில் ஆண்டியும் அரசனுவான், அரசனும் சக்கரவர்த்தி யாவான். சர்வ சித்தி, சர்வ சித்தி !

**கங்கா :** நன்ருகப் பார்த்து விட்டீர்களா ?

**சோதி :** நான் சொன்னபடி நடைபெருவிட்டால் சோதிட சாஸ்திரமே பொய். நீங்களும் பொய், நானும் பொய். அவ்விதம் நடக்காவிட்டால் என் கண்களைப் பிடுங்கி யெறிந்து விடுங்கள்.

**கங்கா :** நல்லது, இப்பொழுதாவது உரக்கக் கத்தியாவது கேட்டுப் பதில் வாங்குகிருேம். இனி கண்ணும் போனல் அழகுதான். ஒவ்வொருவரையும் கையால் தடவிப் பார்க்க வந்துவிடுவீர். நல்லது.

**குலோ :** சரி, அப்படியிரும். சபைக்கு வந்து சன்மானம் பெற்றுச் செல்லும்.

[சோதிடர் போகிருர்.]

## களம் 3

# உயிர்நீப்பர் மானம் வரின்

| | |
|---|---|
| இடம் : | கலியாணபுரம் |
| காலம் : | பகல் |
| நடிகர் : | நகரத்தார். |

*[சோழருடன் போரிட்டிருக்குங் காலை, சளுக்க மன்னர் சோமேசுவரர் உடல் நலங் குன்றி நோய்வாய்ப்பட்டுப் போர் முனைக்குச் செல்லாதிருந்து விட்டார். ஆனதால் போரிட அஞ்சி எதிர்ப்படாது பயங்கொள்ளியாகி விட்டார் என்னும் வசைமொழி தோன்றியது. அஃது ஆற்றாது சோமேசுவர மன்னர் துங்க பத்திரை ஆற்றில் மூழ்கி உயிர் துறந்தார். அது பற்றி சளுகியர் தலைநகர் கலியாணபுர நகரத்தாரிருவர் உரையாடுகின்றனர்.]*

**ஒருவர் :** மானமழிந்தபின் வாழாமை முன் இனிதே. ஆஹா! சோமேசுவர பூபதி எவ்வளவு தன்மான முடையவர்!

**மற்றவர் :** ஏதோ! பொல்லாக்காலம். இராஷ்டகூடர்களிட மிருந்து அரசை மீட்ட காலத்து ஆகூழ் இருந்தது; இப்பொழுது அங்காலமில்லை போலும்!

**முதல்வர் :** அவருந்தான் என் செய்வார்? அவரால் இயன்றளவு படைதிரட்டினர். போராயத்தங்களை ஆற்றலுடன் இயற்றினர். ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு என்று உயிரையும் மதியாது எதிர்த்துப் போராடினர்.

**மற்றவர் :** இடையறாது போர் நிகழ்ந்தால் வீரர்கள் தாம் என் செய்வர்? அவர்களே மனஞ் சலித்து விட்டார்

கள்; உடல் சோர்ந்து விட்டார்கள். மன்னரும் பிணி வாய்ப்பட்டார்.

**முதல்வர் :** இளையவர் விக்கிரமன் கூடவே யிருந்திருந்தால் இப்படி முடிந்திருக்காது. அவருக்கும் எவ்வளவோ வேலைகள். வேங்கியை வென்றார். இராஜாதிராஜனையே கொன்றார். ஏனோ அவர்முன் நின்று படை நடத்தவில்லையோ, தெரியவில்லை?

**மற்றவர்:** சோமேசுவர பூபதி மட்டும் என்ன சளைத்தவரா? ஏதோ வயதாகி விட்டது. பிணி, மூப்பு, சாக்காடு இவை மக்களுக்கு ஏற்படுவது இயல்புதானே. தன் உடலில் உரம் இருந்தவரையில் போர் முனையில் முன் நின்றார். தீராத நோய் தலைக்காட்டியது. படுத்த படுக்கையாய் அவரும்தான் புழுங்கினர்.

**முதல் :** விக்கிரமனும்தான் வந்து பார்த்தாராம். பூபதி பிடிவாதமாகவே இருந்து விட்டாராம். மானமிழந்த பின் உயிர்வாழ மாட்டேன் என்று உறுதியாகக் கூறி விட்டாராம். அவர் உடலில் வன்மையும் படைப் பலமும் மட்டும் இருந்திருந்தால், அவர் காந்தைப் போர்க்களத்திற்குப் போகாதிருந்திருப்பாரா?

**மற்றவர் :** வீரராஜேந்திர சோழர் குறிப்பிட்டபடி அங்கு காத்திருந்தாராம். இவர் உடல்நோய் முற்றி விட்டதால் குறித்த தினத்தில் அங்குப் போக முடியவில்லையாம். அதனல் போரிட அஞ்சிப் பின்னடைந்தவர் என்ற வசை தோன்றி விட்டதாம்.

**முதல் :** ஆம்; பயங்கொள்ளி என்று பெயர் தாங்கியும் உயிர் வாழ மனமிசைவாரோ மானியான மன்னர்? எவர் சொல்லையும் கேளாது துங்கபத்திரையில் மூழ்கி உயிர் துஞ்சினராம்.

> "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
> உயிர்நீப்பர் மானம் வரின்"

என்னும் பொய்யாமொழி பொய்த்துப் போகாவாறு எடுத்துக் காட்டாக விளங்கினர்.

**மற்றவர் :** உயிருள்ளளவும் ஒப்பற்ற அரசராகவே விளங்கினர். உயிரிழந்த பின்னும் ஒப்பற்றவராகவே விளங்குகிருர். என்றென்றும் அவர் சிறப்பு நிலவுவதாக !

**முதல் :** இனி இந் நாட்டின் நிலைதானெப்படியோ? முதல்வன் விஜயாதித்தன் இட்டதே சட்டமாகிவிடும். விக்கிரமனே அவ்வளவாக இந் நாட்டின்மீது நாட்டமுள்ளவனகக் காணப்படவில்லை.

**மற்றவர் :** இத்தனை நாட்கள்தான் விக்கிரமன் இவ்வாறிருந்தார்; இனியும் இருப்பாரா ? அவரும் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளாமல் இருந்துவிடுவாரா ?

**முதல் :** என்னவோ, அவர் வந்து அரசேற்ருல்தான் நம் போன்றவர்கள் இந் நாட்டில் இருக்கலாம். இல்லையெனில்

"கொடுங்கோல் மன்னர் ஆளும் நாட்டில்
கடும்புலி வாழும் காடுநன்றே."

நாம் வேற்றுநாடு செல்ல வேண்டியதுதான்.

**மற்றவர் :** அப்படி யொன்றும் நேராது. விக்கிரமன் வாராது போகார். பொது மக்களுக்கு என்னவோ அவன் பேரில்தான் அவா ? பொதுவாகச் சில கயவர்களைத் தவிர விஜயாதித்தனைக் கண்டால் எவர்க்குமே பிடிப்பதில்லை.

**முதல் :** இனி யெப்படி யெல்லாம் நடைபெறுமோ? எதெற்கெல்லாம் ஆளாவோமோ ! சரி வாரும் செல்வோம்.

# அங்கம் 5

## களம் 1

# முடிசூட்டு விழா

இடம் : கங்கை கொண்ட சோழபுரம்

காலம் : பகல்

நடிகர் : நகரத்தார், விக்கிரமன்.

[மாறு வேடத்தில் விக்கிரமன் சோழர் தலைநகரை யடைகிறான். அப்பொழுது சோழப் பேரரசர் இராஜேந்திரன் பிணிவாய்ப்பட்டு மரண மடைந்திருந்தார். அவரது மறைவினால் தலைநகர் பொலிவிழந்திருந்தது. இராஜேந்திரனுக்குப் பின் அவரது இளவலாகிய வீரராஜேந்திரன் அரசனாக முடிசூட்டப் பெற்றான். ஊரார் வாய்மொழி யாக விக்கிரமன் யாவும் அறிகிறான்.]

**விக்கிரமன் :** ஐயா, ஏனையா இன்று இத்தலைநகர் தன்னொளி ஒழிந்து காணப்படுகிறது? கடைகள் எல்லாம் காப் பிடப் பெற்றிருக்கின்றனவே?

**மற்றவர் :** நீர் யாரையா? இந்த நாட்டு ஆள்தானா, இந் நகரத்து ஆள்தானா? என்னையா ஊரே அல்லோலப் படுகிறது. நீரோ என்னவென்று கேட்கின்றீர்? விந்தை! நமது சக்கரவர்த்தி இராஜேந்திர சோழர் சிவபதம் எய்தியது நீர் அறியீர் போலும்.

**விக் :** அப்படியா? நான் வேற்றூரிலிருந்து இப்பொழுது தான் ஐயா இங்கு வந்தடைந்தேன். இங்கு நடந்த யாதொன்றும் எனக்குத் தெரியாது. அதனால்தான் கேட்டேன். சக்கரவர்த்தி மிகவும் வயதானவரோ?

**மற் :** இது இன்னும் அபத்தக் கேள்வி. நீர் இந்த உலகத்து மனிதரே இல்லை ஐயா? இந்த உலகமே சோழச் சக்கரவர்த்தியை யறியுமே? போர்க்களத்தில் முடிசூடிய எங்கள் இராஜேந்திரனை அறியாதார் யாரே?

**விக் :** அப்படியானால் அவர் சிறந்த வீரரே போலும்.

**மற் :** அவர் வீரத்தை நீரென்னையா கண்டீர்? யானை மேற்றுஞ்சிய எங்கள் மன்னரின் நேரிளவல் அல்லரோ இவர்? போர்க் களத்தில் தானய்யா அவர் முடிசூட்டிக் கொண்டார். முடிசூடிக் கொண்டே போரிட்டார். அன்று தொடங்கி அவர் உயிருள்ளளவும் போர் முனையிலேயே நின்றார். அரசேற்று ஒரு நாளாவது அரண்மனையிலிருந்தாரா? சளுக்கரை மடக்குவதே அவருக்குப் பொழுது போக்கு. இன்னும் நெடுநாள் இருக்க வேண்டியவர். ஏதோ விதிவசத்தால் உயிரிழந்தார்.

**விக் :** ஆமாம் ஐயா? மரணத்தை மாற்றவல்ல அரணே எங்கும் இல்லை. பிறந்தோர் இறப்பதும், இறந்தோர் பிறப்பதும் இயல்பே யன்றோ. இன்னும் இவர் சில்லாண்டுகள் இருப்பாரானல், சளுக்கர் போன சுவடு தெரியாமல் வடநாடு நோக்கி ஓடியேயிருப்பர்.

**மற் :** எங்கள் அரசர் பிணிவாய்ப்பட்டு இந்த நிலையில் உடலை நீத்துப் பரமபதமுற்றார். அவர் இப்பொழுது இறவாதிருந்தால் எமது சோணாடு இன்னும் எவ்வளவு விரிந்தோங்கும் தெரியுமா?

**விக் :** ஏன் ஐயா? இவருக்குப் பின் பட்டமெய்துபவர்கள் அதனைத் தொடரலாமன்றோ! இப்பொழுது யார் அரசேற்க வேண்டும்?

**மற் :** ஏன், இதில் ஐயம் என்ன? வீரராஜேந்திரன்தான் அரசேற்கிறார். இன்றே அவர் முடிபுனைகிறார்.

[முடிசூட்டு விழாவிலிருந்து ஓர் அந்தணர் பல பரிசுகளும் பெற்று, வந்து கொண்டிருக்கிறார்.]

மற் : ஐயா, வாருங்கள்; வாருங்கள். பரிசுகள் எல்லாம் பலம்தானே!

அந்தணர் : ஏதோ நன்றாகத்தான் செய்தார்கள். எனக்கே நூறு பொன் கிடைத்ததே!

மற் : நூறு பொன் கிடைத்ததா? மகுடாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றிருக்கும்!

அந்த : சந்தேகமென்ன? நீர் ஏனையா வராது இருந்து விட்டீர். அடடா வந்திருந்தால் உமக்கும் ஐம்பது பொன்னாவது கிடைத்திருக்குமே. ஆஹா! ஹா! நமது மறைய மாதவர்கள் வேத மந்திர மோத, மூதறி வாளர்கள் வாழ்த்துக் கூற, பாவையர் பாட்டிசைக்க, இசைவாணர்கள் இன்னிசைக்க, புலவர்கள் போற்ற, குடிபடைகள் களித்து எக்காளமிட, வேளாளர்கள் முடியைக் கையிலெடுத்து வீர ராஜேந்திரனுக்கு முடிசூட்டினார்கள். வீர ராஜேந்திரன் தன் பெயர்க் கேற்ப துங்கமாமுடி சூடி, சிறப்புடன் செங்கோல் தாங்கி, நின்ற கண்கவர்க் காட்சியைக் காண, கண் பல வேண்டுமையா!

மற் : நானங்குத் தான் வந்து கொண்டிருந்தேன். வழியில் சிறிது தாமதம் ஏற்பட்டு விட்டது. முடி சூட்டு விழாவைக் காண நான் கொடுத்து வைக்கவில்லை. அவ்வளவுதான். அது போக, இன்று மாலை நடை பெறும் களியாட்டங்களையும் கொண்டாட்டங்களையும் கண்டு மகிழ்வேன். ஐயா, வேற்றூராரே! நீரும் மாலையில் இன்று அரண்மனைக்குச் சென்று களி யாட்டங்களில் கலந்துகொள்ளும்.

விக் : தவறாது கண்டு மகிழ்வேனையா! வந்தனம்.

---

களம் 2

# நந்தினியின் சந்திப்பு

இடம் : கங்கை கொண்ட சோழபுரம்

காலம் : மாலை

நடிகர் : நந்தினி, விக்கிரமன்

[வீரராஜேந்திரர் முடி சூடிய சின்னாட்கள் கழித்து, விக்கிரமன் மாதேவிக்குச் செய்தி யறிவிக்க, மாதேவி நந்தினியை விக்கிரமனிடம் அனுப்புகிருள்.]

**விக்கிரமன் :** நந்தினி, வருக, வருக. எங்கு இளவரசி மறு மொழி விடுக்காது இருந்துவிடுவாளோ என்று மனம் ஒடிந்திருந்தேன். உன்னைக் கண்டதும்தான் எனக்கு உயிர் வந்தது. மாதேவி சுகமே யிருக்கிருளா? உன் உடல் நலம் எப்படி ?

**நந்தினி :** அரசே! வணக்கம். என் உடல் நலத்தைப் பற்றித் தங்களுக்கு என்ன கவலை? கிளி நன்ருய் இருக்கிறது. தங்கள் செய்தி கிடைத்ததிலிருந்து கிளி பறந்து வந்து தங்களைக் காணவேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறது. அரண்மனையில் எவ்வளவோ இடையூறுகள்.

**விக் :** ஆம், மகுடாபிஷேகம் நடந்த புதிதுதானே! உற்ருரும் உறவினரும் மற்ருரும் வந்து போன வண்ணமிருப்பார்கள். நான்கும் நோக்கித்தானே செயலாற்றவேண்டும். வெளியூர்களிலிருந்து வந்தவர் களனைவரும் ஒரு வகையாகப் போய்விட்டார்களா ?

நங் : பெரும்பான்மையோர் போய்விட்டார்கள். ஆனால் கீழைச் சளுக்க இராஜேந்திர குலோத்துங்கன் மட்டும் இன்னும் இங்குத் தானிருக்கிறார்.

விக் : விழாவிற்கு வந்தவர் இன்னும் போகவில்லையா ?

நங் : விழாவிற்காக வந்தவரன்று. அவர் அடிக்கடி இங்கு வந்து தங்கியிருப்பார். முன்பெல்லாம் இங்கு வரவே மாட்டார். இப்பொழுது அடிக்கடி வருகின்றார். அப்பொழுது வந்தவர் இன்னும் போகவில்லை.

விக் : ஆம், அருமொழி நங்கையார் ஆதரவுபெற்ற அவர், இங்கு வந்து போவதில் வியப்பென்ன?

நங் : ஒளியாமற் சொல்கின்றேன், அரசே. அவர் இங்கு வந்து போவது நன்மைக்கென்று தோன்றவில்லை. மாதேவிக்கு அவனைக் கண்டாலே பிடிப்பதில்லை. தாயார் முகத்திற்காகவே அவள் பார்த்துக் கொண்டிருக்கிறாள். இல்லையெனில் அவனை அவள் இங்கு தங்கவே விடமாட்டாள்.

விக் : ஏன், அவ்வளவு வெறுப்பா? அவன் என்ன அவ்வளவு கெட்டவனா ?

நங் : ஒரு விதத்திலா? அவனைக் கண்டால் யாருக்குத்தான் பிடிக்கிறது ?

விக் : அவன் அடிக்கடி இங்கு வருவதன் நோக்கம்தான் என்ன ? ஒருக்கால் மாதேவியை மணந்துகொள்ள முயற்சிக்கிறானோ ?

நங் : அப்படியொன்றுமில்லை. அந்தக் கருத்து அவனுக்கோ, இராணியாருக்கோ, அரசர்க்கோ, மாதேவிக்கோ எவர்க்குமே கிடையாது. சோழ அரச பதவிமேற் சிறிது நாட்டங் கொண்டவன்போல் தோன்றுகிறது.

விக் : இருக்கும், இருக்கும். பெரிய இடத்துப் பேச்சு நமக்கெதற்கு? அதெல்லாம் கிடக்க, மாதேவி என்ன சொல்லியனுப்பினாள். அதைக் கூறுவாய், முதலில்.

நந் : சொல்வதற்கு என்ன இருக்கிறது? நாளை இரவு பத்துநாழிகை யளவில் அரண்மனைப் பூங்காவை யடுத்த கொடிவீட்டில் தங்களைத் தனித்துச் சந்திப் பதாகக் கூறச் சொன்னாள். தவறாது நீங்கள் அங்கு வந்து இருக்க வேண்டும்.

விக் : கரும்பு தின்னக் கூலியா? தவறாது அகத்தியம் எவரும் காணா வகையில் அங்கு வந்து காத்திருப் பேன். தேவியார்தான் தவறாது வரவேண்டும்!

நந் : அவள்தான் காத்துப் பூத்துக் கிடக்கிறாளே! நாளை யிரவு யார் முந்திக் கொள்கிறார்களோ பார்க்க வேண்டும். நான் சென்று வருகிறேன்.

## களம் 3

# பூங்கா

| |
|---|
| **இடம் :** அரண்மனைப் பூங்கா<br>**காலம் :** முன் இரவு<br>**நடிகர் :** மாதவி, விக்கிரமன், குலோத்துங்கன். |

[முன்னுள் குறிப்பிட்டவாறு விக்கிரமன் கொடிவீட்டில் காத்திருக்கிருன்.]

**விக்கிரமன் :** (தனிமொழி) பால் போன்ற நிலவு. செழிப்பான பூங்கா. பகலில் பல வண்ணப் பூக்கள் மலர்கின்றன. ஆனுல் மாமதியின் முன்னே அலரும் மலர்களுக் கெதிர் நிற்க அவைகட்கு அச்சம் போலும். வெட்கித் தலைகுனிந்து பொலிவிழந்து வாடிக் கிடக்கின்றன. நறுமலர்களின் தோற்றம் மதியையே மறைத்துவிடும் போலும். ஆஹா! இனிய தென்றல்; மலர்களின் மாமணத்துடன் வீசி மகிழ்வைக் கொடுக்கிறது. பத்து நாழிகையளவு இன்னுமா ஆகவில்லை? நந்தினி குறிப்பிட்டாற்போல் நான் தான் முந்திக் கொண்டேன்.

[ஒரு மலர்ச் செடியின் மறைவிலிருந்து மாதேவி வெளிப்படுகிருள்.]

**மாதேவி :** முந்திக் கொண்டது நான்தான். எத்தனை நாழிகையாக இங்கு நான் தனித்துக் காத்திருக்கிறேன், தெரியுமா?

**விக் :** அடடா! தேவியார் எனக்கு முன்பே இங்கு வந்துவிட்டார்களா?

**மாதேவி :** இந்த ஆண்களுக்கே இதுதான் இயல்புபோலும். பெண் கொடியைத் தவிக்கவிட்டு எங்காகிலும்

சென்று விடுவது? அண்மையில் அரண்மனைக்கு வருவதாகக் கூறிச் சென்ற ஆண்மகன் எப்பொழுது வருவதோ ?

**விக் :** இடைக் காலத்தில் எவ்வளவோ தொல்லைகள் !

**மாதேவி :** நிரம்பத் தொல்லைதான். வேறு எந்தப் பெண் எங்கு சிக்கிக் கொண்டாளோ! அவளை விடுவிக்க எங்கெல்லாம் சென்றிருந்தீர்களோ !

**விக் :** நன்கு கூறினை. பாவையர்களை விடுவிப்பதுதான் என் பணி என்று நீயே புனைந்துகொண்டனை போலும். நானிதுவரையில் ஒரேயொரு மங்கையைத்தான் விடுவித்துக் காப்பாற்றி யிருக்கிறேன். வேறு எவரையும் விடுவிக்க முயன்றதில்லை.

**மாதேவி :** அப்படிக் காப்பாற்றிய பேதையை என்ன செய்வதாகத் தங்கள் கருத்தோ, தெரியவில்லை.

**விக் :** அப் பேதை மனமிசைந்தால் என்னையே ஆயுள்வரை காப்பாற்ற முன்வரலாமே !

**மாதேவி :** அதனுற்ருன் ஓராண்டு கழிந்தும் இங்கு எட்டிக் கூட பார்க்கவில்லையோ ! அம்மம்மா, என்ன அன்பு !

**விக் :** அன்பே ! அப்படி நினையாதே ! என்னை விடுவிக்க நீ முன் வந்திருந்தாயானல் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். நான் இரு முறை உன்னை விடுவித்தும், என்னை ஒரு முறைகூட விடுவிக்க முன்வராததிலிருந்தே உனக்கு என் மீதிருக்கும் அன்பு நன்கு வெளிப்படுகிறதே ?

**மாதேவி :** பிறர் கைப் பாவையாக ஆடும் இப் பெண் பாவை ஏனே ஒரு சிங்கவேறை விடுவிக்க முயல வேண்டும் ?

**விக் :** சிறைப்பட்டிருந்தவன் அப்படியே ஒழிந்துபோயிருந்தாலும் அதுபற்றிக் கவலைப்பட்டிருக்கமாட்டாய் போலிருக்கிறதே !

**மாதேவி :** காஞ்சி யரசர்தான் உதவி யளித்து விடுதலை செய்துவிட்டாரே? நான் ஏன் கவலைப்படவேண்டும் ?

விக் : அப்படியானால் நீ முன்பே செய்தி யறிவாயோ?

மாதேவி : சதிகாரர்களைப்பற்றி நீங்கள் அவ்வப்பொழுது செய்தி யறிந்துகொள்வது போலவே, நானும் தங்களைப்பற்றி அறிந்துகொண்டு வருகிறேன். என்னைச் சுற்றி நீங்கள் சுழல்வதைப்போல என் ஆட்கள் உங்களைச் சூழ்ந்து வருவதை நீங்கள் எப்படி யறிவீர்கள் ?

விக் : அன்பே! அரும்பெறற் பாவாய்! இப்பொழுது தான் அறிகின்றேன் உன் சிறந்த நன்றியை, உன் செழித்த அன்பை. உன்னை மலையிடைப் பிறவா மாமணி என்பேனே! அலையிடைப் பிறவா அமிழ்தே என்பேனே! யாழிடைப் பிறவா இசையே யென்பேனே! எவ்வாறு கூறினும் உனது உயரிய பண்பை உள்ளபடி உரைத்ததாகாதே!

மாதேவி : ஆருயிர் அன்பரே! என்றைக்கு உங்களிடம் என் கணையாழியைக் கழற்றிக் கொடுத்தேனே, அன்றிருந்தே தங்களைப் பற்றிக் கவன்று கொண்டிருப்பதை நீங்கள் அறியீர்களா? ஐயோ! நீங்கள் அறவணஞ்சேரி மடத்தில் எப்படித்தான் அடைபட்டுக் கிடந்தீர்களோ! அந்தோ! கொடுமை!

விக் : அறிவின் செல்வமே! அன்பின் சிகரமே! சோழர் குலக்கொடியே! சித்தன்ன வாசற் செஞ்சித்திரப் பாவையே! நீ பெற்ற அவதியைவிட அதிகமாக வேறு எவரும் பெறமுடியுமோ? மனமொத்த காதலர்களுக்கு மாறுபடாத அனுபவங்கள். இருவரும் ஒரே துறையில் துன்பம் துய்த்தோம்.

மாதேவி : போனது போகட்டும். இத்தனை நாட்கள் ஏன் இங்கே நீங்கள் வந்து சேரவில்லை. அதை முதலிற் கூறுங்கள். எப்படித்தான் மறந்திருந்தீர்களோ? உங்கள் மனம் வைரத்தினும் கடிது.

விக் : ஒருபொழுதுமில்லை. உன்னிடம் மோதிரம் பெற்றுக் கொண்டதிலிருந்து நான் உன்னை விட்டு எங்குமே

அகலவில்லை. என் உடல் மட்டும் பல இடங்களிலும் சுற்றி யலைந்தது.

**மாதேவி :** இருப்பினும் ஓராண்டுக்கும் மேலாகவா இங்கு வாராதிருப்பது ?

**விக் :** உன்னை முற்றிலும் நான் மறந்தேனில்லை. அவ்வப் பொழுது இன்பக் கனவுகள் காண்பேன். ஒரு நாள் என் கனவில் நீ தோன்றினய். எங்கு தெரியுமா ? இதே இடந்தான். நீ சற்றுத் தொலை வில் நின்றுகொண்டு கை காட்டி என்னை அழைத்தாய். நானும் நெருங்கி நெருங்கி வந்து கொண்டே யிருந்தேன். முடிவில் நான் ஒரு மரத்தின் மேல் மோதிக் கொண்டேன் ! மேலே நிமிர்ந்து பார்க்கிறேன் ; பட்டுப் பூச்சியைப் போல் பல வண்ணங்களில் பட்டுச் சீலை யணிந்திருந்த நீ பறந்து கொண்டே கைகாட்டி யழைத்தாய்! என்னல் பறக்கக் கூடவில்லை ! கீழே நின்று விழித்தேன் !

**மாதேவி :** (சிரித்துக்கொண்டே) வெகு நேர்த்தி ! வெகு வெகு நேர்த்தி! என் கனவில் மட்டும் என்னை மஞ்சத் தினின்றும் கீழே தள்ளி விட்டீர்களே ! தரையில் மோதிக் கொண்டேனே ! அது மட்டும்.... ?

**விக் :** நீயும் கனவு காண்பாயா ? நன்று, நன்று. அன்று பறந்து போனயே ! இன்று, இப்பொழுது, இப் பொழுதும் அப்படியே தான் போய் விடுவாயோ ?

**மாதேவி :** நீங்கள் ஒரு முறை தானே அப்படிக் கனவு கண்டீர்கள். நான் கண்ட பல கனவுகளிலும் என்னைத் தவிக்கவிட்டு, என்னை ஏமாற்றியே நீங்கள் சென்று கொண்டிருந்தீர்கள். இன்றும், இன்றும் அப்படியே ஏமாற்றிச் சென்று விடுவீர்களோ ?

**விக் :** கொஞ்சு மொழியாளே ! உன் பேச்சுத் திறனை முன்பே கண்டிருக்கிறேனே ! அன்பே, அதோ பார். களங்கமற்ற வானத்தில் ஒளி வீசும் முழு மதியைப் பார். இதோ இச் செய்குளத்தில் அதன்

மறு தோற்றத்தைப் பார். அதோ, அதோ அதன் பக்கலிலேயே உன் மதிவதனத்தையும் அக் குளத்துத் தண்ணீரில் பார். ஒன்றை யொன்று விழுங்கப் போட்டியிடுவது தெரியவில்லையா ?

**மாதேவி :** போட்டி போடுவது ஒருபுற மிருக்கட்டும். இம் மா மதியின் தண்மையான அமுதக் கதிர்கள் ஒளியை எப்படி அள்ளி வீசுகின்றன, பாருங்கள் !

**விக் :** மாசறு பொன்னே ! மாமதியைச் சுட்டிக் காட்டிய மாதேவியே ! காசறு விரையே ! கரும்பே தேனே ! மருவற்ற உன் மதி முகத்தை யணி செயும் புன் முறுவலாலெழும் இவ் இன்பக் கதிர்களின் எதிரே அவ் வமுதக் கதிர்கள் முன் நிற்க இயலுமோ ?

**மாதேவி :** ஆருயிர் அன்பே ! மதி மதி யென்று பெரிதும் மதித்துக் கூறுகின்றீர்களே ! நான் இந்த இரவிலும் கூடப் பேராழி யுலகனைத்தும் பிறங்க வளர் இருள் நீங்க ஓராழி தனை நடத்தும் ஒண்சுடரைப் பரப்பும் செஞ் ஞாயிறு காண்கின்றேனே! என்னெதிரிலேயே அஞ் ஞாயிறு ஒளிப் பிழம்பாகத் திகழ்கிறதே !

**விக் :** நறுமலர்க் கோதாய் ! முழு மதியின் இன்பக் கதிர்கள் இரவு மட்டுந்தான் நிலவும். அதன்பின் அது எங்கோ மறைந்து விடும். அது போலன்றி ஒளிவு மறைவு இன்றி எல்லையற்ற இன்பத்தை நாம் நுகரும் நாள் எந் நாளோ ?

**மாதேவி :** கருத்தொருமித்த கணவரே ! அஃதண்மை யிலேயே திகழ்வதாக. இவ் இன்ப இரவில் இப் பூங்காவைச் சுற்றி வந்து மகிழ்வோமே !

**விக் :** அன்பே ! அங்ஙனமே செய்வோம் !

[எதிர்பாரா வகையாக ஒரு மறைவிடத் தினின்றும் குலோத்துங்கன் உறுமிக்கொண்டே வெளிப்படுகிறான்.]

**குலோத்துங்கன் :** சோழர் செழுங்குலச் சோழ மாதேவியா இங்குத் தனித்திருப்பது ? வெகு நன்று ! வெகு நன்று ! அருகிருக்கும் ஆடவர் யாவரோ ?

**மாதேவி :** அவர் யாவராயின் உனக்கென்ன? உனக்கிங்கு என்ன அலுவல்?

**குலோ :** இதைக் கண்டு பிடிப்பது தான் என் அலுவல்! எத்தனை நாட்களாக இந்தக் களவியல் நடந்து வருகின்றதோ?

**மாதேவி :** நெடுநாட்களாகத்தான். இதில் உனக்கு எள் ளளவும் தொடர்பு கிடையாது. நீயேன் இதில் தலை யிடுகிறாய்? அப்பாற் செல்லலாம்.

**குலோ :** சிறிதளவாவது தொடர்பு இருப்பதனாற்றான் தலை யிடுகிறேன். சோழர் குலத்திற்கே வசைமொழி ஏற் படுத்திவிட்டாயே? அரசமகளிர் இக் கூடா வொழுக்கத்தை மேற்கொண்டிருப்பது தகாது என்று எச்சரிக்கவே வந்தேன்.

**மாதேவி :** வீணில் அவமானப் படாதே! சென்று விடுவது தான் உனக்கு நலம் பயப்பதாகும்.

**குலோ :** என் நலத்தில் நாட்டங் கொண்டவனல்ல நான். எய்தவனிருக்க அம்பை நோவதால் பயன் என்னே? அடா! கயவனே, இந்த வேளையற்ற வேளையில் அரண் மனைப் பூங்காவில் நுழைந்த கள்வன் யாரடா நீ?

**விக் :** நா காக்க. நான் யாவனாயிருந்தால் என்?

**குலோ :** என்னையே எதிர்த்துரையாட அவ்வளவு வல்ல மையா உனக்கு?

**விக் :** வல்லமையைப் பார்த்துக் கொள்வோமா?

[இருவரும் உடைவாட்களை உருவி வாட் போர் புரிகின்றனர். விக்கிரமன் வீச்சின் முன் குலோத்துங்கன் நிற்க முடியவில்லை. குலோத் துங்கன் வாளும் முறிந்து கீழே வீழ்ந்தது.]

**விக் :** அடே! வல்லமையை இப்பொழுதாவது உணர்ந்து கொள்வாய். உயிர் பிழைத் தோடிப் போ. இனி யொரு முறை குறுக்கிட்டால், தவறாது அனுப்புவேன் எமனுக்கு.

[தலையைத் தொங்கவிட்டுக் கொண்டே குலோத்துங்கன் சென்று மறைகிறான்.]

**மாதேவி:** அன்பே! இனி நீங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

**விக்:** பாவாய்! நீ கவலை கொள்ள வேண்டா. இவனுடன் பகைமை கொள்ள இஃதொரு வாய்ப்பு. சென்று வருகின்றேன். செய்தி யிருப்பின் நந்தினியை வந்து போகச் சொல்.

**மாதேவி:** அன்பே! தங்களைப் பிரிந்து செல்ல வேண்டி யிருக்கிறதே?

**விக்:** கண் கலங்காதே, கண்ணே! விரைவில் மணமுடித்து மகிழ்வோம்.

களம் 4

# தங்கையும் தமையனும்

இடம் : அரண்மனை

காலம் : பகல்

நடிகர் : அதிராஜேந்திரன், மாதேவி.

[சோழப் பேரரசர் போர் முனைக்குச் சென்றிருக்கிறார். தலைநகரில் இளவரசர் அதிராஜேந்திரன் இருந்து வருகிறார். முன்னாளிரவு நடைபெற்ற நிகழ்ச்சி பற்றி மாதேவி தன் தமையனிடம் கூறுகிறாள்.]

மாதேவி : அண்ணா! இனி என்னால் பொறுக்க இயலாது. இதற்கு இப்பொழுதே ஏதாகிலும் வழிகாண வேண்டும்.

அதிராஜேந்திரன் : தங்காய்! எதுபற்றிக் கூறுகின்றனை? உனக்கேன் இன்று இவ்வளவு சீற்றம்?

மாதேவி : கீழை நாட்டுக் கோமான் எல்லைமீறி அதிகாரஞ் செலுத்துகிறான். நமதரண்மனையிலேயே தங்கியிருந்து கொண்டு நம்மையே கெடுக்க எண்ணுகிறான். அவன் இந் நகர் விட்டகன்றால்தான், நம் குலத்திற்கு நலம் பயக்கும்.

அதி : கோதாய்! நீ ஏன் அவன்மேல் இவ்வளவு சீற்றங் கொண்டுள்ளாய்?

மாதேவி : என்னைப் பொறுத்தமட்டில் நான் எள்ளளவும் கவலைப்படவில்லை. அவன் நமது நாட்டில் நன்மை குறித்துத் தங்கி யிருக்கவில்லை. அவன் பல சதிகாரர்களைத் தன்வசம் சேர்த்துக் கொண்டுள்ளான்.

அதி : என்ன ? சதிகாரர்களா ?

மாதேவி : ஆம் அண்ணா! என்னை இருமுறை மடக்கிய அதே சதிகாரர்கள்தாம் இப்பொழுது இவன் வசப் பட்டிருக்கிறார்கள். இன்னும் சூழ்ந்து என்னவெல்லாம் செய்வார்களோ ?

அதி : அப்படியாயின் நாம் விழிப்பாகவே இருக்கவேண்டும். தந்தையாரும் போர் முனைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர் இங்கில்லாதபோது இவன் நமக்கு ஏதும் இன்னலிழைக்க முற்படாமலிரான். எதற்கும் நாம் அன்னையிடம் கூறிவிடுவோம். இனி வாளா இருக்கலாகாது.

மாதேவி : வாருங்கள், இப்பொழுதே செல்வோம் அன்னையாரிடம்.

அதி : மாதேவி, அஃதிருக்கட்டும். சற்று முன்பு அவனும் என்னிடம் வந்து ஏதோ கூறிச் சென்றான். நேற்றிரவு யாரோ ஓர் ஆடவனுடன் உன்னைப் பூங்காவில் பார்த்தானாமே! அஃதென்னை ?

மாதேவி : அண்ணா! அவர் யாரோ ஒருவர் அன்று. எனக்காக நான் திட்டமிட்டிருக்கும் என் கணவரேயன்றி வேறெவரும் அல்ல.

அதி : என்ன ? நீயாகத் தேர்ந்தெடுத்துக்கொண்ட கணவரா ?

மாதேவி : ஆம் அண்ணா! உண்மையைக் கூறுவதில் ஒளிவு மறைவு என் ? அவரே நான் வரித்துள்ள என் கணவர். அவரும் தக்கவர்தான். நம்மைப் போலவே அரச குலத்திற் பிறந்தவர். அவருக்கெனவும் தனியரசு ஒன்று இருக்கிறது. அவர் சிறந்த வீரர். குலோத்துங்கன் அவரை யெதிர்த்தபோது அவனை வெற்றிகொண்டு விரட்டிவிட்ட வீரர். என்னை இருமுறை தன் வீரத்தாலும் தோள்வலியாலும் காப்பாற்றியவர். அவருடன் என்னை அவன் பார்த்தது எவ்விதத்தும் கூடாவொழுக்கம் ஆகாது.

**அதி :** அஃதங்ஙனமாயின் நேரிய முறையில் அவர் மணம் பேச வரலாமே? ஏன் இவ்விதக் களவிலொழுக்கம்?

**மாதேவி :** இன்னும் சின்னாட்களில் அங்ஙனமே வருவார். இஃதென் தனிப்பட்ட உரிமை? என் கணவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டியது நானன்றிப் பிறரல்ல. சோழர் உதிரம்தான் என் உடலிலும் பாய்ந்தோடுகிறது. முறை தவறிய செய்கை செய்ய அஃதொருபோதும் இடங்கொடாது. நேரிய முறையி லேயே நான் நிற்பேன். அதுமட்டும் உறுதியெனத் திட்டமாய் நம்புங்கள், அண்ணா!

**அதி :** இதுபற்றியும் அன்னையாரிடம் கலந்துரையாடு வோம். தக்கவராக இருந்தால் தடையென்ன இருக் கிறது? அதற்கு நாம் ஏன் மாறுபடப் போகிறோம்? தந்தையாரும் வந்த பிறகு அதனை முடிவு செய்து கொள்வோம். யாவும் நன்றாக.

களம் 5

# சோழர்மேற் சூழ்வு

இடம் : குலோத்துங்கன் அரண்மனை

காலம் : பகல்

நடிகர் : குலோத்துங்கன், கங்கா பெருமானடிகள், செவிட்டுச் சோதிடர்.

குலோத்துங்கன் : அடிகளாரே! இந்தக் குலோத்துங்கனுக்கு எதிர்த்துரையாடியவர்கள் எவருமே யிலர். உறவின் முறையாய் இருந்தால் தானென்ன? அவ்வளவு இகழ்ச்சியாக ஒரு பெண்பால் என்னைப் பார்த்துப் பேசுவதா?

கங்கா : என்ன அரசே! யாது நேர்ந்தது? தாங்கள் இப்படிப் பேசக் காரணம் யாது? சோழர் அரண் மனையில் ஏதும் தீது நிகழ்ந்ததோ?

குலோ : வேறு என்ன ஐயா வேண்டும் எனக்கு? 'அரண் மனையில் இருக்கக்கூடாது, போ வெளியே' என்று வெளிப்படையாகத்தான் கூறவில்லை. மற்ற மரியா தைகள் யாவும் முறைப்படி நடந்தேறி விட்டன.

கங்கா : தங்களை யெதிர்த்துரையாட வல்லவர்கள் யாரங்கி ருக்கிறார்கள்?

குலோ : அந்த மமதைகொண்ட மாதேவிதான் என்னைப் பெரிதும் அவமதித்தாள்.

கங்கா : அரசே! இதென்ன? கையில் என்ன கட்டு? எங்கே காயம்?

**குலோ:** அதை வேறு கிளப்பாதேயும் ஐயா. அவனை ஒழிக்காது விடேன். அந்த வெறியன் விக்கிரமனை யெதிர்த்து வாட்போரிட்டேன். அப்பொழுது சிறிது காயம் பட்டது கையில். வேறு ஒன்றுமில்லை. அவனை என்ன செய்யப் போகிறேன், நீங்களே பாருங்களேன்.

**கங்கா:** அவனோடு போரிட நேர்ந்ததா? வாட்போரிலும் மற்போரிலும் அவன் இணையற்றவன். என்னையும் ஒருமுறை அவன் மடக்கி விட்டானல்லவா? தாங்களும் அதற்காளானீர்களா? அவனங்கு எதற்கு வந்தானோ?

**குலோ:** நீரென்னையா! எரிகிற தீயில் எண்ணெய் வார்க்கிறீர்கள். அந்தக் கள்வனுக்கும் மாதேவிக்கும் கள்ள நட்புண்டு போலும். அவர்கள் பூங்காவில் தனித்திருக்கும்போது நான் எதிர்ப்பட்டுக் கண்டித்தேன். அவன் என்னை எதிர்த்தான். நல்ல சமயம் பார்த்து என் கைவாள் முறிந்து விட்டது; அவனிடம் தலை குனிய நேர்ந்தது. இல்லையானால்....?

**கங்கா:** சரி, கடந்தது கழியட்டும். இனி யென்ன செய்யலாம்? அதைப் பேசுவோம்.

**குலோ:** செய்வதா? இனியும் வாளாயிருப்பேனோ? இன்றிருந்தே ஆவன மேற்கொள்வேன். அந்தக் கள்ளியைப் பிடித்துச் சிறையிடாமல் இரேன். அவளுக்கு உடந்தையாக இருக்கும் அவள் அண்ணன் அதிராஜேந்திரனையும் பழி வாங்காது விடேன். முதலில் இவர்கள் வேலை தீர்ந்த பிறகு, படையெடுப்பு வேங்கியின்மீது. ஒழிந்தான் விக்கிரமன்.

**கங்கா:** ஆம், அங்ஙனமே செய்வோம். வீரராஜேந்திரரும் இப்பொழுது நெடுந்தொலைவிலிருக்கிறார். நாம் இப்போதே அரண்மனையை வளைத்து, அவர்களைச் சிறையிட்டு விட்டால் பெரும்பகுதி முடிந்தது; அரியணை யேறி விடலாம். அதன்பின் வீரராஜேந்தி

ரர் வரட்டுமே? ஆற்றலுண்டானல் அரியணையை யடையட்டும்.

**சூலோ :** அப்படித்தான் செயலாற்றப் போகின்றேன். ஓய் சோதிடரே! (உரத்த குரலில்) எனக்குப் பேரரசு கிட்ட வேண்டும். என்றைக்கு வாகை சூடலாம்? சொல்லும் விரைவில்.

**சோதிடர் :** படை யெடுக்கவா? தாக்கவா? இன்றைய பத்தாம் நாள் தகுதியான நல்ல நாளாக இருக்கிறது. அந்த நன்னுளில் படை யெடுத்தால் பூமண்டலம் மட்டுமல்ல, சூரியசந்திர மண்டலம் எல்லாவற்றையுமே வெற்றி கொள்ளலாம். அன்றைக்கு இரவு பதினைந்து நாழிகை யளவில் போர் தொடங்கலாம். வெற்றி கிட்டும்.

**சூலோ:** பெருமானடிகளே! நான் என் படைவீரர்களுக்குப் பணித்து விடுகின்றேன். நீங்களும் ஒரு படைத் தலைவ ராக மாற்றுருவில் எனக்கு மெய்காப்பாளராக வாருங்கள். சோதிடர் குறித்த நாளன்று நாம் திடீ ரென்று சோழ அரண்மனையைத் தாக்கி, 'அவர் களைச் சிறைப்படுத்தி அரசேற்க முடிவு செய்து விட்டேன்.

**கங்கா :** நானெப்பொழுதுமே ஆயத்தமாக இருக்கிறேன். நானும் என் பரிவாரங்களை ஏவிவிடுகிறேன். அவர் களும் உதவியாக இருப்பார்கள்.

**சூலோ :** அங்ஙனமே செய்யுங்கள். படை வீரர்களுக்கு நான் இன்றே பணித்து விடுகின்றேன். இடைக் காலத்தில் சிறந்த பயிற்சி யளிக்கட்டும். இது விவரங்கள் வேறெவர்க்கும் தெரிவிக்க வேண்டா. வாரும் செல்வோம் படைத் தளத்திற்கு.

---

களம் 6

# இருவர் அறிந்தால் அம்பலம்

இடம் : கங்கை கொண்ட சோழபுரம்

காலம் : மாலை

நடிகர் : பில்ஹணர், விக்கிரமன்.

**பில்ஹணர் :** அரசே! தாங்களும் நான் செய்தி யனுப்பிய படி வந்து சேர்ந்து விட்டீர்களே ?

**விக்கிரமன் :** (உரத்த குரலில்) ஐயா, சோதிடரே! இன்று எனக்கு இரவு உண்டி எங்குக் கிடைக்கும் ? தயவு செய்து கூற முடியுமோ ?

**பில் :** நான் அங்குதான் செவிட்டுச் சோதிடர்; உங்களுக் கெதிரில் கூடவா ? இந்தச் செவிட்டு வேடம் போடப் போக எவ்வளவு நன்மை கிட்டியிருக்கிறது தெரியுமா ?

**விக் :** தகுதியான ஆளையா நீர்! குலோத்துங்கன் எவ்வா றிருக்கிறான் ?

**பில் :** நீங்கள்தான் அவனுக்கு அடையாளம் அமைத்து விட்டீர்களே! கையில் பலமான கட்டு.

**விக் :** காயமும் பலமான காயம்தான். அவனை உயிர் தப்பி ஓடச் செய்தேன். முகஞ் சுளித்து அவன் போனதைப் பார்க்க வேண்டுமே! அங்கு வந்து சேர்ந்து விட்டானா ?

**பில் :** நன்றாக வந்து விட்டான். அந்த நிகழ்ச்சி யிலிருந்து உங்கள் பேரிலும் மாதேவி பேரிலும் கறுவி நிற்கி

றான். சோழர் அரண்மனைக்கு அபாயம் நேரவிருக்கிறது. அடுத்து வரும் வெள்ளியன்று இரவு அவர்கள் சோழர் அரண்மனையைத் தாக்க முடிவு செய்து விட்டார்கள். நாள் பார்த்துக் கொடுத்ததும் இந்தச் செவிட்டுச் சோதிடர்தான். தங்களிடம் தெரிவிப்பதும் இக் கவிஞன் பில்ஹணன்தான். இப்பொழுது சொல்லுங்கள்! செவிட்டு வேடம் தாங்காவிட்டால் இவ்வளவும் அறிய மாட்டுமா ?

விக் : முற்றி விட்டது. வரும் வெள்ளிக்கிழமை யன்ரு? அப்படியாளுல் யானும் இப்பொழுதே வேங்கி நாடு சென்று படைவீரர்களை மறைமுகமாய்த் தலைநகரில் சேர்த்து விடுகிறேன். தாக்கட்டும், பார்ப்போம்.

பில் : தாக்குவதுடன் மட்டுமல்ல. மாதேவியைச் சிறைப் பிடிக்க வேண்டுமாம். அவள் அண்ணனைப் பழி வாங்க வேண்டுமாம். அதன்பின் அரியணை ஏற வேண்டுமாம். கவனமிருக்கட்டும்.

விக் : அவ்வளவுக்கு ஆகி விட்டதா? பார்ப்போம், யார் சிறைப்படுகிறார்கள் என்று. நண்பரே, மிக்க வந்தனம். மீண்டும் அங்குச் சென்று சோதிடராகவே இருந்து வாருங்கள். மேலும் செய்தியறியலாம். வெள்ளியன்று நீங்களும் அங்கு வந்து சேருங்கள்.

பில் : அங்ஙனமே செய்கின்றேன்.

விக் : நானும் இப்பொழுதே வேங்கி செல்கின்றேன். மாதேவி இவற்றை யறியாமலிருப்பதே நலம். ஒருவர் அறிந்தால் இரகசியம்; இருவர் அறிந்தால் அம்பலம். சரி, நாம் போய் வருவோம்.

---

## களம் 7

# நள்ளிரவு நிகழ்ச்சி

| | |
|---|---|
| இடம் : | கங்கை கொண்ட சோழபுரம் |
| காலம் : | நள்ளிரவு |
| நடிகர் : | குலோத்துங்கன், கங்காபெருமானடிகள், படை வீரர்கள், மாதேவி, அதிராஜேந்திரன், விக்கிரமன். |

[குலோத்துங்கன் முன் முடிவு செய்து கொண்டபடி, மறைவாகப் படைவீரர் பலரையும் தலைநகரில் கூட்டி விட்டான். வாளேந்தியும் வேலேந்தியும் படைவீரர்கள் நள்ளிரவில் அரண்மனையை யண்மி நின்றனர். குலோத்துங்கன் முன் செல்ல, மெய்காவலாகச் சென்ற கங்கா பெருமானடிகள் வாளேந்தி உடன் செல்கிறார்.]

**குலோத்துங்கன் :** அடிகளே! நம் திட்டம் நிறைவேறும் நற்காலம் வந்துற்றது. சோழர் படைவீரர்கள் நன்றாய்க் கண்ணயர்ந்து உறங்குகின்றனர். ஆயுதசாலையையும் நாம் கைப்பற்றி விட்டோம். எதிர்த்து வருகிறவர்கள் வரட்டும்.

**கங்கா :** தகுதியான முன்னேற்பாடு. ஏன் நாம் இன்னும் தாமதம் செய்யவேண்டும்? செல்வோம், உள்ளே!

[படைவீரர்கள் புடைசூழ குலோத்துங்கனும் அடிகளும் அரண்மனையினுட் செல்லுகின்றனர்.]

**குலோ :** வீரர்களே! அதோ! அயர்ந்து உறங்குகிறான் பாருங்கள், சோம்பேறி. அவனை அப்படியே கட்டி இங்கிழுத்து வாருங்கள்.

[வீரர்கள் அதிராஜேந்திரனைக் கட்டி யிழுத்து வருகிறார்கள்.]

குலோ : இராஜாதி ராஜரே! அரசாதி அரசரே! வீராதி வீரரே! குலோத்துங்கன் திறமை இது தான்; நேரில் கண்டு கொள்ளுங்கள். என்னை அரண்மனையை விட்டு விரட்டியதன் பலன் இதுதான்; உங்களை அரண் மனையை விட்டு விரட்டப் போகிறேன்!

கங்கா : டேய் வீரர்களே! முன்னேறுங்கள், அந்தப் புரத்தை நோக்கி!

குலோ : இவனை இப்படியே இத் தூணில் கட்டுங்கள். நீங்கள் இங்கேயே காவலாக இருங்கள். இதோ அந்தச் சிறுக்கியையும் சிறுமைப் படுத்துகிறேன் பார். டேய்! அதிராஜேந்திரா! உன் அகந்தை உன்னை அன்று அவ்வாறு அன்னையிடம் தூண்டச் செய்தது. இதோ உன் கண்களாலேயே காணப் போகின்றாய் அலங்கோலத்தை. இதோ இன்னும் கண்ணிமைக்கும் நேரத்தில் வருகின்றாள் பார் உன் அருமந்தத் தங்கை.

[அதிராஜேந்திரன் திமிறுகிறான். இருப் பினும் விடுவித்துக்கொள்ள இயலவில்லை; கட் டுண்டு நிற்கிறான். குலோத்துங்கன் அந்தப் புரம் நோக்கிச் செல்கிறான்.

அரண்மனைக்கு வெளியே ஆரவாரம். அகந்தையால் ஆடிப்பாடி இறுமாந்து நின்ற குலோத்துங்கனது வீரர்கள் திக்கு திசை தெரி யாமல் ஓடலானார்கள். சளுக்கிய விக்கிரமன் தன் படைகளுடன் எதிர்ப்பட்டுத் தாக்கவே, கீழைச் சளுக்க வீரர்கள் ஓட்டம் பிடித்தனர். வெற்றி பெற்ற விக்கிரமன் அரண்மனையுள் படைவீரர்களுடன் விரைந்து சென்று கொண் டிருக்கிறான்.]

குலோ : மாதேவி! மூதேவி! எங்கே, இப்பொழுது சொல்லடி. எனக்கு இங்கே என்ன அலுவல் என்று

கேளடி. மமதை கொண்ட மாதேவி! எங்கே உன் ஆசைக் கணவன்! கண்ணில் கருமணிபோல் உன்னைக் காப்பவன்? இப்பொழுது வருகிறது தானே அவன் உன் உதவிக்கு? உன்னை என்ன அலங்கோலப்படுத்துகிறேன், பார்ப்பாய்.

[இவ்வாறு கூறிக்கொண்டே சிறைப்பட்ட மாதேவியை நோக்கி முன்செல்கிறான் குலோத்துங்கன். பெருமானடிகள் ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்து தன்னை மறந்து நிற்கிறார். பின்புறம் ஏதோ கலவரம் கேட்டுத் திரும்பினார். வாளேந்திய கையுடன் விக்கிரமன் படைவீரர்களுடன் வந்துகொண்டிருந்தான்.]

**விக் :** அடா! இங்குமா நீ வந்துவிட்டாய்? பெறுவாய் பேரின்பம்! (வாளையோங்கி வீசி கங்காபெருமானடிகளை வீழ்த்த, உயிரற்ற அவரது சடலம் பேரொலியுடன் கீழே வீழ்ந்தது.) ஒழிந்தான் ஒரு பாதகன். வீராதி வீரசிங்கமே! ஒரு பெண்ணைப் பிடித்துத் துன்புறுத்த வீரனாகிய உனக்கு வெட்கமாக இல்லை? அதிலும் உறங்கிக்கொண்டிருக்கும் பெண்பிள்ளையைச் சிறைப்படுத்திய உன் தீரமே தீரம். முன்தான் தப்பியோடினாய். நில் இப்பொழுது?

**குலோ :** டேய்! என் அரண்மனையில் நுழைபவன் நீ யாரடா?

**விக் :** என் அரண்மனையில்! எவ்வளவு உரிமையடா! வீரமுண்டானால் நில்; அல்லது நின் படைவீரர்கள் ஓடியதுபோல் ஓடி விடு; அல்லது கங்காபெருமானடிகளுக்கு உதவியாக நீயும் போய்ச் சேர். அரண்மனையும் அரியணையும் அவ்வளவு எளிதில் உனதாகி விட்டதா!

**குலோ :** இதோ நீ வாங்கிக்கொள்!

[வாளை யோங்கி வருகிறான். விக்கிரமனும் குலோத்துங்கனும் வெகு ஆத்திரத்துடன் போராடுகின்றனர். குலோத்துங்கன் கூட்டு

விரல் துண்டித்து விழுகிறது. குலோத்துங்கனும் பையப் பையப் போக்குக் காட்டிக்கொண்டே தனக்குத் தெரிந்த ஒரு மறைவிடத்தின் வழியே ஓடி விடுகிறான்.

விக்கிரமன் ஓடோடியும் சென்று, மாதேவியைப் பிணித்திருந்த கயிறுகளை அறுத்து விடுவிக்கிறான். சோர்வின் மிகுதியாலும், ஏற்பட்ட அதிர்ச்சியின் மிகுதியாலும், அன்பின் மேலீட்டாலும் மாதேவி அவன்மீது சாய்கிறாள்.]

**விக் :** மாதேவி! சற்று ஓய்ந்து படுத்திரு. இன்னும் அதிர்ச்சி அடங்கவில்லை. இதோ அண்ணனைக் கவனித்து வந்து விடுகிறேன்.

[விரைந்து சென்று அதிராஜேந்திரனை விடுவிக்கிறான். இருவரும் கட்டியணைத்துக் கொள்கிறார்கள்.]

**அதிராஜேந்திரன் :** வீரரே! தக்க சமயத்தில் உதவினீர்கள். மாதேவி எங்கிருக்கிறாள்? அவளுக்கு ஒன்றும் நேரவில்லையே?

**விக் :** சுகமே இருக்கிறாள். வாருங்கள் போவோம்.

**மாதேவி :** அன்பே! இம்முறை எனக்கு மட்டுமல்லாது எங்கள் குலத்திற்கே உயிர் கொடுத்தீர்கள்.

**அதி :** அன்பரே! எத்தனை முறை கூறினாலும் போதாது. தங்கள் உதவியை இச் சோழர் குலம் என்றென்றும் மறவாது. எங்கள் உறவினனாகிய குலோத்துங்கன் எங்களைத் தாக்கிச் சிறைப்படுத்தியதும், எங்கள் பகைஞராகிய நீங்கள் அவனை யெதிர்த்து விரட்டி எங்களை விடுவித்ததும் எங்கள் உயிருள்ளளவும் மறவோம். எங்கள் வழித் தோன்றல்களும் உங்களைப் போற்றிப் புகழ்வார்கள்.

**விக் :** தங்கள் புகழ்ச்சிக்கு நான் முக்காலும் அருகன் அல்லன். என் கடமையைச் செய்தேனே யொழிய வேறில்லை. என் ஆருயிர்ப் பாவையைத் துன்புறுத்த

நான் பார்த்திருப்பேனே ! என் கடமை. வீரர்களே! இதோ, இங்கு விழுந்து கிடக்கும் இந்தப் பாதகனின் உடலத்தைக் காக்கை கழுகுகள் விருந்துண்ணுமாறு காட்டில் கொண்டுபோய்ப் போடுங்கள். ஒழிந்தான் ஒரு பாதகன். மற்றவர்களுக்கு இஃதொரு படிப் பினையாகட்டும்.

அதி : (கட்டியணைத்துக் கொண்டு) வீரரே! மாதேவி முன் கூறியபொழுதெல்லாம் தக்க தருணத்தில் ஒருவன் எப்படி வந்து உதவக்கூடும் என்று நான் நினைத்த துண்டு. இன்றுதான் அதனைக் கண்கூடாகக் கண்டேன். நன்றி, நன்றி.

மாதேவி : அன்பே! களைத்து நிற்கின்றீர்களே! அமருங் கள். நானும் அமர்கிறேன். நந்தினி விசிறியை எடுத்து வீசுவாய்.

அதி : சற்று இளைப்பாறி ஓய்வெடுத்து நீங்கள் இங்கே இருங்கள். நான் என் பளிக்கறை செல்கிறேன்.

நந்தினி : அம்மணி, நானும் கண்ணுறங்க வேண்டும். சென்று வருகிறேன். தங்களுக்குத்தான் துணை வந்து விட்டதே?

மாதேவி : போடி போ! மனம் பொருத கள்ளி! போய் வா.

விக் : அன்பே!

மாதேவி : ஆருயிரே!

# அங்கம் 6

## களம் 1

## மணவினை

| | |
|---|---|
| இடம் : | கங்கை கொண்ட சோழபுரம் |
| காலம் : | பகல் |
| நடிகர் : | காஞ்சனன், காளிங்கன், குடந்தையர், ஏனையோர். |

**குடந்தையர் :** யாரப்பா, காஞ்சனனு! ஏதப்பா இவ்வளவு தூரம்? மாதேவியின் மணத்திற்கு வந்திருந்தாயோ? எல்லாம் சிறப்பாக நடந்திருக்கும். பார்க்கக் கொடுத்து வையாத மாபாவி நான், கண்ணிழந்தவன்.

**காஞ்சனன் :** பெரியவரே! என்ன சிறப்பு! என்ன சிறப்பு! நானும் இதுவரையில் எத்தனையோ திருமணங்களைப் பார்த்திருககிறேன். இதுபோல் எங்குமே கண்ட தில்லை ஐயா! நகரெங்கும் ஒரே தோரண மயம்; எங் கெங்கும் பரந்த முத்துப்பந்தர். சோணாட்டின் கண் ணுள்ள வாழையும் தாழையும் தலைநகருக்கே வந்தி றங்கி விட்டன. வாழையும் கமுகும், பழுக்காயும் விழுக்குலையும் நிறுத்திப் பிணைத்துவைத்த பான்மை, இச் செயற்கை எழில் இயற்கையெழிலை அமிழ்த்தி விடுமெனத் தோற்றும். மதிலெங்கும் மணிக்கொடி.

**காளிங்கன் :** அப்பப்பா! காது செவிடுபடும்! வான் முழக்க மென எங்கும் துந்துபி முழக்கம்; முரசு முழக்கம். பல தேயங்களினின்றும் வந்துள்ள படைவீரர் முழக்

கம்; போர்வீரர் அணிவகுத்து கைவீசி கால்வீசி நடக்கும் 'டக் டக்' என்னும் ஒலி, தெருவில் நின்றால் செவிடுபடும்.

**காஞ்சனன் :** அவற்றை யெல்லாம் தாண்டி அரண்மனை புகுந்தால் அவற்றைவிட ஆரவாரம். அந்தணர் அருமறை மந்திரமோதினர்; மந்தணர் பொற்பூமாரி பெய்தனர். அடடா! அந்த விக்கிரமன் யானை மேலிருந்து நகர்வலம் வந்த சிறப்பை நாவால் உரைக்கலாகுமோ? கண்கொண்டு பார்க்க இரு கண்கள்தான் போதுமோ? யானைமேல் சிங்கம் அமர்ந்து வருவதுபோன்று கம்பீரமாக வல்லவோ இருந்தது!

**காளிங்கன் :** பெரியவரே! அச் சிங்கவேறு நகர்வலம் வந்த பின் யானையினின்றும் இறங்கி மதயானையென நடந்து வந்தது வெகு கம்பீரமாக இருந்தது. அம் மல்லுயர் தோளான் தோள்கண்டார் தோளே கண்டார்; அவ் வரசனின் அருந் தடக்கை கண்டார் அதனையே கண்டார். பேதை முதற் பேரிளம்பெண் ஈறாக எழுவகை ஒண்டொடி மாதரும் அவன்மேல் வைத்த வாள்விழி மீட்டும் வாங்க மறந்தனர்போலும். இத்துணைச் சிறப்புடன் அரண்மனை மணவினை மணி மண்டபத்தை யடைந்து பொன்னொளிர் மணத் தவிசில் பொலிவுற வீற்றிருந்தான் அக் கட்டிளைஞன்.

**காஞ்ச :** அந்த மணவினையைக் காணவந்தவர்கள் ஒவ்வொருவரும் தானே மணமகன் என்று தோற்று மாறல்லவோ அணிவன அணிந்து, புனைவன புனைந்து, பூசுவன பூசி, அணிசெய்து வந்தார்கள்! அவர்களெல்லோரையும் ஒருங்கே காணும்போது உலகத்துச் செம்பொன்னெல்லாம், உலகத்து நவமணிகளெல்லாம், உலகத்துப் பட்டாடைகளெல்லாம் ஈங்கு ஒருங்கு திரண்டு விட்டனவோ என்றெண்ணு மாறல்லவோ பொலிந்து விளங்கின. அரண்மனைப் பெண்டிர் அம் மின்னிடையாளைச்

செந்திருவொப்பச் சிங்காரித்து அழைத்துவந்து மணத்தவிசில் அழகுற அமர்த்தினர்.

**காளி :** அப்பொழுது கூட்டத்தில் பார்க்க வேண்டுமே! ஒரே ஆரவாரம்! பரிதியும் மதியும் ஒருங்கமர்ந்தாற் போன்ற அக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டே அங்ஙனம் மகிழ்ந்தனர். பதினெண் பல்லியங்களும் நல்லியல் பொருந்த முழங்கின. யாழும் குழலன்ன இன்குரல் அரம்பையர் பாட்டிசைத்தனர். மறைவலாளர் நான்மறையோதி முத்தீ வளர்த்து முறைப்படி மணவினையை முற்றச் செய்தனர். மங்கையின் கழுத்தில் மங்கல நாணை விக்கிரமன் விருப்பமாய்ச் சேர்த்தனன். சைவர் திருமறையோத, வைணவர் பல்லாண்டிசைக்க, பௌத்தரும் சமணரும் திருமந்திரங்களோத, யாவும் மங்கலமாய் நிகழ்ந்தேறியன.

**காஞ்ச :** அதன்பின் அரண்மனை உண்டி. கேட்க வேண்டுமா? விலாப்புடைக்கச் சாப்பாடு.

**குடந்தையர் :** எல்லாம் சரிதான். அந்த விக்கிரமன் சோழர்களுக்குப் பகைஞன் அன்றோ! அதெப்படி அவன் சோழர் மகளை மணக்க நேர்ந்தது?

**காஞ்ச :** அது பெரிய கதை ஐயா! ஆனல் இந்த மணவினை மட்டும் எவ்வகையானும் தகுதி உடைத்தே. அவன் பகைஞன்தான். ஆனல் மாதேவியின் பாற் கொண்ட காதலால் பகையை மறந்தான். உறவினன் படையெடுத்து எதிர்க்க, இப் பகைஞன்தான் முன் நின்று விடுவித்தானும். அரண்மனையைக் கைப்பற்ற வந்த குலோத்துங்கனை இவன்தான் கையை முறித்து ஓட்டி விட்டானும். சோழரைச் சூழ்ந்திருந்த சதிகாரர்களை விரட்டி விட்டானும். மாதேவியைப் பன்முறை பலவாறன விபத்துககளினின்றும் காப்பாற்றியிருக்கிறனும். சுருங்கக் கூறினல், சோழருக்குப் பக்கத் துணையாக இருந்து வருகிறனும். அதுதான் வீரராஜேந்திரர் போர்க் களத்திலிருந்து வந்ததும் இத் திருமணத்திற்கு இசைவு தந்தாராம்.

**குடந்தை :** பார்வதியும் பரமசிவனும் போல, ரதியும் மதனனும் போல, இவர்கள் கருத்தொருமித்துப் பல்லாண்டு வாழ்வார்களாக!

**காஞ்சனன்**
**காளிங்கன்** } சென்று வருகிறோம், ஐயா?

## களம் 2

# விஜயன் சூழ்ச்சி

இடம் : கலியாணபுரம் அரண்மனை

காலம் : பகல்

நடிகர் : விஜயன், அமைச்சர், பொதுமக்கள்.

[பொறாமை கொண்ட விஜயாதித்தன், விக்கிரமன் அனுப்பிய மண வோலையை மதியாது கிழித்தெறிந்தான். மண வினைக்கும் போகவில்லை. இதையே ஒரு காரணமாகக் கொண்டு விக்கிரமன் மேல் வெளிப் படையாகப் பகை பாராட்டத் தொடங்கினான். பொது மக்கள் பலரை யழைத்துச் சபை கூட்டிக் கூற லுற்றான். துன்மந்திரிகள் பலர் அவன் பக்கம் ஒட்டிப் பேசினர்.]

**விஜயன் :** பொது மக்களே! அன்பர்களே! அமைச்சர் களே! யாவரும் கேண்மின், யாவரும் கேண்மின். அண்மையில் சோணாட்டு இளவரசியை என் இளவல் மணமுடித்தது நீங்கள் யாவரும் நன்கு அறிவீர்கள். அரசகுமாரி யார் எனத் தெரிந்து கொண்டீர்களா? நம்மை இடைவிடாது மடக்கும் பகைஞன் சோழனின் மகள்!

**அமைச்சர் :** பல வாண்டுகளாக நமது நாடு நகர்களையும் ஊர்களையும் கொள்ளை யிட்டுக் கொளுத்தி, விளை நிலங் களைப் பாழ்படுத்தி அழித்து வந்த வீரராஜேந்திர சோழனின் மகளே இந்த மாதேவி.

விஜ : இம் மணவினை குறித்து, அவன் நம்மில் எவரை யேனும் கலந்தாலோசித்தானா ?

அமை : தந்தைக்குப் பின் தமையன் என்பதை நினைவா வது வைத்திருந்தாரா ?

விஜ : இவன் நம்மை ஒரு மொழி கேட்டனனா? இவ்வகந்தை இவன் எம்மட்டில் நம்மை மதித்துள்ளான் என்ப தைப் புலப்படுத்துகிறதன்றோ ! அவன் வஞ்சகன்.

அமை : பொது மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டுமோ ? இத்தனை யாண்டுகள் சோழர்க்கெதிர் நின்று நாம் போராடினோமே ? விஜயாதித்தர் தான் தனி நின்று போராடினரே ! இந்த விக்கிரமன் அது பற்றி எப்பொழுதாவது சிறிதாவது கவலைப்பட்டனரா ? அல்லது நமக்கு ஏதாவது உதவிதான் அளித்தாரா ?

விஜ : தோற்றுவாயிலேயே அவன் என்னுடன் பணி யாற்ற மறுத்து விட்டானே. படையெடுக்கும் சோழரை எதிர்க்க வேண்டும் என்றபோது, வேங்கியை நான் படையெடுக்க வேண்டும் என்றானே, மறந்தா விட்டோம் ?

அமை : அவர் கருத்து இத்தனை நாள் வெளிப்படையாகத் தெரியவில்லை. சோழரை அப்பொழுதிருந்தே அடுத்து வந்திருக்கிறார். இப்பொழுது நாடறிய விளக்கமாகி விட்டது. சளுக்க நாட்டைச் சோழர் வசம் விடுத்து, தான் அவர்கட்குட்பட்ட சிற்றரசாக இருக்க வேண்டியே இச் சூழ்ச்சி புரிந்துள்ளார்.

விஜ : சோழர் வசம் நீங்கள் பட்ட துன்பங்கள் போதாவோ ? இனியும் அதற்காளாக வேண்டுமோ ? சோழர் படையெடுப்பால் நாம் எவ்வளவு அவதி யுற்றோம். கடலன்ன படைகளைக் கொண்டு நம்முடன் அயராது பொருதனர். நம்மிடமிருந்த ஒரு சிறிது போர்ப் படை வீரரும் ஓயாத போரால் மனஞ் சலித்தனர்.

**அமை :** *அதனை நன்குணர்ந்து நாங்கள் நம் படைவீரர்கள் பகைஞர் மீது விழுந்து தாக்கி அழிந்துவிடா வண்ணம் தற்காத்து அவ்வப்போது தக்கவாறு பின்னிடச் செய்தோம். போர்த் தந்திரங்கள் நாமறிய மாட்டோமா? அதனாலன்றோ அச் சோழவரசர் அடுத்தடுத்துத் தாக்கியும்கூட நாம் படையிழக்காது இருந்து வருகிறோம்.*

**விஜ :** விக்கிரமன் கொண்டுள்ள கருத்தும் செயலும் உங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கியிருக்கும். ஆகையால், குடிகளே! வஞ்சகனும், அற்பனும், பொறாமை கொண்டவனும், நாட்டுக்குத் தீங்கு விளைப்போனுமாகிய அவன் உங்கட்கு அரசன் ஆகவேண்டும் என்று விரும்புகிறீர்களா? பார்த்தீர்களா, ஒருவரும் விரும்பவில்லை. அல்லது நானே அரசனாக இருந்து வரவேண்டுமென்று விரும்புகிறீர்களா?

**கூட்டத்தில் பலர் :** *நீங்கள் தான் எங்கள் அரசர்! நீங்களே எங்கள் அரசர்!*

**விஜ :** *பார்த்தீர்களா! நாட்டைத் துண்டாட வேண்டி இப்பொழுது சோழர் பக்கபலம் கொண்டு நம்மிடம் அவன் வரக்கூடும். நாட்டைத் துண்டாட வேண்டுமா? கூறுங்கள், கூறுங்கள்!*

**பலர் :** கூடாது, கூடாது! துண்டாடக் கூடாது. அரசு முழுமையும் விஜயாதித்தருக்கே.

**விஜ :** உங்கள் நோக்கம் போல் நான் நடந்து கொள்கிறேன். நானே அரசனாக இருக்க வேண்டுமா? நாட்டைத் துண்டாட வேண்டுமா? ஒளிவு மறைவு இன்றிக் கூறுங்கள்.

**பலர் :** துண்டாடக் கூடாது! விஜயரே மன்னர். வாழ்க விஜயாதித்த பூபதி! விஜயரே எங்கள் அரசர்!

விக்கிரமா, திரும்பிப் போ! விக்கிர அக்கிரமன் வந்தால், திரும்பிப் போ.

**விஜ** : உங்கள் விருப்பப்படி நானே அரசனாக இருந்து வருவேன்.

**அமை** : சோழர்கள் வீழ்க! விக்கிரமன் வீழ்க! விஜயாதித்த சக்கரவர்த்தி....

**எல்லோரும்** : வாழ்க! வாழ்க !!

களம் 3

# துணை தேடல்

இடம்: வேங்கி யரண்மனை

காலம்: காலை

நடிகர்: விக்கிரமன், பில்ஹணர்.

**விக்கிரமன்:** அரசவைக் கவிஞரே! ஒப்பற்ற மதியமைச்சரே! என்ன ஆழ்ந்த சிந்தனை?

**பில்ஹணர்:** ஒற்றன் அறிவித்தது குறித்துத்தான் மனக் கலக்கம் அடைந்தேன்.

**விக்:** இதற்கு நாம் ஏன் மனங் கலங்கவேண்டும்? சளுக்க அரசை விஜயனே ஏற்றுக்கொள்ளட்டும். எனக்கு வேண்டா. என்வலியால் என்பாற்கொள்ளும் நாடுகளே எனக்குப் போதுமானது.

**பில்:** இதிலிருந்து தங்கள் தன்னடக்கமும், பொறுமையின் மையும், வெகுளாமையும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இருப்பினும் தந்தை வழிவந்த நாட்டுரிமை நாம் கைவிடக் கூடாது. நாம் அவர்கட்கஞ்சி வாளாயிருந்து விட்டோம் என்ற வசைச் சொல்லுக்கு ஆளாகக் கூடாது. எங்ஙனமேனும் மேலைச் சளுக்கிய நாட்டில் உங்கட்கு உரிமை கிட்டவே வேண்டும்.

**விக்:** அதற்கென்ன செய்வது? தமையன்மேல் படையெடுத்துச் செல்வது அழகாமோ?

**பில்:** ஏன்? சளுக்க நாட்டில் உங்கள்பால் சார்ந்து வாதாடக் கூடியவர்கள் இல்லையா?

**விக்:** பலர் இருக்கின்றனர். ஆயினும் விஜயன் கொடுங்கோலன் ஆகி விட்டான். அவனை யெதிர்த்து

எவரும் பேச மாட்டார்கள். அஃதொன்றும் நலம் பயவாது.

பில் : அப்படியாயின் தக்க துணை சேர்த்துக்கொண்டு நன் முறையில் தூது விடுப்போம்.

விக் : அது தக்கதே. ஆனால் தக்க துணையாக யாரைக் கொள்வது ?

பில் : வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க் கழுவானேன் ? தங்கள் மாமன் சோழ மண்டலாதிபதி இருக்க, நீங்கள் கலங்குவானேன் ?

விக் : அன்பரே ! அவர்கள் கொண்டுள்ள கருத்து அதன் வழியாக உறுதிப்படும். சோழர்பால் நான் சேர்ந்து விட்டேன் என்பதுதானே அவர்களது முதற் குற்றச்சாட்டு. அப்படி யிருக்க, சோழர்வழி நாம் முயற்சிப்பது தக்கதன்று. தவிர, அவர்களிடம் நான் உதவிகோரி நிற்பதும் தக்கதன்று.

பில் : அப்படியாயின் நீங்கள் நேரிட அவர்களை உதவி கோர வேண்டா. நம் நண்பர் கோவா மன்னர் கதம்ப ஜயகேசி வழி முயற்சிப்பது நலமென நான் கருதுகிறேன்.

விக் : அது தக்கதே.

பில் : ஜயகேசி, சோழப் பேரரசரிடமும் அறிவித்துவிட்டு அவர் கட்டளையையும் தாங்கி நமக்காகத் தூது போகட்டும். இதன் வழியாக நன்முறையில் நம் உரிமையை நிலைநாட்டலாம்.

விக் : அப்படியே செய்யட்டும். விஜயன் ஒத்துவராவிடில் என் வன் திறமையால் என் உரிமையைப் பெறுவேன்.

பில் : நான் இன்றே கோவா நகர் சென்று ஜயகேசியிடம் தெரிவித்து, ஆவன செய்து வருகிறேன்.

விக் : அங்ஙனமே யாகட்டும்.

## களம் 4

# விக்கிரம சகம்

இடம்: கலியாணபுரம் அரண்மனை

காலம்: பகல்

நடிகர்: விஜயன், அமைச்சர்கள், விக்கிரமன், பில்ஹணர், கதம்ப ஜயகேசி, சோழநாட்டு அமைச்சர், பொதுமக்கள்.

விஜயன்: கோவா மன்னரே! தங்கள் வருகையால் எங்களைப் பெரிதும் பெருமைப் படுத்தி விட்டீர்கள். மிக்க வந்தனம், அவர்கள் யாவரோ?

ஜயகேசி: விஜயா! அவர் சோழநாட்டுத் தலையமைச்சர். சோழப் பேரரசர் வீர ராஜேந்திரரது ஆணையை மேற்கொண்டு என்னுடன் வந்துள்ளார்.

விஜ: அமைச்சரே! வருக! வருக! வந்தனம்.

ஜய: மற்றும் என்னுடன் தங்கள் இளவலும் கவிஞரும் வந்து புறத்தே தங்கி இருக்கின்றார்கள். அவர்கள் சார்பாகவே நாங்கள் தங்களைச் சந்திக்க வந்தோம்.

விஜ: தாங்கள் அறியாதது எதுவுமல்ல. விக்கிரமனுக்குரிய பகுதியை அவனுக்கு அளிக்கத் தடையொன்றும் கிடையாது. ஆனல், ஆனல், பொது மக்கள் அதனை யேற்றுக்கொள்ள வேண்டுமே?

ஜய: பொது மக்களைப் பற்றி நீ கவலைப்பட வேண்டா. விக்கிரமனது தலைமையைப் பொது மக்கள் விரும்பாவிடில் அதனை விட்டகன்றுவிட விக்கிரமன் சிறிதும் தயங்கமாட்டான். அவன் தன் தமையனாகிய உன்

பேரில் மனத்தாங்கல் கொண்டு போரிட்டு வாதிட்டுத் தன் பகுதியைப் பெற விரும்பவில்லை. மேலும் சளுக்கிய நாட்டில் தனக்குள்ள உரிமையையே வேண்டி நிற்கின்றான்.

**விஜ :** அது தவறல்லவே ?

**ஜய :** தவிர, அவனுக்கும் உற்ற துணையாகத் தலைவர் பலரும் அரசர் பலரும் உதவ முன் வந்துள்ளார்கள். ஆனால் பகைமை பாராட்டி வெற்றி கொள்ள விக்கிரமன் விரும்பவில்லை. சோழர் பேரரசரும் தன் சார்பாகத் தலையமைச்சரை யனுப்பியுள்ளார். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை. தமையன் தம்பி முறைமையைக் கைவிடாது ஒன்றி நின்று சளுக்கப் பேரரசைப் பெருக்குவீர்களாக.

**விஜ :** சளுக்க அமைச்சரே! பேரரசர்களும் திருவுளங் கொண்டு இங்கு விக்கிரமனைக் குறித்து வந்துள்ளார்கள். அவர்களைப் பெருமைப் படுத்த வேண்டுவது நம் கடமை.

**அமைச்சர் :** ஆம், அரசே! நாம் அவர் உரிமையைத் தடை செய்கிறோமா ? அவர்தான் ஒத்து வரவேண்டும்.

**ஜய :** அவர் ஒத்து வருவது பற்றி நீங்கள் கவலைகொள்ள வேண்டா. நடுவு நிலைமையாக யான் இவண் இருக்கிறேன். உங்கள் கருத்துப்படியே முடித்துக் கொள்வோம். அவ் ஏற்பாட்டிற்கு விககிரமன் ஒப்புக் கொள்வார். அஃது என்பாற்பட்டது.

**விஜ :** தங்கள் நியாயத்தையும் நடுவு நிலைமையையும் யான் நன்கறிவேன். தாங்களே முன் நிற்கும்பொழுது நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது ? நாட்டை இரு துண்டாடுவோம். ஒரு பகுதி என்னைச் சேரட்டும், மறு பகுதி விக்கிரமனைச் சேரட்டும். இருவரும் தனியரசாகவே அரசு செலுத்தி வருவோம்.

ஜய : அதனால் கெடுவதொன்றில்லை. அங்ஙனமே இருந்து வரலாம். காலம் நேரும்போது இருவரும் ஒன்று சேர்ந்து கொள்ளலாம்.

விஜ : வட பகுதி என்பாலிருக்கட்டும். தென் பகுதி விக்கிரமனைச் சேரட்டும். வட பகுதி சற்று நிலப் பரப்பு அதிகமுடையது. இருப்பினும் தென் பகுதியே செழிப்பானது. வட பகுதியை நான் விரும்பி நிற்கிறேன். தங்கள் முடிவுப்படி இசைந்து கொள் கிறேன்.

ஜயகேசி : உங்கள் விருப்பப்படியே யாகட்டும். இருவீரும் ஒரு தாயர்க்குச் சேய்கள். எவரிடம் அதிகமிருந் தாற்றான் என்? உங்கள் விருப்பப்படியே வடபகுதி தங்களைச் சாரட்டும். தென் பகுதியை விக்கிரமன் உவப்புடன் ஏற்றுக் கொள்வான். சோழ அமைச் சரே! உமது கருத்தென்னவோ?

சோ. அமை : தங்கள் கருத்தே என் முடிவும். அங்ஙனமே விக்கிரமனை இசைப்போம்.

ஜயகேசி : விக்கிரமனை அழைத்துவரச் செய்வாய். நீயே அவரை வரவேற்று உபசரித்து, எங்கள் கண்குளிர நீவிர் இருவீரும் ஒரே அரியணையில் அமர்ந்து காட்சி யளியுங்கள். நெடுநாளாக நாங்கள் இதைத்தானெதிர் பார்த்திருந்தோம்.

விஜயன் : அங்ஙனமே செய்வேன், அரசே! அமைச்சரே! அரச மரியாதைகளுடன் இளவலை அழைத்து வாருங் கள்.

[விக்கிரமனும் பில்ஹணரும் அவையில் நுழைகிறார்கள். அரசாங்கத்தில் பதவி வகிப் போர் எழுந்து நின்று வணங்குகின்றனர்.]

ஜயகேசி : விக்கிரமாதித்த அரசரே! பில்ஹணக் கவிஞரே! வருக, வருக. மேலைச் சளுக்க நாட்டின் தென்பகுதிக் கரசே! வருக, வருக. வடபகுதி வேந்தர் விஜயாதித்

தரும் தாங்களும், தங்கள் தந்தையார் அமர்ந்திருந்த அரியணையில் ஒருங்கமர்ந்து எங்களை மகிழ்விப்பீர் களாக!

**விஜயன் :** தம்பீ! கடந்ததை மறந்துவிடு, வருவாய்.

**விக்கிரமன் :** வந்தனம் அண்ணா!

[எல்லோரும் பாராட்டுக் கூற விஜயனும் விக்கிரமனும் அரியணையில் அமர்கிறார்கள்.]

**ஜயகேசி :** சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை. இதனை எப்பொழுதும் நினைவு கொள்ளுங்கள். உங்களை எவரும் அசைக்க முடியாது. மேலைச்சளுக்க வேந்தர்கள் நீடு வாழ்க!

**சோ. அமை :** மேலைச் சளுக்க வேந்தர்கள் நீடு வாழ்க!

**பில்ஹணர் :** வெற்றி விஜயன் வாழ்க! வீர சிங்க விக்கிர மாதித்தன் நீடு வாழ்க.

**ஜயகேசி :** ஒப்பற்ற உயரிய நாள். இந்த நாளில் சண்டை யின்றிச் சச்சரவின்றி பெருந்தன்மை பூண்ட விஜ யாதித்தனும் விக்கிரமாதித்தனும் இரு பகுதிகளுக்குத் தலைமை யேற்றார்கள். இந்த நன்னாளைக் குறிக்க இன்றிருந்து ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்று விப்போம். உலகுள்ளவரை அனைவரும் அதனை யறிந்து போற்றட்டும்.

**பில்ஹணர் :** விக்கிரமார்க்க சகம் வளர்ந்தோங்குக! விக்கிரமார்க்க சகம் வளர்ந்தோங்குக!!

**ஜய :** விக்கிரமனது உற்ற நண்பர் பில்ஹணக் கவிஞர் விருப்பப்படி அதனை 'விக்கிரமார்க்க சகம்' என்று எல்லோரும் கொள்வோமாக.

**விக்கிரமன் :** என்னைப் பெரிதும் பெருமைப் படுத்திய பில்ஹணக் கவி நீடூழி வாழ்க! இன்று தொடங்கி அவர் புகழ் உலகில் நிலைக்க ஏதாவதோர் உயர்ந்த

காவியம் இயற்றியருளும்படி அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

**பில்ஹணர் :** விக்கிரம அரசர் விருப்பப்படியே செய்வேனாக. அவர் சரிதத்தையே காவியமாக இயற்றி விடுகிறேன். எங்கள் இருவர் புகழும் ஒருங்க நிலைக்கட்டும். "விக்கிர மாங்க தேவ சரிதம்" என்னும் மாகாவியத்தை இன்றே நான் தொடங்குவேனாக.

**எல்லோரும் :** விஜயன் வாழ்க ! விக்கிரமன் வாழ்க !

**பில்ஹணர் :** விக்கிரமன் வாழ்க ! சோழ மாதேவி வாழ்க !

**எல்லோரும் :** நீடு வாழ்க ! நீடு வாழ்க !